# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 10, சித்ரபானு - திருவள்ளுவர் ஆண்டு 2034

## 2003 மார்ச் 24, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி"

கொடுக்கும் பண்பு, முகம் மலர்ந்து பேசல், நீதி தவறாத ஆட்சி, குடிமக்களைக் காத்தல் ஆகிய நான்கும் கொண்ட அரசு மற்ற அரசுகளுக்கெல்லாம் ஒளி விளக்கு போன்று விளங்கும்.

## 1. இரங்கற் குறிப்புகள்

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. பொ. முருகேசன் அவர்கள் 3-2-2003 அன்றும், திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம் அவர்கள் 1-3-2003 அன்றும், திரு. செ. இராமலிங்கம் அவர்கள் 9-3-2003 அன்றும் மறைவுற்றதை பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பொ. முருகேசன் அவர்கள் 1989 முதல் 1991 வரை மற்றும் 1996 முதல் 2001 வரை காஞ்சிபுரம் தொகுதியிலிருந்து இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம் அவர்கள் 1989 முதல் 1991 வரை, 1991 முதல் 1996 வரை மற்றும் 1996 முதல் 2001 வரை மேலூர் தொகுதியிலிருந்து தொடர்ந்து மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. செ. இராமலிங்கம் அவர்கள் 1971 முதல் 1976 வரை கடலாடி தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றியுள்ளார்.

இம்முன்னாள் உறுப்பினர்கள் மறைவினால் அவர்களை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

## 2. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 41, திரு. வி.ஆர். ராஜாங்கம், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**41—**

### பாலம் கட்டுதல்

***6598—திரு. வி.ஆர். ராஜாங்கம்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஒன்றியம், அய்யப்பநாயக்கன்பட்டி அருகில் தென்கரை வாய்க்கால் மீது பாலம் கட்டித்தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2003 மார்ச் 24

திரு. செ. இராமலிங்கம் அவர்கள் 1971 முதல் 1976 வரை கடலாடி தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றியுள்ளார்.

இம்முன்னாள் உறுப்பினர்கள் மறைவினால் அவர்களை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

## 2. வினாக்கள்-விடைகள்

**உடுக்குறியிட்ட வினாக்கள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 11, திரு. வி.ஆர். ராஜாங்கம், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**41—**

### பாலம் கட்டுதல்

***6598—திரு. வி.ஆர். ராஜாங்கம்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஒன்றியம், அய்யப்பநாயக்கன்பட்டி அருகில் தென்கரை வாய்க்கால் மீது பாலம் கட்டித்தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2003 மார்ச் 24]

பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கஜானா காலியாகிவிட்ட நிலையிலும் ஏழையெளிய மக்களுக்கு உதவிட எனது மனதில் என்றும் இடம் உண்டு என்று, எனது தொகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையான இந்தப் பாலம் கட்டும் பணியைப் பரிசீலனையில் எடுத்துக்கொள்வோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அரசு அறிவித்ததற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பு தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் இன்று எத்தனையோ திட்டங்களை நிறைவேற்றுகின்ற வேளையில் இந்தத் திட்டத்தையும் நிறைவேற்றித் தர மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான சோழவந்தானில் உள்ள குருவித்துறை வல்லவபெருமாள் கோயில், குரு கோயில் வைகைக் கரையில் அமைந்துள்ளது. தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் அங்கு வழிபாடு செய்து வருகிறார்கள். கடந்த காலத்தில் சாலை வசதி இல்லாமல் இருந்தது. தற்போது மாண்புமிகு இதயதெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு சாலைகளைப் புதுப்பித்துத் தந்துள்ளது. இங்கு செல்வதற்காக மாற்று வழி ஒன்று உள்ளது. அந்த மாற்று வழியில் ஒரு புதிய பாலத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டித் தந்தால் அங்குள்ள பக்தர்கள் செல்வதற்கு நெரிசல் இல்லாமல் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் எனது தொகுதியான....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. ராஜாங்கம், ஒரே பாலத்தோடு நில்லுங்கள்.

**திரு. வி.ஆர். ராஜாங்கம்:** சின்ன கோரிக்கை இருக்கிறது. அந்தப் பாலத்தோடு சேர்த்து ஒரு சிறிய கேள்வி. அதோடு, அலங்காநல்லூர், கேட்டுக்கடை அருகில் ஒரு பாலத்தையும், வாடிப்பட்டி யூனியன் அலுவலகத்தின் அருகில் ஒரு பாலத்தையும் கட்டித்தர வேண்டுகிறேன். 100 ஆண்டு காலத்திற்கு முன்னால் பாலங்கள் கட்டப்பட்டன. ஆகவே,

[2003 மார்ச் 24

தற்போது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் இவற்றைக் கட்டித் தர அமைச்சர் அவர்களை பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு பாலம் கேட்டு, 3 பாலங்களைக் கோரிக்கைகளாகக் கொடுத்து இருக்கின்றார்கள். வரும் நிதியாண்டில் அந்த 3 பாலங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 42, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**42—**

**சிமெண்ட் தளம்**

***13141—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்திலுள்ள கீழ்பவானி பாசன திட்ட வாய்க்காலில் சிமெண்ட் தளம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

தற்போது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் இவற்றைக் கட்டித் தர அமைச்சர் அவர்களை பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு பாலம் கேட்டு, 3 பாலங்களைக் கோரிக்கைகளாகக் கொடுத்து இருக்கின்றார்கள். வரும் நிதியாண்டில் அந்த 3 பாலங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 42, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**42—**

**சிமெண்ட் தளம்**

***13141—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்திலுள்ள கீழ்பவானி பாசன திட்ட வாய்க்காலில் சிமெண்ட் தளம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

2003 மார்ச் 24]

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்பவானி பாசன திட்டத்தின் மூலம் ஏறத்தாழ 3 இலட்சம் ஏக்கர் அளவில், ஈரோடு மாவட்டத்தில் மட்டும் அல்ல, கரூர் மாவட்டத்திலும்கூட பயன்பட்டு வருகிறது. இப்பெரிய திட்டத்தினால் அணையில் இருந்து திறக்கப்படுகின்ற தண்ணீர், முறையாக கடைமடை பகுதிகளுக்கெல்லாம் சென்று அறிவிக்கப்பட்ட நாட்களில் இருந்து பயிர் செய்யப்பட்டு பயிர் அறுவடை செய்யும் காலம் வரை அந்தத் தண்ணீர் வினியோகிக்கப்படுகின்ற நேரத்தில் முறையாக பாசனத்திற்கு சென்று அடைவதில்லை. மிக முக்கிய காரணம் அதற்குரிய அந்தக் கால்வாய், இடையிலே உடைப்பு ஏற்பட்டு இதனால் தண்ணீர் வீணாகி விடுகின்றது. செய்யப்பட்ட பயிர்களையும் உரிய முறையில் விவசாயிகளால் அறுவடை செய்ய முடியவில்லை. கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஒப்புதலின் பேரில் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டதாக அறிந்து இருக்கின்றேன். எனவே விரைவில் இந்த அரசு அதற்குரிய துரித நடவடிக்கை எடுத்து அங்கு இருக்கின்ற விவசாயிகளினுடைய நீண்ட நாள் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையில் உடனடியாக கான்கிரீட் தளம் அமைப்பதற்கு அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்தில் உள்ள கீழ்பவானி பாசன வாய்க்கால், காளிங்கராயன் வாய்க்கால், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை வாய்க்கால் முதலியவற்றைச் சீரமைக்கவும், பாசன மேம்பாடு குறித்தும் ஓர் உயர்மட்டக் குழு அரசால் அமைக்கப்பட்டது. அக்குழு இவ்வாய்க்கால்களை நிரந்தரமாகச் சீரமைத்துச் செப்பனிட ரூ.400 கோடி தேவை என அறிக்கையைச் சமர்ப்பித்தது. போதிய நிதி இன்மையால் இத்திட்டம் எடுத்துக்கொள்ளப் பெறவில்லை. தற்போது கர்நாடகம் மற்றும் தமிழ்நாடு மாநிலங்களுக்கு இடையே காவிரி சம்பந்தமாக வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால், இத்திட்டத்திற்கு உலக வங்கி நிதியுதவி செய்ய முன்வரவில்லை. எனவே, மேற்படி வழக்கு முடிவுக்கு வரப்பெற்றவுடன் கீழ்பவானி வாய்க்காலுக்கு சிமெண்ட் தளம் அமைக்கும் திட்டத்திற்கு உலக வங்கி, நபார்டு அல்லது ஹட்கோ வங்கியின் நிதியுதவி கிடைக்கப்பெற்றால், இத்திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[2003 மார்ச் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 43, திரு. எஸ். ஆஸ்டின், மாண்புமிகு நிதி அமைச்சர்.

43—

**தனித் தொகுதிகள்**

**•4728—திரு. எஸ். ஆஸ்டின்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தின் சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள தனித் தொகுதிகளை மாற்றியமைக்க தேர்தல் கமிஷனை அரசு கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை. தற்பொழுது மத்திய அரசால் அமைக்கப்பட்டுள்ள எல்லை மறுவரையறை கணக்கெடுப்பின்படி இப்பொருள் குறித்து முடிவு எடுக்கும்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மொத்தம் 45 சட்டமன்றத் தொகுதிகளும், 6 பாராளுமன்றத் தொகுதிகளும் தனித் தொகுதிகளாக இருந்து வருகின்றன. 1967-க்குப் பிறகு இந்தத் தொகுதிகள் மாற்றியமைக்கப்படாமல் கிட்டத்தட்ட 35 ஆண்டுகாலமாகத் தொடர்ந்து தனித் தொகுதிகளாகவே இருந்து வருகின்றன. எனவே, இந்த 45 சட்டமன்ற தொகுதிகள் மற்றும் இந்த 6 பாராளுமன்ற தொகுதிகளிலே தாழ்த்தப்பட்டோர் அல்லாத பொதுமக்கள் வேட்பாளராகப் போட்டியிடுவதற்கான வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்காமல் போகின்றது. அதைப்போல இந்தத் தொகுதிகளைத் தவிர்த்த பொதுத் தொகுதிகளிலேகூட தாழ்த்தப்பட்டவர்கள் போட்டியிடுவதற்கான வாய்ப்பு சரிவர கிட்டுவதில்லை. இருந்தாலுங்கூட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்கள், பொதுத் தொகுதியில்கூட தாழ்த்தப்பட்ட நபரை வேட்பாளராக போட்டியிடச் செய்து வெற்றிபெறச் செய்து இருக்கின்றார் என்பது (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 43, திரு. எஸ். ஆஸ்டின், மாண்புமிகு நிதி அமைச்சர்.

43—

**தனித் தொகுதிகள்**

**•4728—திரு. எஸ். ஆஸ்டின்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தின் சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள தனித் தொகுதிகளை மாற்றியமைக்க தேர்தல் கமிஷனை அரசு கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை. தற்பொழுது மத்திய அரசால் அமைக்கப்பட்டுள்ள எல்லை மறுவரையறை கணக்கெடுப்பின்படி இப்பொருள் குறித்து முடிவு எடுக்கும்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மொத்தம் 45 சட்டமன்றத் தொகுதிகளும், 6 பாராளுமன்றத் தொகுதிகளும் தனித் தொகுதிகளாக இருந்து வருகின்றன. 1967-க்குப் பிறகு இந்தத் தொகுதிகள் மாற்றியமைக்கப்படாமல் கிட்டத்தட்ட 35 ஆண்டுகாலமாகத் தொடர்ந்து தனித் தொகுதிகளாகவே இருந்து வருகின்றன. எனவே, இந்த 45 சட்டமன்ற தொகுதிகள் மற்றும் இந்த 6 பாராளுமன்ற தொகுதிகளிலே தாழ்த்தப்பட்டோர் அல்லாத பொதுமக்கள் வேட்பாளராகப் போட்டியிடுவதற்கான வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்காமல் போகின்றது. அதைப்போல இந்தத் தொகுதிகளைத் தவிர்த்த பொதுத் தொகுதிகளிலேகூட தாழ்த்தப்பட்டவர்கள் போட்டியிடுவதற்கான வாய்ப்பு சரிவர கிட்டுவதில்லை. இருந்தாலுங்கூட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்கள், பொதுத் தொகுதியில்கூட தாழ்த்தப்பட்ட நபரை வேட்பாளராக போட்டியிடச் செய்து வெற்றிபெறச் செய்து இருக்கின்றார் என்பது (மேசையைத் தட்டும் ஒலி)

2003 மார்ச் 24]

அவருடைய மிகப்பெரிய ஒரு துணிச்சலைத்தான் காட்டுகின்றது. ஆனால் சாதாரணமாக தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இதனால் பாதிப்பு இருக்கின்றது. தாழ்த்தப்பட்டோர் அல்லாதவருக்கும் இதனால் பாதிப்பு இருக்கின்றது. எனவே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்தத் தனித் தொகுதிகளை ஒரு குறிப்பிட்ட ஆண்டுகளுக்குள்ளாக மாற்றியமைக்க வேண்டும் என்கின்ற விதிகூட இருக்கின்றது. அதைப் பயன்படுத்தி—மத்திய அரசை வலியுறுத்தி அல்லது தேர்தல் கமிஷனை வலியுறுத்தி, இந்தத் தனித் தொகுதிகளை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்று கேட்டுக்கொள்வதோடு, இன்னும் ஓராண்டிலே நாடாளுமன்ற பொதுத் தேர்தல் வர இருக்கின்றது. இந்தத் தேர்தல் எந்த அடிப்படையில் நடைபெறும்? ஏற்கெனவே இருக்கக்கூடிய அடிப்படையில் நடைபெறுமா அல்லது அதற்கு முன்பாக இந்த தனித் தொகுதிகள் மாற்றியமைக்கப்படுமா? அதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசின் மூலமாகவோ அல்லது தேர்தல் கமிஷன் மூலமாகவோ எடுப்பதற்கு மாநில அரசு வலியுறுத்துமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991 ஆவது ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தொகுதிகளின் எல்லைகளை மாற்றியமைக்க மைய அரசு தேர்தல் ஆணையம் தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறது. தற்போது மைய அரசால் அமைக்கப்பட்டுள்ள எல்லை மறுவரையறை ஆணையத்தைப் பொறுத்தவரைக்கும் டிசம்பர் 2003-க்குள் தன்னுடைய குறிப்பை, முடிவினைத் தெரிவிக்க வேண்டுமென்று பணிக்கப்பட்டிருக்கிறது. 2004 ஆம் ஆண்டு நடக்கவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலை இப்படி மாற்றியமைக்கப்பட்ட மறுவரையறையையொட்டித்தான் நடத்த வேண்டும் என்ற கொள்கை முடிவினை மைய அரசு எடுத்திருக்கிறது. தொகுதிகள் மாற்றுவது குறித்த செய்தியும் அதில் பரிசீலனைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத் தொகுதிகளில் தனித் தொகுதிகள் எந்தவித அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன? அவ்வாறு ஒதுக்கீடு செய்யபபடும்

தொகுதிகளினுடைய கால அளவு எத்தனை ஆண்டுகள் என்பது நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்கள், Scheduled Tribes மக்கள், அந்த மக்களினுடைய எண்ணிக்கையினுடைய அதிக அளவினைப் பொறுத்து அது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதைத்தான் மீண்டும் ஆய்ந்து தற்போது அந்த எல்லை மறுவரையறையை, 2004 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் முடித்துவிட வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் மைய அரசினுடைய முடிவிற்கேற்ப தொகுதிகள் மாற்றியமைக்கப்படலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 தேர்தல்களில் இந்தத் தனித் தொகுதிகள் மாற்றப்படாமல் இருக்கின்றன. பொது வேட்பாளர்கள் போட்டியிட முடியாமல் போவதற்கும் ஒரு வாய்ப்பு இருக்கிறது. அதேநேரத்தில், ஒரு குறிப்பிட்ட தொகுதியிலே தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் இருக்கின்றபோது, மற்ற தொகுதிகளுக்கு அந்தப் பிரதிநிதிகளினுடைய வாய்ப்பு இல்லாமல் போகின்ற காரணத்தினாலே, இவற்றையெல்லாம் கருத்திலே கொண்டு, இப்போது தனித் தொகுதிகளை சுழற்சி முறையிலே மாற்றியமைப்பதற்கு, தனித் தொகுதிகளினுடைய எண்ணிக்கைக் குறையாமல், சுழற்சி முறையிலே மாற்றியமைப்பதற்கு மத்திய தேர்தல் ஆணையத்தை தமிழக அரசு வற்புறுத்துமா?

அதேநேரத்தில் சமீபத்திலே தமிழ்நாடு தேர்தல் அதிகாரிகூட ஓர் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார். அதில் தொகுதிகளினுடைய எல்லைகள் மாற்றியமைக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி தொகுதிகளினுடைய எல்லைகள் மாறறியமைக்கப்படுகின்ற நேரத்திலே மாநில அளவிலே அனைத்துக் கட்சி பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து, அதிலே எல்லைப் பகுதிகளை மாற்றியமைப்பது குறித்து முடிவு எடுப்பது பொருத்தமுடையதாக இருக்கும் என்ற அடிப்படையிலே அதை அமைப்பதற்கு ஒரு குழு அமைக்கப்படுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதேநேரத்திலே தேர்தல் ஆணையத்தினுடைய முக்கியப் பணியாக இருப்பது அடையாள அட்டை வழங்குவது. அந்த அடையாள

2003 மார்ச் 24]

அட்டையிலே மிகப் பெரிய குளறுபடி இன்னும் நடந்து கொண்டிருக்கிறது. பக்கத்து வீட்டிலே இருக்கக்கூடிய ஒரு பெண்ணினுடைய பெயர், அடுத்த வீட்டு ஆண் பெயர் கணவன் என்ற பெயரில் சேர்க்கப்பட்டிருக்கிற குளறுபடிகள் எல்லாம் இருந்து கொண்டிருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, அதைத் தனிக் கேள்வியாகப் போடுங்கள். இதைப் பற்றி மட்டும் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. ஜி. கே. மணி:** அவற்றையெல்லாம் தேர்தல் ஆணையம் சரிசெய்ய, ஒரு முறையான நெறிமுறைகளை வகுப்பதற்கு தமிழக அரசு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனித் தொகுதியை எப்படி எப்படி மாற்றுவது என்பதற்கு வரையறைகள் ஏற்கெனவே இருக்கின்றன. மக்கள் தொகையினுடைய அடிப்படையில், குறிப்பிட்ட அந்தச் சமுதாய மக்களுடைய எண்ணிக்கை சதவீதத்தின் அடிப்படையில் இது மேற்கொள்ளப்படுகிறது. இதையெல்லாம் தற்போது மேற்கொண்டிருக்கிற அந்தக் குழு பரிசீலித்து வருகிறது. டிசம்பர் 2003-க்குள் தங்களுடைய கருத்துரைகளை அவர்கள் கட்டாயம் மைய அரசுக்குத் தந்தாக வேண்டும். அந்த அடிப்படையில், நடக்கவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலை இந்தத் தொகுதிகளினுடைய மாற்றத்திற்குட்பட்டு நடத்த வேண்டுமென்ற முடிவில் அவர்கள் செயல்படுகிறார்கள். எனவே, தனித் தொகுதிகளை மாற்றி அமைப்பதும் அதில் உள்ளடங்கி இருக்கும். எனவே, அந்த நேரத்தில் இந்தப் பிரச்சினைகளை எல்லாம் இந்த மைய தேர்தல் ஆணையம் தீர்த்துவிடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1967-க்குப் பிறகு Delimitation Committee appoint செய்தும் இன்னும் இந்தத் தனித் தொகுதிகளினுடைய எல்லைகள் மாற்றியமைக்கப்படாமலேயே இருந்து கொண்டிருக்கின்றன. அதற்கான கால அளவு என்ன என்பதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள்கூட இங்கே கேட்டார்கள். 20 ஆண்டுகள் என்று கருதுகிறேன். சரியான ஆண்டுகள் எத்தனை என்பதை அமைச்சரவர்கள் அவைக்கு விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது தனித் தொகுதி

அல்லாத பகுதிகளிலேகூட ஒரே தொகுதியில், ஒரே ஊரில், ஒரு தெருவின், ஒரு பக்கம் ஒரு தொகுதிக்கும், மறுபக்கம் வேறு தொகுதிக்கும் சென்றுவிடக்கூடிய நிலை தமிழகத்திலேகூட பல தொகுதிகளிலே இருந்து கொண்டிருக்கிறது. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவை தேர்தல் ஆணையம் மூலம் இப்பொழுது நியமித்திருக்கிறீர்கள். அந்தக் குழுவினுடைய பங்களிப்பு என்ன, அது எதையெல்லாம் தீர்மானித்து மத்திய அரசுக்கு வலியுறுத்த இருக்கிறது? மாண்புமிகு அமைச்சரவர்கள் 2026 ஆம் ஆண்டு நடைபெறக்கூடிய நாடாளுமன்றத் தேர்தலில்தான் இப்பொழுது எடுக்கக்கூடிய Delimitation Committee உடைய முடிவு நடைமுறைக்கு வரும் என்று கூறுகிறார்கள். இத்தனை ஆண்டுக்காலம் இல்லாத, இப்பொழுது வஞ்சிக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த நிலையை மாற்றியமைப்பதற்கு, வருகிற ஆண்டில் வரக்கூடிய நாடாளுமன்றத் தேர்தலிலேயே இந்த Delimitation Committee உடைய பரிந்துரை செயல்படுத்தப்பட வேண்டுமென்று தமிழக அரசு, மத்திய அரசை வலியுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*(முற்பகல் 10-15)*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு இதுகுறித்து தேர்தல் ஆணையத்திற்குத் தெரிவிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனித் தொகுதிகளை மாறுதல் செய்வதோடு, நமது சட்டமன்றத் தொகுதிகள் இராஜதானியாக இருந்தபோது பிரிக்கப்பட்ட பின்னால், மக்கள் தொகை அதிகரித்ததன் அடிப்படையில் தொகுதிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு மத்திய அரசுக்கு நம்முடைய மாநில அரசு சிபாரிசு செய்யுமா? மக்கள் தொகையின் அடிப்படையில் ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு எத்தனை வாக்காளர்கள் இருக்க வேண்டுமென்று மாநில அரசு நிர்ணயம் செய்திருக்கிறதா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுடைய எண்ணிக்கையைப் பொறுத்தவரைக்கும் அந்த நிலை 2026 ஆம் ஆண்டு

2003 மார்ச் 24]

வரை தொடார வேண்டுமென்று ஒரு தடை விதிக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் இதை மத்திய அரசும், தேர்தல் ஆணையமும் அணுகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 44, திரு. ப. அரசன், மாண்புமிகு நிதி அமைச்சர்.

**44—**

**மாநில திட்டக் குழு**

***30383—திரு. ப. அரசன்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாநில திட்டக் குழுவில் விவசாயிகளின் பிரதிநிதிகளை சேர்க்கும் எண்ணம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாநில திட்டக் குழுவில் உறுப்பினர்களை நியமனம் செய்யும்பொழுது மேற்கூறிய கருத்தை அரசு ஆராயும்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவிலே திட்டக் குழுவை மாற்றியமைப்பதற்கான எண்ணம் அரசிடம் இருக்கிறதா? அப்பொழுது விவசாயிகளுடைய பிரதிநிதிகளை அதிலே சேர்ப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டக் குழு புதிதாக டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களைத் துணைத் தலைவராகக் கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளுடைய பிரதிநிதிகள் அதில் இடம் பெறுவது குறித்து அரசு ஒரு முடிவு எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2003 மார்ச் 24]

வரை தொடர வேண்டுமென்று ஒரு தடை விதிக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் இதை மத்திய அரசும், தேர்தல் ஆணையமும் அணுகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 44, திரு. ப. அரசன், மாண்புமிகு நிதி அமைச்சர்.

**44—**

**மாநில திட்டக் குழு**

***30383—திரு. ப. அரசன்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாநில திட்டக் குழுவில் விவசாயிகளின் பிரதிநிதிகளை சேர்க்கும் எண்ணம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாநில திட்டக் குழுவில் உறுப்பினர்களை நியமனம் செய்யும்பொழுது மேற்கூறிய கருத்தை அரசு ஆராயும்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவிலே திட்டக் குழுவை மாற்றியமைப்பதற்கான எண்ணம் அரசிடம் இருக்கிறதா? அப்பொழுது விவசாயிகளுடைய பிரதிநிதிகளை அதிலே சேர்ப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டக் குழு புதிதாக டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களைத் துணைத் தலைவராகக் கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளுடைய பிரதிநிதிகள் அதில் இடம் பெறுவது குறித்து அரசு ஒரு முடிவு எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில திட்டக் குழுவிலே விவசாயிகளுடைய பிரதிநிதிகள் இடம்பெறுவது என்பது மிக அவசியத் தேவையானதாகும். இதற்கு முன்பாக முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலேகூட விவசாயிகளைக் கொண்ட ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு அது செயல்படுத்தப்பட்டது. அதன்மூலமாக விவசாயிகளுடைய பிரச்சினைகளை எடுத்துச் சொல்வதற்கும், அவற்றின்மீது நிவாரணம் பெறுவதற்கும் மற்ற நடவடிக்கைகளுக்கும் அது உதவிகரமாக இருந்தது. ஆகவே, திட்டக் குழுவிலே விவசாயிகளுடைய பிரதிநிதிகளை இணைப்பதற்கான முயற்சியை அரசு மேற்கொள்வதோடு, விவசாயிகளைப் பிரதிநிதிகளாகக் கொண்ட உயர்மட்டக் குழுவையும் அமைத்து, நமது மாநில விவசாய அபிவிருத்திக்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டக் குழுவைப் பொறுத்தவரைக்கும் விவசாயத்திற்கு முக்கியத்துவம் தந்து, அதற்காகத்தான் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன், அகில உலக அளவிலே பிரசித்தி பெற்ற ஒரு விவசாய விஞ்ஞானியையே துணைத் தலைவராகப் போட்டிருக்கிறார்கள். விவசாயத் துறையைச் சார்ந்த பல விஞ்ஞானிகள் அதில் ஏற்கெனவே அடங்கியிருக்கிறார்கள். விவசாயிகளின் சார்பிலும் பிரதிநிதித்துவம் கொடுப்பதற்கு அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 45, திரு. துரை. கி. சரவணன். மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

TRUTH ALONE TRIUMPHS

**45—**

**நீதிமன்றக் கட்டடம்**

**•18348—திரு. துரை. கி. சரவணன்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் நகாத்தில் விரைவு நீதிமன்றத்திற்கு தனியாகக் கட்டடம் கட்டித்தா அரசு நிதி ஒதுக்கீடு செய்யுமா?

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில திட்டக் குழுவிலே விவசாயிகளுடைய பிரதிநிதிகள் இடம்பெறுவது என்பது மிக அவசியத் தேவையானதாகும். இதற்கு முன்பாக முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலேகூட விவசாயிகளைக் கொண்ட ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு அது செயல்படுத்தப்பட்டது. அதன்மூலமாக விவசாயிகளுடைய பிரச்சினைகளை எடுத்துச் சொல்வதற்கும், அவற்றின்மீது நிவாரணம் பெறுவதற்கும் மற்ற நடவடிக்கைகளுக்கும் அது உதவிகரமாக இருந்தது. ஆகவே, திட்டக் குழுவிலே விவசாயிகளுடைய பிரதிநிதிகளை இணைப்பதற்கான முயற்சியை அரசு மேற்கொள்வதோடு, விவசாயிகளைப் பிரதிநிதிகளாகக் கொண்ட உயர்மட்டக் குழுவையும் அமைத்து, நமது மாநில விவசாய அபிவிருத்திக்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டக் குழுவைப் பொறுத்தவரைக்கும் விவசாயத்திற்கு முக்கியத்துவம் தந்து, அதற்காகத்தான் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன், அகில உலக அளவிலே பிரசித்தி பெற்ற ஒரு விவசாய விஞ்ஞானியையே துணைத் தலைவராகப் போட்டிருக்கிறார்கள். விவசாயத் துறையைச் சார்ந்த பல விஞ்ஞானிகள் அதில் ஏற்கெனவே அடங்கியிருக்கிறார்கள். விவசாயிகளின் சார்பிலும் பிரதிநிதித்துவம் கொடுப்பதற்கு அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 45, திரு. துரை. கி. சரவணன். மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

TRUTH ALONE TRIUMPHS

**45—**

**நீதிமன்றக் கட்டடம்**

**•18348—திரு. துரை. கி. சரவணன்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் நகரத்தில் விரைவு நீதிமன்றத்திற்கு தனியாகக் கட்டடம் கட்டித்தர அரசு நிதி ஒதுக்கீடு செய்யுமா?

2003 மார்ச் 24]

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிதம்பரத்தில் செயல்பட்டு வரும் விரைவு நீதிமன்றம் சிதம்பரம் வழக்கறிஞர் சங்கக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. சென்னை உயர் நீதிமன்றத்தின் செயற்குறிப்பை ஏற்று இக்கட்டடத்திற்குத் தகுந்த மாறுதல்கள் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள ரூ.1,32,000 செலவினத்திற்கு இசைவளித்து அரசாணை (ப) எண் 1186, உள் துறை, நாள் 28-10-2002-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விரைவு நீதிமன்றம் கடந்த 2001 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடங்கப்பட்டது. அப்பொழுது இந்த விரைவு நீதிமன்றத்தின் செயல்பாடுகள் நடைபெறவேண்டுமென்பதற்காக வழக்கறிஞர்கள் சங்கம், அந்தச் சங்கக் கட்டடத்தில் இயங்குவதற்காக அந்தக் கட்டடத்தை ஒதுக்கிக் கொடுத்தார்கள். தற்போது அந்தக் கட்டடப் பணியை மேற்கொள்வதற்காக ரூ.1,32,000 ஒதுக்கியிருப்பதாக மாண்புமிகு சட்ட அமைச்சரவர்கள் அறிவித்துள்ளார்கள். அதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அதற்கு ஒரு தனிக் கட்டடம் கட்டித் தந்து அந்த வழக்கறிஞர்கள் சங்கம் மீண்டும் அந்தக் கட்டடத்திலே இயங்குவதற்கு அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் சிதம்பரத்திலே இரண்டு குற்றவியல் நீதிமன்றங்கள் இயங்கிவருகின்றன. இந்த இரண்டு குற்றவியல் நீதிமன்றங்களிலும் ஒரு நடுவரே தீர்ப்பினை வழங்கிக்கொண்டு வருகிறார். அதோடு சிதம்பரம் அருகிலே உள்ள பரங்கிப்பேட்டையிலுள்ள குற்றவியல் நீதிமன்றத்தையும் அவரே கூடுதல் பொறுப்பாகக் கவனித்து வருகிறார். இதனால் வழக்குகள் எல்லாம் தேங்கிவிடுகின்றன. எனவே இந்த மூன்று நீதிமன்றங்களுக்கும் தனி நீதிபதி நியமிப்பதற்காக அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வோர் ஆண்டும் வழக்குகளுடைய Institution of Cases என்று சொல்லும்போது, ஏறக்குறைய 4½ இலட்சம் வழக்குகள் — சென்னை உயர் நீதிமன்றத்தைத் தவிர்த்து வழக்குகள்—Institute செய்யப்படுகின்றன. அதாவது, வழக்குகள் நீதிமன்றத்திற்கு

[2003 மார்ச் 24

கொண்டுவரப்படுகின்றன. அதே நேரத்திலே உயர் நீதிமன்றத்தைப் பொறுத்தவரையிலே 1½ இலட்சம் வழக்குகள் - புதிய வழக்குகள் - ஒவ்வோர் ஆண்டும் வருகின்றன. எனவே வழக்குகளை விரைவாக விசாரித்து உரிய காலத்தில், உரிய வகையில் தீர்ப்பு சொல்லப்படவேண்டும். Justice delayed is justice denied. Therefore, justice should not be delayed என்கின்ற அடிப்படையில், காலந்தாழ்த்தி வழங்கப்பட்ட நீதி மறுக்கப்படுகின்ற நீதிக்குச் சமமாகும் என்கிற அந்தக் கருத்திற்கு ஏற்ப தாமதம் இருக்கக்கூடாது என்கிற அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உரிய வகையில் 49 விரைவு நீதிமன்றங்களை தமிழ்நாட்டிலே, வழக்குகளை விசாரித்து உடனடியாக தீர்ப்பு சொல்லப்படவேண்டுமென்ற கண்ணோட்டத்தோடு அமைக்க நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள். விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டிருப்பதன் நோக்கம் விரைவாகவே தீர்ப்பு சொல்லப்படவேண்டும் என்பதற்காகத்தான். எனவே அந்த அடிப்படையில் மொத்தம் 20,891 வழக்குகள் அந்த விரைவு நீதிமன்றங்களுக்கு அனுப்பப்பட்டு, அதிலே 3,214 வழக்குகள் தற்போது முடிக்கப்பட்டிருக்கின்றன. எனவே அந்த விரைவு நீதிமன்றங்கள் ஐந்தாண்டு காலத்திற்குள் எல்லா வழக்குகளையும் quick-ஆக dispose செய்யவேண்டும் என்கிற நோக்கத்தோடுதான் செயல்பட்டு வருகின்றன. எனவே ஐந்தாண்டுகளுக்குப் பிறகு இந்த வழக்குகள் எண்ணிக்கை குறையும்போது அப்படி குறைந்துவிட்ட சூழ்நிலையிலே மீண்டும் அதை நீட்டிக்க வேண்டிய அவசியம் இல்லை. அப்படி வழக்குகள் அதிகமாக வருகின்ற சூழ்நிலையிலே அந்த நீதிமன்றங்களைப் புதிதாக அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நிச்சயமாக எடுக்கலாம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். காலியாக உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களுக்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்த நியமனம் குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நீதித் துறையில் பல்வேறு மட்டங்களில், நீதிபதிகளும் பணியாளர்களும் இல்லை என்கிற நிலை எழுந்திருக்கிறது. இன்றைக்கு கடுமையான நிதி நெருக்கடி இருந்தாலுங்கூட, இந்த

2003 மார்ச் 24]

நெருக்கடிகளையெல்லாம் சமாளித்து பல்வேறு நலத் திட்டங்களைச் செய்துகொண்டிருக்கிற இந்த அரசு, நீதித் துறையிலும் போதுமான அளவிற்கு நீதிபதிகள், பணியாளர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2000-2001ஆம் ஆண்டைப் பொறுத்தவரையிலே 140 கோடி ரூபாய் நீதித் துறைக்கு ஒதுக்கப்பட்டது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடன் நீதித் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்ற மனப்பான்மையோடு அரசுக்குக் கடுமையான நிதி நெருக்கடி இருக்கின்ற சூழ்நிலையிலுங்கூட 170 கோடி ரூபாய் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள். கிட்டத்தட்ட 1½—2 ஆண்டு காலத்தில் 30 கோடி ரூபாய் அளவிற்கு—அதிகமான அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். எல்லாவற்றையும் ஒரே நாளில் செய்வது என்பது நிச்சயமாக முடியாது. எனவே படிப்படியாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதி நிலைமைக்கேற்ப உயர் நீதிமன்றத்தினுடைய கருத்துருக்கள் அரசுக்கு வரும்போது எல்லாம் தாயுள்ளத்தோடு பரிசீலித்து நல்ல முடிவை எடுத்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களால் Justice delayed is justice denied என்ற கருத்து எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. இன்று தமிழகத்தினுடைய உயர் நீதிமன்றத்தினுடைய நீதிபதிகள்கூட போதுமான அளவிற்கு இந்த நீதித் துறையைப் பராமரிப்பதற்கு Infrastructures கொடுக்கப்படவில்லை என்ற குறைபாட்டை எடுத்துச்சொல்லி, இந்த நிலை நீடிக்குமேயானால் நீதிமன்றங்களை இழுத்துப் பூட்ட வேண்டிய நிலை ஏற்படும் என்ற அளவிற்குக் கருத்தைச் சொல்லியிருக்கிற காரணத்தினாலே, அங்கே தேங்கிக் கிடக்கிற வழக்குகளை — அமைச்சர் அவர்களே 20 ஆயிரத்திற்கும் அதிகமான வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன என்று எடுத்துச் சொன்னார்—உடனடியாகப் பரிசீலித்து அதற்கு நல்ல முடிவுகளை ஏற்படுத்துவதற்கு Special நீதிமன்றங்களை, இந்த வழக்குகளை விசாரித்து முடிப்பது என்ற

ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்து முடிப்பதற்காக நியமனம் செய்து இன்று தேங்கிக் கிடக்கின்ற வழக்குகளை ஒரு நல்ல முடிவுக்குக் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அகில இந்தியக் கட்சியைச் சார்ந்தவர். Infrastructure என்று சொல்லும்போது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அகில உலகக் கட்சி.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** அகில உலகக் கட்சியைச் சார்ந்தவர். Infrastructure என்று சொல்லும்போது Constitution and construction— கட்டடம் கட்ட வேண்டும், கட்டப்படுகிற கட்டடத்திற்குப் பராமரிப்பு செய்ய வேண்டும். அதேநேரத்தில் புதிதாக நியமனம் செய்ய வேண்டும். கட்டடங்களைக் கட்டி பராமரிப்பு செய்யப்பட வேண்டும் என்று சொல்லும்போது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மத்திய அரசாங்கத்திற்கு ஒரு கருத்துரு 140 கோடி ரூபாய்க்கு—நான் என்னுடைய கருத்தை ஏற்கெனவே பல தடவை இந்த மாமன்றத்தில் தெரிவித்து இருக்கிறேன்—அனுப்பப்பட்டு 50% அளவிற்கு நாம் இங்கே அவர்கள் கொடுக்கிற அந்த matching grant-ஐ match செய்யலாம் என்று சொல்லியுங்கூட, இரண்டு நினைவூட்டுக் கடிதங்கள் அனுப்பியும்கூட அவர்கள் இன்னும் பதில் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட பாராளுமன்றத்தில் இதை கவனத்திற்குக் கொண்டு வந்தால் நிச்சயமாக அரசுக்கும் அது உதவியாக இருக்கும். எனவே நியமனங்களைப் பொறுத்தவரை நான் சொல்லியிருக்கிறேன். அதனுடைய அவசியம், அத்தியாவசியத் தன்மை அத்தனையும் உணர்ந்து நிச்சயமாக நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு பரிசீலித்து நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைத் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதேநேரத்தில் வழக்குகளுடைய தேக்கம் என்று சொல்லும்போது இந்தியாவிலேயே நாம்தான் வழக்குகளை விரைந்து முடிக்கின்ற அந்தச் சூழ்நிலையில் இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 46, திரு. எஸ்.எம். சீனிவேல், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

2003 மார்ச் 24]

**46—**

**பணியிடம் மாறுதல்**

**•5487—திரு. எஸ்.எம். சீனிவேல்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயில்கள் நிர்வாகத்திலுள்ள பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களை ஒரு கோயில் பள்ளியிலிருந்து இன்னொரு கோயில் பள்ளிக்கு மாறுதல் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒவ்வொரு திருக்கோயில் நிர்வாகத்தின்கீழ் இயங்கிவரும் பள்ளிகளுக்குத் தனித் தனியாக நிர்வாகக் குழு உள்ளது. ஆகவே, ஒரு திருக்கோயில் பள்ளியிலிருந்து இன்னொரு திருக்கோயில் பள்ளிக்கு ஆசிரியர்களை மாறுதல் செய்ய இயலாது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.எம். சீனிவேல்:** அம்மாவின் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறையின் கீழ் பள்ளிக்கூடங்கள் நிறைய உள்ளதால் ஆசிரியர்களை மாற்றி அமைத்திட, உத்தரவிட அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின் கீழுள்ள திருக்கோயில்களால் 23 பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அப்பள்ளிகளில் 416 ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். ஒவ்வொரு திருக்கோயிலால் நடத்தப்படும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் அத்திருக்கோயில் பணியாளர்களாகவே கருதப்படுகின்றனர். ஒரு திருக்கோயில் பணியாளர்களை மற்றொரு திருக்கோயிலுக்கு பணிமாற்றம் செய்ய இயலாது. அதேபோன்று ஒரு திருக்கோயிலுக்குச் சொந்தமான பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களை மற்றொரு திருக்கோயிலுக்குச் சொந்தமான பள்ளிக்கு இடமாற்றம் செய்ய இயலாது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2003 மார்ச் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோயில் நிர்வாகத்திலுள்ள பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் ஏதாவது தவறு செய்வார்கள் என்று சொன்னால் வேறு இடத்திற்கு மாற்றுவது போன்ற ஓர் உத்தரவைத்தான் பிறப்பிக்க வேண்டி இருக்கும். ஆகவே ஒரு கோயில் நிர்வாகத்திலிருந்து இன்னொரு கோயில் நிர்வாகத்திற்கு இல்லை என்று சொன்னாலும், கோயில் நிர்வாகத்திலிருந்து ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணியாற்றுவதற்கான ஓர் ஏற்பாடு செய்யப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு நிர்வாகம், தனிப்பட்டது. அது வேறு நிர்வாகம். மாற்றம் செய்வதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பாக நடைபெறுகிற பள்ளிகளைப் பொறுத்தவரை இடமாறுதல் பண்ண இயலாது என்று கூறியிருக்கிறார். அப்படியென்றால் காலியாக உள்ள பணியிடங்களை இந்த ஆண்டு நிரப்புவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதியோடு, கூடிய விரைவில் காலியாக உள்ள பணியிடங்களுக்கு ஆசிரியர்கள் நிரப்புவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 47, திரு. பி.எஸ். அருள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

2003 மார்ச் 24]

**47—**

## மகளிர் கலைக் கல்லூரி

***6696—திரு. பி.எஸ். அருள்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, லால்புரத்தில் மகளிர் அரசு கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசின் தற்போதைய கொள்கையின்படி அரசு கலைக் கல்லூரிகள் பல்கலைக்கழகங்களின் உறுப்புக் கல்லூரிகளாக Constituent Unit ஆக மாற்றப்பட்டுள்ளன. இதன்படி கல்லூரிகளை நடத்துகின்ற முழு பொறுப்பும் பல்கலைக்கழகங்களையே சார்ந்திருக்கிறது. இதுபோன்று தேவையின் அடிப்படையில் புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை நிறுவும் அதிகாரம் அந்தந்தப் பகுதி பல்கலைக்கழகங்களுக்கே உரியது. தற்போதுள்ள பல்கலைக்கழக நிதி நெருக்கடியில், லால்புரத்தில் மகளிர் அரசு கலைக்கல்லூரி தொடங்குவதற்கான வாய்ப்பில்லை.

முற்பகல் 10-30

**திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரத்திலிருந்து சுமார் 6 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சி. முட்லூர் கிராமத்தில் அரசு கலைக் கல்லூரி ஒன்று இயங்கி வருகிறது. அந்தக் கலைக் கல்லூரியில் ஆண், பெண் இருபாலரும் சேர்ந்து படிக்கின்ற ஒரு நிலை இருந்து வருகிறது. அந்தக் கல்லூரி தொடங்கப்பட்ட 1987-லிருந்து, 1988, 1989 ஆண்டுகளைத் தவிர மற்ற ஆண்டுகளில் அந்தக் கலைக் கல்லூரியை காவல் துறையினரை வைத்துக்கொண்டுதான் தினந்தோறும் நடத்துகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்கு முக்கிய காரணம், அது கிராமப் பகுதியிலே அமைந்திருக்கிற காரணத்தினாலும், அங்கு மாணவர்களுக்குள் ஏற்படுகின்ற பல பிரச்சினைகளினாலும், மாணவியர்களுடைய கல்வித் தரம் அங்கே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், அக்கல்லூரி கிராமப்புறத்திலே அமைந்திருந்ததாலும், சிதம்பரம் அரசு கலைக் கல்லூரி என்றுதான் அதற்குப் பெயரிடப்பட்டுள்ளது. எனவே, லால்புரம் கிராமத்தில் சிதம்பரம் நகராட்சிக்குச் சொந்தமான 60 ஏக்கர் நிலம்,

[2003 மார்ச் 24

தரிசு நிலம் அங்கு இருக்கின்ற காரணத்தினால், இந்த அரசு மறுபரிசிலனை செய்து தனியாக மகளிர் கல்லூரி அமைப்பதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளே இல்லாத பின்தங்கிய பகுதி, பெண்கள் கல்விக்கு முன்னுரிமை, ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, தேவையின் அடிப்படையில் அந்தப் பல்கலைக்கழகங்களே புதியதாக கல்லூரிகளைத் தொடங்குவதற்கு வாய்ப்பிருக்கிறது. அல்லது அரசின் நிதியுதவியின்றி சுயநிதி அடிப்படையில் மகளிர் கல்லூரி தொடங்க அனுமதி கோரும் விண்ணப்பங்கள், தனியார் கல்வி முகமைகளிடமிருந்து பெறப்பட்டால், அரசினுடைய பொறுப்பு, அரசினுடைய கடமை, தடையின்மைச் சான்று வழங்குவது மட்டும்தான். எனவே, அப்படிப்பட்ட கோரிக்கைகள் பெறப்படுகின்றபோது, அவற்றின் தகுதி அடிப்படையில் தடையின்மைச் சான்று வழங்குவது குறித்து அரசு நிச்சயமாக பரிசிலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 48, திரு. கி. பாரிமோகன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**48—**

**விடுதிகள்**

**•7849—திரு. கி. பாரிமோகன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதியில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்கீழ் இயங்கும் விடுதிகள் எத்தனை?

(ஆ) எந்தெந்த விடுதிகள் வாடகைக் கட்டடங்களில் இயங்குகின்றன? சொந்தக் கட்டடத்திற்கு அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தருமபுரி தொகுதியில் 6 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளும், 5 மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளும் ஆக மொத்தம் 11 விடுதிகள் இயங்குகின்றன.

TRUTH ALONE TRIUMPHS

தரிசு நிலம் அங்கு இருக்கின்ற காரணத்தினால், இந்த அரசு மறுபரிசிலனை செய்து தனியாக மகளிர் கல்லூரி அமைப்பதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளே இல்லாத பின்தங்கிய பகுதி, பெண்கள் கல்விக்கு முன்னுரிமை, ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, தேவையின் அடிப்படையில் அந்தப் பல்கலைக்கழகங்களே புதியதாக கல்லூரிகளைத் தொடங்குவதற்கு வாய்ப்பிருக்கிறது. அல்லது அரசின் நிதியுதவியின்றி சுயநிதி அடிப்படையில் மகளிர் கல்லூரி தொடங்க அனுமதி கோரும் விண்ணப்பங்கள், தனியார் கல்வி முகமைகளிடமிருந்து பெறப்பட்டால், அரசினுடைய பொறுப்பு, அரசினுடைய கடமை, தடையின்மைச் சான்று வழங்குவது மட்டும்தான். எனவே, அப்படிப்பட்ட கோரிக்கைகள் பெறப்படுகின்றபோது, அவற்றின் தகுதி அடிப்படையில் தடையின்மைச் சான்று வழங்குவது குறித்து அரசு நிச்சயமாக பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 48, திரு. கி. பாரிமோகன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**48—**

**விடுதிகள்**

**•7849—திரு. கி. பாரிமோகன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதியில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்கீழ் இயங்கும் விடுதிகள் எத்தனை?

(ஆ) எந்தெந்த விடுதிகள் வாடகைக் கட்டடங்களில் இயங்குகின்றன? சொந்தக் கட்டடத்திற்கு அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தருமபுரி தொகுதியில் 6 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளும், 5 மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளும் ஆக மொத்தம் 11 விடுதிகள் இயங்குகின்றன.

2003 மார்ச் 24]

(ஆ) தருமபுரி தொகுதியில் கீழ்க்கண்ட 7 விடுதிகள் தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்குகின்றன:

1. அரசு பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவியர் விடுதி, தருமபுரி.

2. அரசு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி, தருமபுரி நகரம்.

3. அரசு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி, கோணங்கி நாயக்கன்ஹள்ளி.

4. அரசு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி, கிருஷ்ணபுரம்.

5. அரசு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி, கடத்தூர்.

6. அரசு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி, தொப்பூர்.

7. அரசு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி, தருமபுரி.

இவ்விடுதிகளுக்குச் சொந்த நிலங்கள் கிடைப்பதைப் பொறுத்தும், அரசின் நிதிநிலைமையைப் பொறுத்தும், சொந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் நிதியாண்டிலே ஆதிதிராவிடர் விடுதிக்கும், பிற்படுத்தப்பட்டோர் விடுதிக்கும் தலா 12 இலட்சம், சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ஒதுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. அந்த வகையிலே, தருமபுரி தொகுதியிலே தலா 12 இலட்சம் இரண்டு விடுதிகளுக்கு ஒதுக்கப்பட்டது. அதிலே ஆதிதிராவிடர் நல விடுதி கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல, தருமபுரி நகரத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்ற பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்கு 12 இலட்சம் ஒதுக்கப்பட்டு இன்று வரை இடத் தேர்வின் காரணமாகவோ அல்லது என்ன காரணமாகவோ இன்னும் அந்தப் பணி தொடங்கப்படாமல் உள்ளது. ஆகவே, அந்த மாணவர் விடுதிக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற அந்தத் தொகை, அதைப்போல அரசின் மூலமாக வருகின்ற தொகையை வைத்து அந்த விடுதி கட்டப்படுவதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணம் ஒதுக்கியிருப்பதாக உறுப்பினர் அவர்கள்

சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் அத்தனையையும் இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள் கட்டி முடிக்க உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த அடிப்படையிலே இந்த ஆண்டில், இப்போது மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 49, திரு. சோ. இராசேந்திரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**49—**

**நிவாரணத் தொகை**

***19713—திரு. சோ. இராசேந்திரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) படித்து முடித்து வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள இளைஞர்களுக்கு வேலையில்லாக் கால நிவாரணத் தொகை மீண்டும் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) படித்து முடித்துவிட்டு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்திருக்கின்ற இளைஞர்களுக்கு வேலையில்லாக் கால நிவாரணத் தொகை வழங்குகின்ற செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எனவே, இவ்வினா எழ இடமில்லை.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்ட இளைஞர்களுக்கு நிவாரணத்

சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் அத்தனையையும் இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள் கட்டி முடிக்க உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த அடிப்படையிலே இந்த ஆண்டில். இப்போது மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 49, திரு. சோ. இராசேந்திரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**49—**

**நிவாரணத் தொகை**

***19713—திரு. சோ. இராசேந்திரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) படித்து முடித்து வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள இளைஞர்களுக்கு வேலையில்லாக் கால நிவாரணத் தொகை மீண்டும் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) படித்து முடித்துவிட்டு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்திருக்கின்ற இளைஞர்களுக்கு வேலையில்லாக் கால நிவாரணத் தொகை வழங்குகின்ற செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எனவே, இவ்வினா எழ இடமில்லை.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்ட இளைஞர்களுக்கு நிவாரணத்

2003 மார்ச் 24]

தொகை வழங்குவது குறித்த கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லையென்று அறிவித்துள்ளார்கள். படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்துவிட்டு வேலைவாய்ப்பிற்காக எதிர்நோக்கியிருக்கின்ற இந்த நேரத்திலே அவர்களுக்குப் பல்வேறு காலகட்டங்களிலே எழுகின்ற சில பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும்வண்ணம் அவர்களுக்கான நிவாரணத் தொகையை வழங்குவதற்கு அரசு கவனம் செலுத்தி, வழங்குவதற்குத் தேவையான முயற்சிகளை எடுக்குமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்து முடித்துவிட்டு பதிவுசெய்து இருப்பவர்களில் கண் பார்வையற்ற பதிவுதாரர்களுக்கு இப்போது நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. அதற்காக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இந்த ஆண்டு 30 இலட்சம் ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்து முடித்துவிட்டு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் இதுவரை பதிவு செய்திருக்கின்ற இளைஞர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு? இப்பொழுது வேலைவாய்ப்பே இல்லாமல் இருக்கின்ற காரணத்தால் பதிவு செய்துவிட்டு பல்லாண்டு காலமாக காத்திருக்கின்ற இளைஞர்களுக்கு ஏதேனும் மறுவாழ்வளிக்க அரசு முன்வருமா? அல்லது மத்திய அரசாங்கம் 1 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கிறது என்று சொல்லியிருப்பதைப்போல இந்த அரசில் வேலைவாய்ப்பு அளிப்பதற்கான திட்டம் ஏதேனும் உள்ளதா என்பதைத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்து முடித்துவிட்டு வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே இதுவரை 50,82,966 பேர் பதிவு செய்திருக்கிறார்கள். இவர்களிலே மெட்ரிகுலேஷன் முடித்துவிட்டு 13,01,134 பேர்களும் Pre—University, H.S.C., படித்தவர்கள் 9,79,414 பேர்களும், டிப்ளமா முடித்தவர்கள் 3,93,437 பேர்களும் பட்டப் படிப்பு படித்தவர்கள் 5,42,393 நபர்களும், முதுநிலைப் பட்டதாரிகள் 1,66,588 பேர்களும்,

எஸ்எஸ்எல்சி.-க்கு கீழே—below எஸ்எஸ்எல்சி.–பதிவுசெய்தவர்கள் சுமார் 17 லட்சம் பேர்களும், ஆக மொத்தம் 50,82,966 பேர்கள் பதிவு செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதல்வர் மறைந்த தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழகத்தினுடைய ஆட்சி அதிகாரத்திலே இருந்தபோது 1981 ஆம் ஆண்டு தமிழகத்திலே வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்து வேலையில்லாமல் இருக்கக்கூடிய இளைஞர்களுக்கு 5 ஆண்டு மூப்பின் அடிப்படையிலே வேலையில்லாக் கால நிவாரணம் என்பது வழங்கப்பட்டிருந்தது. இப்பொழுது இந்தியாவினுடைய ஒரு மாநிலமாக இருக்கக்கூடிய மேற்கு வங்க மாநிலத்திலும் வேலையில்லாக் கால நிவாரணம் என்பது இளைஞர்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. பல்வேறு வளர்ச்சியடைந்த நாடுகளிலும் வேலையில்லாக் கால நிவாரணம் என்பது வழங்கப்படக்கூடிய காரணத்தினால், தமிழகத்திலும் எம்.ஜி.ஆர். அவர்களால் வழங்கப்பட்ட வேலையில்லாக் கால நிவாரணம் என்பது மீண்டும் வழங்கப்படுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இப்படி வழங்கப்பட வேண்டுமென்று உத்தரவு இடப்பட்டு தொடர்ந்து வழங்கப்பட்டு வந்தது. அப்போது வேலையில்லாமல் பதிவு செய்தவர்களுடைய எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தது. மொத்தம் சுமார் 7 இலட்சம் பேர்கள்தான் அன்றைக்குப் பதிவு செய்திருந்தார்கள். அவர்களுக்கு வழங்குவதற்கு ஏறத்தாழ 74 கோடி ரூபாய் அரசினுடைய பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இப்பொழுது 50 இலட்சம் பேர் பதிவு பெற்றிருக்கிறார்கள் என்பதால், அதை வழங்குவதற்கான வாய்ப்புகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சி. கருணாகரன்.

2003 மார்ச் 24]

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேலையில்லாத் திண்டாட்டம் என்பது சமூகத்தினுடைய மிகப் பெரிய தொற்றுநோயாக தீவிரப்பட்டு வருகிறது. அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் 50 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் பதிவு செய்து கொண்டிருக்கின்றார்கள். வேலை தேடித் தரும் ஸ்தாபனங்கள், வேலையில் இல்லாதோரின் கணக்கைச் சொல்கிற ஸ்தாபனங்களாக இப்போது இருந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, இந்த 50 இலட்சம் பேர்களுக்கும் நிவாரணம் என்பது சாத்தியம் இல்லாவிட்டாலுங்கூட இதை வகைப்படுத்தி எத்தனை ஆண்டுகளாக, எவ்வளவு பேர் பதிவு செய்திருக்கிறார்கள்; என்று பார்த்து, அவர்களில் மிகவும் வறிய நிலையிலே இருக்கிறவர்களைப் பிரித்து எடுத்து அடையாள பூர்வமாகவாவது இந்த அரசு இந்த நிவாரணத் தொகையைக் கொடுப்பது என்பது வேலையில்லாத இளைஞர்கள்மீது பரிவும் கருணையும் காட்டுகிற அடிப்படையிலே அது இருக்கும். அவ்வாறு செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலையில்லாமல் பதிவு செய்திருக்கின்ற நபர்களுக்கு எல்லாம் தகுதியான பயிற்சியை அளித்து, அவர்களே வேலை தேடிக்கொள்ளக்கூடிய அளவிற்கு சிறந்த பயிற்சிகளை ஒவ்வொரு வேலைவாய்ப்பு அலுவலகத்திலும் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய ஆலோசனையின்படி நாங்கள் அளித்துக் கொண்டிருக்கிறோம். அந்தப் பயிற்சியைப் பெறுகிறவர்கள், தாங்களே வேலையைப் பெறக்கூடிய வாய்ப்பையும் பல்வேறு வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாகப் பெற்று வருகிறார்கள்.

அதோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வறியவர்களைப் பிரித்து, அவர்களுக்கு அரசு உதவுமா என்று கேட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் பார்வையற்ற பதிவுதாரர்களுக்குத் தொடர்ந்து நிவாரணத்தை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 50, திருமதி சி.எம். சூரியகலா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

[2003 மார்ச் 24

50—

**தென்னைப் பாதுகாப்பு**

***4088—திருமதி சி.எம். சூரியகலா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதியில் உள்ள தென்னை மரங்களை எரியோபைட் நோய் தாக்கியுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தென்னை பயிரிடும் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(இ) தென்னையில் இந்த நோய் வராமல் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) குடியாத்தம் தொகுதியில் தென்னையில் எரியோபைட் சிலந்திப் பூச்சித் தாக்குதல் உள்ளது.

(ஆ) மற்றும் (இ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மூலம் தென்னை மரத்தைச் சுற்றி நுண்ணூட்டச்சத்து இடுதல் மற்றும் தென்னை மரங்களில் தெளிப்பான் மூலம் தாவரப் பூச்சிக் கொல்லிகளை மூன்று முறை தெளித்தல் முதலிய தொழில்நுட்பங்கள் அடங்கிய முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்பட்டு உள்ளது. இத்திட்ட முடிவின் அடிப்படையில் அனைத்து விவசாயிகளும் பயன்பெறும் வகையில் மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதன்மைத் துறையாக விவசாயத்தை மாற்றி, பஞ்சம் தீர்க்க வந்த பண்பரசி, எங்கள் இன்னல் தீர்க்க வந்த விண்ணரசி, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, வேரில் நீர் எடுத்து, தலையால் தரும் தனிச் சிறப்பு பெற்ற தென்னை மரங்கள், ஏழை எளியோரின் இனிய பானமான இளநீரையும், எந்நாளும் மருந்தாகும் தேங்காயும், நலிந்தோர் குடியிருப்புகளை நாளும் காத்திடும் கூரையையும் தருகின்றன.

2003 மார்ச் 24]

ஆண்டுக்கு பல இலட்சம் ரூபாய் வருவாய் தரும் இப்படிப்பட்ட தென்னை மரங்கள் தமிழகத்தின் வடபகுதிகளில், வேலூர் மாவட்டத்தில் அதிகம் உள்ளன. குடியாத்தம் விவசாயிகளில் 80 சதவீதம் பேர் தென்னை வைத்திருக்கிறார்கள். இந்த மரங்கள் எரியோபைட் பூச்சியால் தாக்கப்பட்டு, விவசாயிகள் நஷ்டம் அடைந்திருப்பதைக் கவனத்தில் கொண்டு, அவர்களுக்குப் பயிர்ப் பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ள வழங்கப்படும் மானியத் தொகையை அரசு உயர்த்துமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எரியோபைட் சிலந்தி காற்றின் மூலம் பரவுகிற ஒரு நோய். இதனை முழுமையாகக் கட்டுப்படுத்த இதுவரை மருந்து எதுவும் கண்டுபிடிக்கப்படாத நிலையில், அந்தந்த மாநிலங்களுக்கு ஏற்ற முறையில் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்து வரப்படுகின்றன என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 51, திரு. எம். ராம்குமார், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

51—

**பாலர் பள்ளி**

***6717—திரு. எம். ராம்குமார்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, கொரநாட்டுக்கருப்பூர், மஞ்சமாவடி கிராமத்தில் பாலர் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்கு உட்பட்ட கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தில் கொரநாட்டுக்கருப்பூர் ஊராட்சிலே உட்கிராமமாக இருக்கின்ற இந்த மஞ்சமாவடி கிராமம் ஏறக்குறையை 750 பேர்கள் மக்கள்தொகை

2003 மார்ச் 24]

ஆண்டுக்கு பல இலட்சம் ரூபாய் வருவாய் தரும் இப்படிப்பட்ட தென்னை மரங்கள் தமிழகத்தின் வடபகுதிகளில், வேலூர் மாவட்டத்தில் அதிகம் உள்ளன. குடியாத்தம் விவசாயிகளில் 80 சதவீதம் பேர் தென்னை வைத்திருக்கிறார்கள். இந்த மரங்கள் எரியோபைட் பூச்சியால் தாக்கப்பட்டு, விவசாயிகள் நஷ்டம் அடைந்திருப்பதைக் கவனத்தில் கொண்டு, அவர்களுக்குப் பயிர்ப் பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ள வழங்கப்படும் மானியத் தொகையை அரசு உயர்த்துமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எரியோபைட் சிலந்தி காற்றின் மூலம் பரவுகிற ஒரு நோய். இதனை முழுமையாகக் கட்டுப்படுத்த இதுவரை மருந்து எதுவும் கண்டுபிடிக்கப்படாத நிலையில், அந்தந்த மாநிலங்களுக்கு ஏற்ற முறையில் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்து வரப்படுகின்றன என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 51, திரு. எம். ராம்குமார், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**51—**

**பாலர் பள்ளி**

***6717—திரு. எம். ராம்குமார்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, கொரநாட்டுக்கருப்பூர், மஞ்சமாவடி கிராமத்தில் பாலர் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்கு உட்பட்ட கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தில் கொரநாட்டுக்கருப்பூர் ஊராட்சிலே உட்கிராமமாக இருக்கின்ற இந்த மஞ்சமாவடி கிராமம் ஏறக்குறையை 750 பேர்கள் மக்கள்தொகை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கொண்ட குக்கிராமமாகும். அந்தக் கிராமத்திலே இருக்கின்ற குழந்தைகள் பாலர் பள்ளிக்கு வருவதற்கு கருப்பூர் ஊராட்சிக்கு வருவது என்று சொன்னால், கிட்டத்தட்ட 2½ கிலோ மீட்டர் தூரம் நடந்து வரவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த ஏழை எளிய விவசாய கூலித் தொழிலாளர்களுடைய குழந்தைகள் பயிலுவதற்கு அந்த மஞ்சமாவடி கிராமத்திலே புதிதாக பாலர் பள்ளி துவங்குவதற்கு மறுபரிசீலனை செய்வாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதி, கொரநாட்டுக்கருப்பூர், மஞ்சமாவடி கிராமத்தில் மொத்தம் மக்கள் தொகை எண்ணிக்கை 104 ஆக இருப்பதாலும், பயனாளிகளின் எண்ணிக்கை 13 ஆக இருப்பதாலும் அரசு அறிவித்திருக்கின்ற விதிகளின்படி மேற்படி கிராமத்தில் புதிய பாலர் பள்ளி அமைப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று கருத்துரு பெறப்பட்டிருக்கிறது.

மஞ்சமாவடி கிராமத்தில் மையம் தொடங்குகின்ற நேரத்தில் வருகை தருகின்ற குழந்தைகளின் எண்ணிக்கைக் கணக்கு 6 ஆக கருத்துரு பெறப்பட்டிருக்கிறது. இக்கிராமத்தில் பாலர் பள்ளி அமைப்பதற்கு ஒரு இலட்சம் ரூபாய் செலவாகும். மேற்படி தொகுதியில் ஏற்கெனவே 151 பள்ளி சத்துணவு மையங்கள் மற்றும் 63 பாலர் பள்ளி மையங்கள் இயங்கி வருகின்றன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அந்த மஞ்சமாவடி கிராமத்தில் மக்கள் தொகையைக் கணக்கிலே கொண்டு சிறப்புக் கவனம் செலுத்தி அமைக்க வேண்டுமென்று விரும்பினால் அவர்களுடைய சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து, அவர்களுடைய தொகுதியில் பள்ளியை நிறுவுவதற்கு ஏற்பாடு செய்துகொள்வதற்கு அரசு துணையாக நிற்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 52, திரு. மா. சின்னசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

2003 மார்ச் 24]

**52—**

**சிற்றுந்துகள்**

***7714—திரு. மா. சின்னசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி பகுதிகளில் சிற்றுந்து ஒதுக்கப்பட்ட வழித்தடங்களில் இயக்காமல் வேறு வழித்தடங்களில் இயக்கி வருவதை அரசு அறியுமா?

(ஆ) இக்குறைகளைக் களைய அரசு எடுக்கும் நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். பழனி பகுதியில் சிற்றுந்து ஓட்டுநர்களுக்கு ஒதுக்கப்பட்ட வழித்தடங்களில் இயக்காமல், வேறு வழித் தடங்களில் இயக்குபவர்களைக் கண்டறிந்து, தவறு செய்தவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதைப் பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மா. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகின்றேன். சிற்றுந்து ஒதுக்கப்பட்ட வழித்தடங்களில் இயக்காமல் வேறு வழித்தடங்களில் இயக்கிவரும் தவறுகள் 2001 வரை அதிக அளவில் நடைபெற்று வந்தன. ஆனால் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் தவறுகள் படிப்படியாகக் குறைக்கப்பட்டுள்ளதை எல்லோரும் அறிவர். இன்னும் ஒரு சிலர் பழனி பகுதியில் இந்தத் தவறுகளைத் தொடர்ந்து செய்து வருகிறார்கள். எனவே, மாண்புமிகு அம்மாவின் புனித ஆட்சியில் இந்தத் தவறுகளுக்கு முற்றிலும் முற்றுப்புள்ளி வைக்கப்படுமா என மாண்புமிகு அமைச்சர் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகின்றேன். . .

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக இப்படிப்பட்ட தவறுகள்,

சிற்றுந்துகளை தாங்கள் உரிமம் பெற்ற வழித்தடங்களில் இயக்காமல் பெருமளவு தங்கள் விருப்பம் போல் இயக்கி வந்த நிலை இருந்தது உண்மைதான். ஆனால் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததற்குப் பின்பு, இப்படிப்பட்ட தவறுகளை எல்லாம் கண்டறிந்து இப்பொழுது கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்த நடவடிக்கைகளின் விளைவாக இப்பொழுது தவறுகள் பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக பழனி பகுதியில் இன்றைய நிலவரப்படி 53 சிற்றுந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் அனுமதிச் சீட்டில் குறிப்பிட்டுள்ள வரைமுறைகளை மீறியதாக 21-6-2001 முதல் இன்று வரை 192 குறைபாடுகள் கண்டறியப்பட்டன. ஒதுக்கப்பட்ட வழித்தடங்களில் இல்லாமல் வேறு வழித்தடங்களில் சிற்றுந்துகளை இயக்கியதாக 143 குறைபாடுகள் கண்டறியப்பட்டன. அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் மூலம் ஒரு சிற்றுந்து உரிமம் ரத்து செய்யப்பட்டுள்ளது. மற்றும் 16 உரிமங்கள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. மேலும், அபராதத் தொகையாக பழனி பகுதியில் ரூ.6.69 இலட்சம் வசூலிக்க உத்தேசிக்கப்பட்டு அதில் ஒரு இலட்சத்து எட்டாயிரம் ரூபாய் வசூலிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள அபராதத் தொகை 5.61 இலட்சம் மாநில போக்குவரத்துத் தீர்ப்பாயம் தனது தடை ஆணையை நீக்கியதும் வசூலிக்கப்படும். இதுபோன்ற வரைமுறைகளைக் கடைப்பிடிக்க தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வரைமுறைகள் மீறப்படும்போது, சட்ட விதிகளின்படி உரிமங்கள் ரத்து செய்தல், அபராதத் தொகை வசூலித்தல் போன்ற நடவடிக்கைகளை போக்குவரத்துத் துறை மேற்கொள்கிறது. இதன்மூலமாக பழனி பகுதியிலே நடைபெற்று வந்த தவறு பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்

*முற்பகல் 10-50*

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பழனி பகுதியில் சிற்றுந்துகளில்

2003 மார்ச் 24]

ஏற்படுகின்ற தவறுகளைக் கண்டறிந்து, ஒழுங்குமுறைப்படுத்தி இருப்பதாகச் சொன்னார்கள். அதேபோல தமிழகம் முழுவதிலும் பல்வேறு பகுதிகளில் இப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்கின்றனவா? அவற்றை நிவர்த்தி செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா என்கின்ற விவரங்களையும் உங்கள்மூலம் நான் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரை அப்படிப்பட்ட தவறுகள் பெருமளவில் நடந்து வந்தன. அவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக இப்பொழுது மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அறிவுரையின்படி பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இப்பொழுது பழனிப் பகுதியில் மட்டுமல்ல, தமிழகம் முழுவதிலும் இப்படிப்பட்ட தவறுகள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சிற்றுந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டபோது, மொத்தம் சிற்றுந்துகள் உரிமம் வழங்கப்பட்டவை, 4840. அவற்றில் சரண்டர் செய்யப்பட்டவை 838. இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கின்ற சிற்றுந்துகள் 4002. இவற்றில் 21-6-2001 முதல் இன்று வரை வழங்கப்பட்ட சோதனை அறிக்கைகளின் எண்ணிக்கை 46,297. இந்த சோதனை அறிக்கைகளின் மூலமாக அனுமதிச் சீட்டுக்குப் புறம்பாக இயக்கிய வாகனங்களின் மீது வழங்கிய சோதனை அறிக்கைகள் 12,239. ஆக மாநிலம் முழுவதும் இப்பொழுது தற்காலிக தடை செய்த அனுமதிச் சீட்டுக்களின் எண்ணிக்கை 765. அனுமதிச் சீட்டு இரத்து செய்த வாகனங்களின் எண்ணிக்கை, பெர்மிட்டை இரத்து செய்தவை 48. இதற்காக Fine-இணக்கக்கட்டணம் வசூலிக்க உத்தேசிக்கப்பட்டது ரூ.2,09,42,350/-. இந்த இணக்கக் கட்டணத்தில் வசூலான தொகை ரூ.1,24,01,880/-. இந்த அளவிற்கு மாநிலம் முழுவதும் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்ததன் விளைவாக சிற்றுந்துகள், தாங்கள் பெற்றிருக்கின்ற உரிமங்களுக்கு மாறாக இயக்கி அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு பெருமளவில் நஷ்டத்தை ஏற்படுத்திவந்த நிலைமாறி இப்பொழுது புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அறிவுரையின் பேரில் பெருமளவு நஷ்டம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2003 மார்ச் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *53*, திரு. ப. அண்ணாவி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**53—**

**புதிய பேருந்துகள்.**

***15219—திரு. ப. அண்ணாவி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், தொட்டியம் தொகுதியிலுள்ள காட்டுப்புத்தூர் மற்றும் மேட்டுப்பாளையத்திலிருந்து சென்னைக்கு புதிய பேருந்துகள் இயக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் திருச்சி மாவட்டம், தொட்டியம் தொகுதியிலுள்ள காட்டுப்புத்தூர் மற்றும் மேட்டுப்பாளையத்திலிருந்து சென்னைக்கு பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர், இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வணக்கம். எனது தொட்டியம் தொகுதியில் வாழை, வெற்றிலை அதிகமாக சாகுபடி செய்வதால் வியாபாரிகளும், பொதுமக்களும் தினந்தோறும் சென்னை செல்லவேண்டி இருப்பதால் எனது தொட்டியம் தொகுதிக்கு உட்பட்ட காட்டுப்புத்தூர் பேரூராட்சியிலிருந்தும், தாத்தையங்கார்பேட்டை ஒன்றியத்திலுள்ள மேட்டுப்பாளையம் பேரூராட்சியிலிருந்தும் தொட்டியம் தொகுதியைச் சார்ந்த வியாபாரிகளும், பொதுமக்களும் சென்னைக்கு சென்றுவர, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மறுபரிசீலனை செய்து எனது தொகுதியில் இயக்கப்படும் தமிழக அரசுப் பேருந்தை காட்டுப்புத்தூர் வரை நீட்டித்தும்,

[2003 மார்ச் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 53, திரு. ப. அண்ணாவி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**53—**

**புதிய பேருந்துகள்.**

***15219—திரு. ப. அண்ணாவி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், தொட்டியம் தொகுதியிலுள்ள காட்டுப்புத்தூர் மற்றும் மேட்டுப்பாளையத்திலிருந்து சென்னைக்கு புதிய பேருந்துகள் இயக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் திருச்சி மாவட்டம், தொட்டியம் தொகுதியிலுள்ள காட்டுப்புத்தூர் மற்றும் மேட்டுப்பாளையத்திலிருந்து சென்னைக்கு பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர், இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வணக்கம். எனது தொட்டியம் தொகுதியில் வாழை, வெற்றிலை அதிகமாக சாகுபடி செய்வதால் வியாபாரிகளும், பொதுமக்களும் தினந்தோறும் சென்னை செல்லவேண்டி இருப்பதால் எனது தொட்டியம் தொகுதிக்கு உட்பட்ட காட்டுப்புத்தூர் பேரூராட்சியிலிருந்தும், தாத்தையங்கார்பேட்டை ஒன்றியத்திலுள்ள மேட்டுப்பாளையம் பேரூராட்சியிலிருந்தும் தொட்டியம் தொகுதியைச் சார்ந்த வியாபாரிகளும், பொதுமக்களும் சென்னைக்கு சென்றுவர, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மறுபரிசீலனை செய்து எனது தொகுதியில் இயக்கப்படும் தமிழக அரசுப் பேருந்தை காட்டுப்புத்தூர் வரை நீட்டித்தும்,

2003 மார்ச் 24]

தாத்தையங்கார்பேட்டையிலிருந்து இயக்கப்படும் தமிழக அரசு பேருந்தை மேட்டுப்பாளையம் வரை நீட்டித்தும் தர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அண்ணா தொழிற்சங்க பேரவையினுடைய மாவட்டச் செயலாளராகவும் இருக்கிறார். அவருக்கு இப்போது அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் சார்பாக அந்தப் பகுதியிலிருந்து சென்னைக்கு நேரிடையாக புதிய பேருந்துகள் விடுவதிலே உள்ள இடர்பாடுகள் முழுமையாகத் தெரியும். இருந்தாலுங்கூட புதிய பேருந்துகள் இயக்குவதற்கு வாய்ப்பு இல்லை என்றபோதிலுங்கூட, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, ஏற்கெனவே அங்கு முசிறி பகுதியிலிருந்து சென்னைக்கு வந்துகொண்டிருக்கின்ற அந்த திருச்சி அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான பேருந்தை, காட்டுப்புத்தூரிலிருந்து புறப்படுகின்ற வகையிலே அந்தப் பேருந்து வழித்தடத்தை நீட்டிப்பது குறித்து அரசு பரிவுடன் பரிசிலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 54, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

**54—**

**மின் விளக்கு.**

**•7627—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், அரியலூர் ஊராட்சி, சித்தாலத்தூர் வடக்குத் தெருவிற்கு புதிய மின் கம்பமும், மின் விளக்கும் அமைக்கும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?



வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2003 மார்ச் 24]

தாத்தையங்கார்பேட்டையிலிருந்து இயக்கப்படும் தமிழக அரசு பேருந்தை மேட்டுப்பாளையம் வரை நீட்டித்தும் தர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அண்ணா தொழிற்சங்க பேரவையினுடைய மாவட்டச் செயலாளராகவும் இருக்கிறார். அவருக்கு இப்போது அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் சார்பாக அந்தப் பகுதியிலிருந்து சென்னைக்கு நேரிடையாக புதிய பேருந்துகள் விடுவதிலே உள்ள இடர்பாடுகள் முழுமையாகத் தெரியும். இருந்தாலுங்கூட புதிய பேருந்துகள் இயக்குவதற்கு வாய்ப்பு இல்லை என்றபோதிலுங்கூட, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, ஏற்கெனவே அங்கு முசிறி பகுதியிலிருந்து சென்னைக்கு வந்துகொண்டிருக்கின்ற அந்த திருச்சி அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான பேருந்தை, காட்டுப்புத்தூரிலிருந்து புறப்படுகின்ற வகையிலே அந்தப் பேருந்து வழித்தடத்தை நீட்டிப்பது குறித்து அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 54, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

**54—**

**மின் விளக்கு.**

**•7627—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், அரியலூர் ஊராட்சி, சித்தாலத்தூர் வடக்குத் தெருவிற்கு புதிய மின் கம்பமும், மின் விளக்கும் அமைக்கும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?



வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2003 மார்ச் 24

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

*முற்பகல் 10-55*

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய தொகுதியிலேயுள்ள ஒரு சிற்றூராட்சியிலேயுள்ள ஒரு கிராமத்திலே மின் அபிவிருத்தி திட்டத்திலே விரிவுபடுத்தப்படுமா என்கிற கேள்வியைக் கேட்டிருக்கிறேன். இது ஒரு தொகுதியிலே மட்டுமல்ல, ஒரு கிராமத்திலே மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் இருக்கிற பிரச்சினை. ஒரு சிற்றூராட்சியில், ஒரு கிராமத்திற்கு அல்லது ஒரு தெருவுக்கு அல்லது ஒரு ஆதிதிராவிடர் தெருவுக்கு அவசியமிருந்தால் அங்கே ஒரு மின் கம்பத்தை விஸ்தரிக்க வேண்டுமென்று சொன்னால், 6,000 ரூபாய் அந்த ஊராட்சி மூலமாகக் கட்ட வேண்டியிருக்கிறது. இப்போது, 3 காலாண்டு காலமாக சிற்றூராட்சிகளுக்கு நிதி வராத சூழ்நிலையில் அவர்களால் கட்ட முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, மின்சார வாரியத்தின் மூலமாகவே அந்த விஸ்தரிப்பு செய்வதற்கான திட்டத்தை அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் வாரியச் சட்டப்படி அந்தந்த ஊராட்சியிலேயிருந்து பணத்தைக் கட்டி அவர்கள் விண்ணப்பம் மூலம் தெரிவித்தால் மட்டுமே, அதைச் செய்து தருகின்ற வகையில் சட்டம் இருக்கின்ற காரணத்தினால், அதைச் செய்ய இயலாது என்கிற முறையை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 55, திரு. சி. சண்முகம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

2003 மார்ச் 24]

**55—**

## சோடியம் ஆவி விளக்கு.

**•10214—திரு. சி. சண்முகம்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருநின்றவூர் தேர்வுநிலை பேரூராட்சிப் பகுதிகளில் சோடியம் ஆவி விளக்கு பொருத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது செயல்படத் தொடங்கும்?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருநின்றவூர் தேர்வு நிலை பேரூராட்சிப் பகுதிகளில் போதுமான அளவு சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளதால், மேலும் சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தும் அவசியம் எழவில்லை.

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநின்றவூர் பகுதியானது ஒரு பாடல்பெற்ற ஸ்தலமாகும். அந்தப் பகுதியிலே அரசு அங்கீகாரம் இல்லாத வீடுகள் அதிகமாக உள்ளதால், ஏழைகளின் வீடுகள் அதிகமாக உள்ளதால், அந்த வீடுகளுக்கு மின்சாரத் தொடர்பு இல்லை. அவர்களது பிள்ளைகளுக்கு படிக்க வசதி இல்லை. தெரு விளக்குகள் அந்தப் பகுதிகளில் அமைக்கப்படவில்லை. ஆதலால், சட்டமன்ற உறுப்பினர் நிதியிலோ அல்லது அரசாங்கமோ அவர்களுக்கு குழல் விளக்கோ, தெரு விளக்கோ, சமுதாயக் கூடமோ, படிப்பகமோ அந்தப் பகுதிகளில் ஏற்பாடு செய்து கொடுக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 28 வார்டுகளில், 30,000 பொதுமக்களை உள்ளடக்கிய திருநின்றவூர் தேர்வுநிலை பேரூராட்சியில் தற்போது 190 சோடியம் ஆவி விளக்குகள் உள்ளன. மேலும், 1,147 குழல் விளக்குகள் உள்ளன. கூடுதலாக சோடியம் ஆவி விளக்குகள் அமைப்பதைவிட, இதுவே போதுமானதாகும்.

[2003 மார்ச் 24

மேலும், சோடியம் ஆவி விளக்குகள் அமைப்பதால் பேரூராட்சிக்கு மின் கட்டணம் மற்றும் பராமரிப்புக் கட்டணமும் கூடுதலாகும். பேரூராட்சியில் தற்போது போதுமான நிதி வசதியும் இல்லை. எனவே, இப்பேரூராட்சியில் கூடுதல் சோடியம் ஆவி விளக்குகளோ, குழல் விளக்குகளோ அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழன்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியாகராயநகர் பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள உயர்கோபுர சோடியம் ஆவி விளக்கு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அமைக்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அன்பழகன். இது திருநின்றவூர்.

வினா எண் 56, திரு. த. ஆறுமுகம். மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**56—**

**நச்சுக் காற்றைத் தடுத்தல்**

**•18991—திரு. த. ஆறுமுகம்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மண்டலம்-I மற்றும் 2 பகுதிகளுக்குட்பட்ட எம்.ஆர்.நகர், ஆர்.ஆர்.நகர் மற்றும் கொடுங்கையூர் பகுதிகளைச் சுற்றியுள்ள தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் நச்சுக் காற்றை சுவாசிப்பதால் மூச்சுத் திணறல் ஏற்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அங்கு வசிக்கும் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட

[2003 மார்ச் 24

மேலும், சோடியம் ஆவி விளக்குகள் அமைப்பதால் பேரூராட்சிக்கு மின் கட்டணம் மற்றும் பராமரிப்புக் கட்டணமும் கூடுதலாகும். பேரூராட்சியில் தற்போது போதுமான நிதி வசதியும் இல்லை. எனவே, இப்பேரூராட்சியில் கூடுதல் சோடியம் ஆவி விளக்குகளோ, குழல் விளக்குகளோ அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழன்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியாகராயநகர் பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள உயர்கோபுர சோடியம் ஆவி விளக்கு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அமைக்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அன்பழகன். இது திருநின்றவூர்.

வினா எண் 56, திரு. த. ஆறுமுகம். மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**56—**

**நச்சுக் காற்றைத் தடுத்தல்**

**•18991—திரு. த. ஆறுமுகம்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மண்டலம்-I மற்றும் 2 பகுதிகளுக்குட்பட்ட எம்.ஆர்.நகர், ஆர்.ஆர்.நகர் மற்றும் கொடுங்கையூர் பகுதிகளைச் சுற்றியுள்ள தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் நச்சுக் காற்றை சுவாசிப்பதால் மூச்சுத் திணறல் ஏற்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அங்கு வசிக்கும் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட

2003 மார்ச் 24]

புகாரின் அடிப்படையில், மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் விரிவான ஆய்வு மேற்கொண்டது. அங்கிருக்கும் தொழிற்சாலைகளால் காற்று மாசடைவது அறியப்பட்டது. எனவே, காற்று மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுச் சட்டம் 1981 மற்றும் நீர் மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுச் சட்டம் 1974 ஆகியவற்றின் மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு அத்தொழிற்சாலைகளை மூடும்படியும், மின் இணைப்பைத் துண்டிக்கும்படியும் ஆணை வழங்கப்பட்டது. மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் அறிவுறுத்தலின்பேரில் அத்தொழிற்சாலைகள் தற்போது காற்று மாசுத் தடுப்புச் சாதனங்களைப் பொருத்தி இயங்கி வருவதால் மேற்கண்ட தொழிற்சாலைகளிலிருந்து வரும் காற்று மாசு முழுமையாகத் தடுக்கப்பட்டுள்ளது. அத்தொழிற்சாலைகளின் செயல்பாட்டினை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருவொற்றியூர் தொகுதியிலுள்ள பல்வேறு தொழிற்சாலைகளிலிருந்து குறிப்பாக எண்ணூர் பகுதியிலுள்ள இஐடி. பாரி தொழிற்சாலை, மணலி பகுதியில் இருக்கின்ற மணலி ஃபெர்டிலைசர் லிமிடெட் தொழிற்சாலை மற்றும் எம்.ஆர்.எஃப் தொழிற்சாலை, எண்ணூர் அனல் மின் நிலையம் போன்ற தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படுகின்ற நச்சுக் கலந்த.......

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கான அமைச்சரின் பதில் முடிகிற வரைக்கும் பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள் விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. த. ஆறுமுகம்:** சல்பர் மற்றும் ஜிப்சம் கலந்த புளோரைடு காற்றிலே கலந்து பொதுமக்களைப் பாதிக்கின்ற காரணத்தினாலும், இவை மேலும் தரைமேல் படிகின்ற சூழ்நிலையினாலும் பல ஆயிரக்கணக்கான மக்களைப் பாதிக்கின்ற நிலைமை உள்ளது. மேலும், சென்னை மண்டலமான 1, 2 கொடுங்கையூர் பகுதியிலுள்ள பல ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்.கே. நகர், திருவொற்றியூர் தொகுதியிலுள்ள மக்கள் முழுமையாக பாதிக்கப்படுகின்ற காரணத்தினாலும், அங்கே கொட்டப்படுகின்ற குப்பைகள் அங்கே இருக்கின்ற மக்களின் சுற்றப்புறத்தை, அவர்கள் மேலும் வாழ முடியாத சூழ்நிலைக்கு ஆளாக்குகின்ற காரணத்தினாலும், அந்தக் குப்பைகளை

சென்னையினுடைய ஒதுக்குப்புறத்தில் கொட்டுவதற்கான சூழ்நிலையை உருவாக்குவதோடு, அந்தத் தனியார் தொழிற்சாலைகளுடைய ஒப்புதலைப் பெற்று நச்சுக் கலந்த புளோரைடை வெளியேற்றுகின்ற புகைபோக்கியினுடைய உயரத்தை உயர்த்துவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தி, அந்தக் குப்பைகளையும் அகற்ற அரசு முன்வருமா என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகார் வந்ததன் அடிப்படையில் 19-1-2002 அன்று தொழிற்சாலைகளின் மின்இணைப்பு துண்டிக்கப்பட்டு, மூடப்பட்டன. பிறகு காற்று மாசு தடுப்புச் சாதனங்கள் பொருத்திய பின்பு 1-4-2002 முதல் அத்தொழிற்சாலைகள் மீண்டும் செயல்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி உறுப்பினர் கூறிய புகார்கள் குறித்து நேரில் சென்று ஆய்வு செய்து, அப்படி தவறுகள் நடந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

## 3. தகவல் கோரல்

### (அ) ஈராக் மீது அமெரிக்கா நடத்தும் யுத்தத்தைக் கண்டித்தும் முடிக்கவும் தீர்மானம் கொண்டுவரக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2003-2004 ஆம் ஆண்டுக்கான (குறுக்கீடுகள்) திரு. ஜே. ஹேமச்சந்திரன்.*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நம்முடைய இந்திய மக்களை கடுமையாக பாதிக்கக்கூடிய முறையில் ஈராக்கிலே ஒரு யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. அமெரிக்காவினால் நடத்தப்படுகின்ற அந்த யுத்தத்தை விரைவிலே முடித்துக்கொள்ள வேண்டும் என்ற முறையிலே அந்த யுத்தத்தை ஏற்படுத்தியதைக் கண்டித்து, அந்த யுத்தத்தை முடிப்பதற்கு

சென்னையினுடைய ஒதுக்குப்புறத்தில் கொட்டுவதற்கான சூழ்நிலையை உருவாக்குவதோடு, அந்தத் தனியார் தொழிற்சாலைகளுடைய ஒப்புதலைப் பெற்று நச்சுக் கலந்த புளோரைடை வெளியேற்றுகின்ற புகைபோக்கியினுடைய உயரத்தை உயர்த்துவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தி, அந்தக் குப்பைகளையும் அகற்ற அரசு முன்வருமா என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகார் வந்ததன் அடிப்படையில் 19-1-2002 அன்று தொழிற்சாலைகளின் மின்இணைப்பு துண்டிக்கப்பட்டு, மூடப்பட்டன. பிறகு காற்று மாசு தடுப்புச் சாதனங்கள் பொருத்திய பின்பு 1-4-2002 முதல் அத்தொழிற்சாலைகள் மீண்டும் செயல்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி உறுப்பினர் கூறிய புகார்கள் குறித்து நேரில் சென்று ஆய்வு செய்து, அப்படி தவறுகள் நடந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

## 3. தகவல் கோரல்

### (அ) ஈராக் மீது அமெரிக்கா நடத்தும் யுத்தத்தைக் கண்டித்தும் முடிக்கவும் தீர்மானம் கொண்டுவரக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003-2004 ஆம் ஆண்டுக்கான (குறுக்கீடுகள்) திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நம்முடைய இந்திய மக்களை கடுமையாக பாதிக்கக்கூடிய முறையில் ஈராக்கிலே ஒரு யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. அமெரிக்காவினால் நடத்தப்படுகின்ற அந்த யுத்தத்தை விரைவிலே முடித்துக்கொள்ள வேண்டும் என்ற முறையிலே அந்த யுத்தத்தை ஏற்படுத்தியதைக் கண்டித்து, அந்த யுத்தத்தை முடிப்பதற்கு

2003 மார்ச் 24] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

அமெரிக்கா முன்வரவேண்டுமென்ற ஒரு தீர்மானம் இந்த அவையிலே நிறைவேற்ற வேண்டுமென்று, தமிழக மக்களின் சார்பில், இந்திய மக்களின் சார்பில் நான் வேண்டுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே சமீபத்திலே பல்வேறு மாநிலங்களிலே, சட்டமன்றக் கூட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிற மாநிலங்களிலெல்லாம்கூட, குறிப்பாக மேற்கு வங்காளம் போன்ற மாநிலத்திலேகூட இப்படிப்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. உலகத்திலே அமைதி வேண்டும் என்று சொல்லக்கூடிய நேரத்தில் அமெரிக்கர்களுடைய ஏகாதிபத்தியம் ஈராக் நாட்டின்மீது இன்று கடுமையான போர் புரிந்து பல துயரச் சம்பவங்கள் பத்திரிகையிலே செய்தியாக வந்து கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், நமது சட்டமன்றத்தின் சார்பாக மனித நேயத்தோடு ஒரு கண்டன தீர்மானத்தை நிறைவேற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

### (ஆ) விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையிலே விவசாயிகளுக்குத் தொடர்ந்து வழங்கப்பட்டு வந்த இலவச மின்சாரம் ரத்து செய்யப்பட்டிருக்கிறது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவையெல்லாம் ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கின்றன; என்னுடைய ஆய்விலே இருக்கின்றன. பிறகு எடுத்துக்கொள்ளலாம்.

## 4. வரவு-செலவுத் திட்டம், 2003-2004, பொது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2003-2004* ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம். திரு. மு.க. ஸ்டாலின்.

***திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *2003-2004* ஆம் ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையின் மீது நடைபெறக்கூடிய விவாதத்திலே நானும் கலந்து கொண்டு திராவிட

2003 மார்ச் 24] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

அமெரிக்கா முன்வரவேண்டுமென்ற ஒரு தீர்மானம் இந்த அவையிலே நிறைவேற்ற வேண்டுமென்று, தமிழக மக்களின் சார்பில், இந்திய மக்களின் சார்பில் நான் வேண்டுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே சமீபத்திலே பல்வேறு மாநிலங்களிலே, சட்டமன்றக் கூட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிற மாநிலங்களிலெல்லாம்கூட, குறிப்பாக மேற்கு வங்காளம் போன்ற மாநிலத்திலேகூட இப்படிப்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. உலகத்திலே அமைதி வேண்டும் என்று சொல்லக்கூடிய நேரத்தில் அமெரிக்கர்களுடைய ஏகாதிபத்தியம் ஈராக் நாட்டின்மீது இன்று கடுமையான போர் புரிந்து பல துயரச் சம்பவங்கள் பத்திரிகையிலே செய்தியாக வந்து கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், நமது சட்டமன்றத்தின் சார்பாக மனித நேயத்தோடு ஒரு கண்டன தீர்மானத்தை நிறைவேற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

### (ஆ) விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையிலே விவசாயிகளுக்குத் தொடர்ந்து வழங்கப்பட்டு வந்த இலவச மின்சாரம் ரத்து செய்யப்பட்டிருக்கிறது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவையெல்லாம் ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கின்றன; என்னுடைய ஆய்விலே இருக்கின்றன. பிறகு எடுத்துக்கொள்ளலாம்.

## 4. வரவு-செலவுத் திட்டம், 2003-2004, பொது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2003-2004* ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம். திரு. மு.க. ஸ்டாலின்.

***திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *2003-2004* ஆம் ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையின் மீது நடைபெறக்கூடிய விவாதத்திலே நானும் கலந்து கொண்டு திராவிட

TRUTH ALONE TRIUMPHS

2003 மார்ச் 24] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

அமெரிக்கா முன்வரவேண்டுமென்ற ஒரு தீர்மானம் இந்த அவையிலே நிறைவேற்ற வேண்டுமென்று, தமிழக மக்களின் சார்பில், இந்திய மக்களின் சார்பில் நான் வேண்டுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே சமீபத்திலே பல்வேறு மாநிலங்களிலே, சட்டமன்றக் கூட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிற மாநிலங்களிலெல்லாம்கூட, குறிப்பாக மேற்கு வங்காளம் போன்ற மாநிலத்திலேகூட இப்படிப்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. உலகத்திலே அமைதி வேண்டும் என்று சொல்லக்கூடிய நேரத்தில் அமெரிக்கர்களுடைய ஏகாதிபத்தியம் ஈராக் நாட்டின்மீது இன்று கடுமையான போர் புரிந்து பல துயரச் சம்பவங்கள் பத்திரிகையிலே செய்தியாக வந்து கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், நமது சட்டமன்றத்தின் சார்பாக மனித நேயத்தோடு ஒரு கண்டன தீர்மானத்தை நிறைவேற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

### (ஆ) விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையிலே விவசாயிகளுக்குத் தொடர்ந்து வழங்கப்பட்டு வந்த இலவச மின்சாரம் ரத்து செய்யப்பட்டிருக்கிறது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவையெல்லாம் ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கின்றன; என்னுடைய ஆய்விலே இருக்கின்றன. பிறகு எடுத்துக்கொள்ளலாம்.

## 4. வரவு-செலவுத் திட்டம், 2003-2004, பொது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2003-2004* ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம். திரு. மு.க. ஸ்டாலின்.

***திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *2003-2004* ஆம் ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையின் மீது நடைபெறக்கூடிய விவாதத்திலே நானும் கலந்து கொண்டு திராவிட

TRUTH ALONE TRIUMPHS

முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய கருத்துகளை எடுத்து வைக்கக்கூடிய வாய்ப்பினைத் தந்த பேரவைத் தலைவருக்கு நான் முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 2001 ஆம் ஆண்டிலே 135 கோடி ரூபாய்க்கு வரி போடப்பட்டது; அதைத் தொடர்ந்து மினி பட்ஜெட் என்கிற பெயரிலே சுமார் 3,000 கோடி ரூபாய்க்கு கட்டணங்கள் உயர்த்தப்பட்டன. தொடர்ந்து 2002 ஆம் ஆண்டிலே 690 கோடி ரூபாய்க்கு வரி உயர்த்தப்பட்டது.

முற்பகல் 11-05

அதேபோல இந்த ஆண்டு 430 கோடி ரூபாய்க்கு வரி போடப்பட்டு இருக்கிறது. அதாவது பெட்ரோல், டீசல், வெள்ளை மண்ணெண்ணெய், தொலைபேசி வாடகை ஆகியவற்றின் மீது 200 கோடி ரூபாய்க்கு வரி போடப்பட்டிருக்கிறது. இது தவிர, சலவை இயந்திரங்கள் மீது 12.5 விழுக்காடு நுழைவு வரியும், துகல்கள், நாடாக்கள் மற்றும் கழிவுகள் மீது 4 விழுக்காடு நுழைவு வரியும் போடப்பட்டிருக்கிறது.

தாக்கல் செய்யப்பட்டிருக்கக்கூடிய இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையிலே பல்வேறு திட்டங்களுக்கு கடந்த ஆண்டைவிட, நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டிருக்கிறது. அவற்றில் சிலவற்றை நான் இங்கே கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையிலே கடந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 150.76 கோடி ரூபாய். இந்த ஆண்டு 149.44 கோடி ரூபாய். தமிழ் வளர்ச்சி, பண்பாட்டுத் துறைக்கு கடந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 41.64 கோடி ரூபாய். இந்த ஆண்டு 40.29 கோடி ரூபாய். சமூக நலன், சத்துணவுத் திட்டத் துறைக்கு கடந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 411.12 கோடி ரூபாய். திருத்த மதிப்பீட்டிலே 393.94 கோடி ரூபாய். ஊரக வளர்ச்சித் துறைக்கு கடந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 1,743.29 கோடி ரூபாய். திருத்த மதிப்பீட்டிலே 1,621.70 கோடி ரூபாய். பள்ளிக் கல்வித் துறையைப் பொறுத்த வரையிலே கடந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 4,165.93 கோடி ரூபாய். திருத்த மதிப்பீட்டிலே 3,744.23 கோடி ரூபாய். உயர் கல்வித் துறைக்கு கடந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 793.35 கோடி ரூபாய். திருத்த மதிப்பீட்டிலே 668.38 கோடி ரூபாய். இந்த ஆண்டு ஒதுக்கீடு 738.57 கோடி ரூபாய். வருவாய்த் துறைக்கு கடந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 851 கோடி ரூபாய். திருத்த மதிப்பீட்டிலே 814.57 கோடி ரூபாய்.

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு கடந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 1,987 கோடி ரூபாய். திருத்த மதிப்பீட்டிலே 1762 கோடி ரூபாய். திட்ட மதிப்பீட்டிலே 1826 கோடி ரூபாய். தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறைக்கு கடந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 177.94 கோடி ரூபாய். திட்ட மதிப்பீடு 161.11 கோடி ரூபாய். தகவல் தொழில்நுட்பத் துறைக்கு கடந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 10.25 கோடி ரூபாய். திருத்த மதிப்பீட்டிலே 6.92 கோடி ரூபாய். திட்ட மதிப்பீடு 8.27 கோடி ரூபாய். ஆக கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு பல்வேறு துறைகளுக்கு நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை, பக்கம் 88-லே அதிக அளவு கடன் வாங்குவது பெரும் குழப்பத்தில்தான் முடியும் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் பக்கம் 8-லே உலக வங்கியிடமிருந்து பல்வேறு திட்டங்களுக்கு பல்லாயிரக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள வகையிலே கடன் வாங்குவதாக ஒரு பட்டியலும் வெளியிடப்பட்டிருக்கிறது. நீங்கள் கடன் வாங்கினால் குழப்பம் விளைவிக்காதா என்பதுதான் என்னுடைய கேள்வி. இதற்கு முன்பு இரண்டு முறை அதாவது, 2001-2002, 2002-2003 ஆண்டுகளுக்கான நிதிநிலை அறிக்கையை இதே அவையிலே தாக்கல் செய்திருக்கிறீர்கள். அப்படி தாக்கல் செய்யப்பட்டிருக்கக்கூடிய அந்த நிதிநிலை அறிக்கைகளிலே பல்வேறு உறுதிமொழிகள், வாக்குறுதிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவையெல்லாம் நிறைவேற்றப் பட்டிருக்கின்றனவா அல்லது அவையெல்லாம் எந்த நிலையில் இருக்கின்றன என்பதை நான் அறிவதற்காக சிலவற்றைக் கோடிட்டுக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மாநிலத்தில் 385 வளர்ச்சி வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டம், குறைந்தது 1 கோடி ரூபாய் முதலீட்டிலே செயல்படுத்தப்படும் என்று 2002-03 நிதிநிலை அறிக்கை பக்கம் 27-இல் குறிப்பிட்டிருக்கிறீர்கள். நான் கேட்பது ஒரேயொரு வளர்ச்சி வட்டாரத்திலாவது ஒரு திட்டமாவது தொடங்கப்பட்டிருக்கிறதா?

அடுத்து அதிக ஆதாரம் தரத்தக்க வணிகப் பயிர் உற்பத்திக்கான வழிமுறைகள் குறித்து ஒரு இலட்சம் உழவர்களுக்கு 3 ஆண்டுகள் அளவிலே பயிற்சி அளிப்பதற்கான புதிய திட்டமொன்று

உருவாக்கப்படும் என்று 2002-2003 நிதிநிலை அறிக்கை பக்கம் 27-லே குறிப்பிட்டிருக்கிறீர்கள். அது என்னவாயிற்று?

முற்பகல் 11-10

அரசு தனியார் பங்கேற்புடன் இந்திய முறை மருத்துவ அடிப்படையிலே, உலகத் தரம் வாய்ந்த மருத்துவமனை ஒன்றை சென்னையிலே ஏற்படுத்த அரசு முடிவு செய்திருப்பதாக 2002-2003 நிதி நிலை அறிக்கை பக்கம் 25-லே குறிப்பிட்டிருக்கிறீர்கள். அது என்னவாயிற்று?

மகளிர் மீதான குற்றங்களை விசாரிப்பதற்கென்றே சென்னையிலே ஒன்றும், கோவையிலே ஒன்றும் இரு மகளிர் நீதிமன்றங்களை உருவாக்கப்போகிறோம் என்று 2002-2003 நிதி நிலை அறிக்கை பக்கம் 36-லே குறிப்பிட்டு....

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிருக்கு எதிரான குற்றங்களை விசாரித்து விரைந்து தீர்ப்பு சொல்ல வேண்டும் என்கின்ற உயர்ந்த கண்ணோட்டத்தோடு, மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில் சென்னையிலும், கோவையிலும் அமைக்கப்படும் என்கின்ற அந்த உறுதிமொழியை ஏற்று, இரண்டு மகளிர் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஜூனியர் விகடன் படித்துவிட்டு வந்து இங்கே பேச வேண்டாம்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** அடுத்து, தோட்டக் கலையையும், உணவுப் பொருட்களை பதப்படுத்தக்கூடிய தொழில்களையும் மேம்படுத்தக்கூடிய வகையிலே வேளாண் வணிகத் துறை என்கின்ற ஒரு புதிய துறையை உருவாக்கப் போகிறோம் என்று 2001-2002 நிதிநிலை அறிக்கை பக்கம் 8-லே தெரிவித்திருந்தீர்கள். அது என்னவாயிற்று?

குடிநீர் வசதிகள், விளக்கு வசதி, பொதுக்கழிப்பிடம், இணைப்புச் சாலைகள் அடங்கிய அடிப்படை வசதிகள் கொண்ட கிராமச் சந்தைகளை உருவாக்கப் போகிறோம் என்று 2001-2002 நிதிநிலை அறிக்கை பக்கம் 15-லே குறிப்பிட்டிருந்தீர்கள். அது என்னவாயிற்று?

சாலை விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தக்க நேரத்திலே மருத்துவ வசதி அளிப்பதற்குப் பொருத்தமான இடங்களில் உரிய வசதிகளோடு கூடிய விபத்துக்காய சிகிச்சை மையங்களை ஏற்படுத்தப் போகிறோம் என்று 2001-2002 நிதிநிலை அறிக்கை பக்கம் 30-லே குறிப்பிட்டிருந்தீர்கள். அது என்னவாயிற்று?

2003 மார்ச் 24]

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட இந்த accident trauma centres *11*-க்கு மேல் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.(மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. மு.க. ஸ்டாலின்:** அடுத்து, இரண்டாண்டு கால ஆட்சியிலே என்ன நடந்திருக்கிறது என்று சொன்னால், பொது விநியோக முறையிலே வழங்கப்பட்டதில் *50* சதவிகித அரிசியினுடைய விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. பேருந்துக் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இலவச வேட்டி சேலைத் திட்டம் நிறுத்தப்பட்டிருக்கிறது. உழவர் சந்தைகள் மூடப்பட்டு வருகின்றன. அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற அறிவிப்போடு நிற்கிறது. நமக்கு நாமே திட்டம்—மூடுவிழா நடத்தப்பட்டிருக்கிறது. ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டம் நிறுத்தப்பட்டு விட்டது. மின் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. கல்விக் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. அரசுக் கல்லூரிகள் மிகப் பெரிய எதிர்ப்புகளுக்கிடையே பல்கலைக்கழகங்களோடு இணைக்கப் பட்டிருக்கின்றன. புதிய பணியிடங்களை உருவாக்குவது அனைத்துத் துறைகளிலுமே முற்றிலுமாக தடை செய்யப்பட்டிருக்கிறது. அரசு அலுவலர்களுக்கு பண்டிகைக் காலங்களில் வழங்கப்பட்டு வந்த முன் பணம், போனஸ், சரண்டர் லீவ் போன்ற சலுகைகள் எல்லாம் நிறுத்தப்பட்டிருக்கின்றன. வறட்சியின் காரணமாக தமிழ்நாட்டிலே *19* பேர் பட்டினிச் சாவுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம்....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி காரணமாக பட்டினிச் சாவு என்பதே இல்லை என்பதற்கான ஆதாரங்களைச் சொல்லி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாக அவையிலே ஏற்கெனவே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு திட்டங்கள் ஈடேற்றப்படவில்லை என்று சொல்லுகிறார்கள். இறுதியிலே அதற்கு நான் விளக்கம் தருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அனைத்து நிகழ்வுகளும் அரசினுடைய செயல்பாட்டிலிருந்து வருகிறது என்பதைச் சொல்கிறேன்.

அதைப்போலவே, *2002-2003*-க்கான Estimate, Revised Estimate வருகின்றபோது ஏன் நிதி குறைந்தது என்று கூறுகிறார். அதற்காக

TRUTH ALONE TRIUMPHS

கோடிட்டு, 7, 8 நிகழ்வுகளை சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அவற்றைப் பொறுத்தவரைக்கும், சிக்கன நடவடிக்கை அரசு மேற்கொண்டதன் காரணமாக அவற்றினுடைய ஒட்டுமொத்தச் செலவு குறைக்கப்பட்டிருக்கிறதேயொழிய நிதி குறைக்கப்படவில்லை. This is an example of the administrative reform carried out by this Government efficiently.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பட்டினிச் சாவு என்று ஒன்றுகூட நிகழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பட்டினியால் யாரும் சாகக்கூடாது என்பதற்காகத்தான் இந்த அரசு நிலமற்ற ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்களுக்கு, அவர்களுடைய குடும்பங்களுக்கு சமைத்த உணவு முதலில் வழங்கியது. தற்போது 14 இலட்சம் ஏழை எளிய விவசாயக் குடும்பங்களுக்கு, விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு மாதத்திற்கு 30 கிலோ அரிசி இலவசமாக வழங்கி வருகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, யாரும் பட்டினியால் சாகக்கூடிய நிலைமை தமிழ்நாட்டில் இல்லை.

*முற்பகல் 11-15*

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு முதலமைச்சர் சொன்னதைப்போல், பட்டினியால் யாரும் சாக வேண்டுமென்று யாரும் நினைக்க மாட்டார்கள். பத்திரிகைகள், எதிர்க்கட்சிகள், விவசாய சங்கங்கள், அந்த மாவட்டத்தில் இருப்பவர்கள் அவ்வளவு பேரும் பட்டினியால் செத்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆட்சியில் இருக்கிற முதலமைச்சர் மற்றும், மாண்புமிகு நிதி அமைச்சர் மட்டுந்தான் பட்டினிச் சாவு இல்லை என்கிறார்கள். இதை நாடு பார்த்துக் கொண்டிருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், மாண்புமிகு உறுப்பினர் பேசட்டும். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகைகளும், எதிர்க்கட்சிகளும் இப்படிக் கூறுகின்றன என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கூறுகிறார். எதிர்க்கட்சிகளும், பத்திரிகைகளும் கூறுகின்றன என்பதற்காகவே ஒன்றை உண்மை என்று எடுத்துக்கொள்ள முடியாது.

தமிழகத்தில் உள்ள அத்தனை எதிர்க்கட்சிகளும் முக்கியமான பத்திரிகைகளும், சாத்தான்குளத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெறாது என்றுதான் சொன்னார்கள். ஆனால் வெற்றி பெற்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போலத்தான் இதுவும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றிபெற்றதால் மட்டும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் பேசுங்கள். ஸ்டாலின் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் பேசி முடிக்கட்டும். ஸ்டாலின் நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) அவருடைய நேரத்தை எடுக்க வேண்டாம். உட்காருங்கள். திரு. ஸ்டாலின் பேசுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கீட்டுக்குள்ள நேரத்தை என்னுடைய கணக்கில் சேர்த்துக்கொள்ள வேண்டாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஐந்து மணித்துளிகளுக்குள் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** இல்லை, இல்லை, குறுக்கீடுகள் எல்லாம் நடந்திருக்கின்றன. அடுத்து, பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம், வருமுன் காக்கக்கூடிய திட்டம், வாழ்ந்து காட்டுவோம் திட்டம், இதற்கெல்லாம் மூடுவிழா கண்டிருக்கிறது. மக்கள் நலப் பணியாளர்கள் 13,000 பேர்கள் வீட்டிற்கு அனுப்பப்பட்ட காரணத்தால், அதிலே சுமார் 10 பேர் தற்கொலை செய்து கொண்டு மாண்டிருக்கிறார்கள். அதைப்போல பத்தாயிரத்திற்கு மேற்பட்ட சாலைப் பணியாளர்களுடைய வேலையும் பறிக்கப்பட்டிருக்கிறது. நிதி நெருக்கடி என்ற காரணத்தைச் சொல்லி, தொழிலாளர்களுக்கான அனைத்துச் சலுகைகளும் நிறுத்தப்பட்டிருக்கின்றன. தொழிலாளர்களுக்கு வேலை நிறுத்தத் தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

தி.மு.க. ஆட்சியிலே கொண்டுவரப்பட்ட அரியலூர் தனி மாவட்டம் இல்லாமல் ஆக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, அரசே அறிவித்த கிருஷ்ணகிரி புது மாவட்டம் அதனுடைய அறிவிப்பும் கிடப்பிலே இருக்கிறது.

அதைத் தொடர்ந்து இன்னொன்றை நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். முதன்முதலாக நீங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே, நிதி நிலை அறிக்கையை நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் தாக்கல் செய்தபோது ஒரு குறையைச் சுட்டிக்காட்டினார்கள். 1991-1996 கால அளவிலே அதாவது அ.இ.அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது Growth of Gross State domestic product—அதாவது தமிழகத்தினுடைய மொத்த உற்பத்தி வளர்ச்சி ஆண்டு ஒன்றுக்கு 6.6 சதவீதமாக இருந்தது என்றும் 1996-2001 கால அளவிலே அதாவது தி.மு.க. ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, அது 6.22 சதவீதமாக குறைந்துவிட்டது என்றும் ஒரு குறையைச் சுட்டிக்காட்டினார்கள். உண்மைதான். நானும் அதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இந்த இரண்டு ஆண்டுகால ஆட்சியிலே அது எத்தனை சதவிகிதம் உயர்த்தப்பட்டிருக்கிறது? இதுதான் என்னுடைய கேள்வி. அதுபோலவே வேளாண்மைத் துறையினுடைய சராசரி வளர்ச்சியும் தி.மு.க. ஆட்சியில் குறைந்துவிட்டதாக அன்றைக்கு நிதி அமைச்சர் அவர்கள் தன்னுடைய குறையை சுட்டிக்காட்டினார்கள். இப்போது அதனுடைய நிலை என்ன? விவசாயத் துறையை உள்ளடக்கிய முதன்மைத் துறையினுடைய உற்பத்தி 15,287 கோடி ரூபாயிலிருந்து 14,004 கோடி ரூபாயாக இந்த ஆண்டு குறையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரை எப்போதும் இல்லாத அளவிற்கு விவசாய உற்பத்தி விகிதம் இந்த ஆண்டு எதிர்மறையாக மைனஸ் 8.39 சதவிகிதமாக இருக்கும் என்று கணக்கிடப்படுகிறது.

விவசாயத் துறையிலே மட்டுமல்ல, முக்கியமான தொழில் துறையிலேகூட வளர்ச்சி விகிதம் சென்ற ஆண்டு இருந்த 3.94 சதவீதத்திலிருந்து இந்த ஆண்டு 0.86 சதவீதமாக குறைய வாய்ப்பு இருக்கிறது. மாநிலத்தினுடைய மொத்த உற்பத்தி கடந்த ஆண்டு 91,841 கோடியும், இந்த ஆண்டு 89,076 கோடியாக வர வாய்ப்பு இருக்கிறது. எனவே நான் கேட்பதெல்லாம் இந்தியாவிலே தமிழ்நாட்டை முதல் மாநிலமாக ஆக்குவோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே, இந்த நிலையில் எப்படி ஆக்க முடியும் என்பதுதான் என்னுடைய கேள்வி.

அதுமட்டுமல்ல இதே சட்டமன்றத்தில் ஆளுங்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு திரு. ராதாரவி அவர்கள் அவர் தன்னுடைய கன்னிப் பேச்சை ஆற்றுகிறபோது ஒரு கோரிக்கையை இங்கே எடுத்து வைத்தார்கள். அது கோரிக்கை என்பது மட்டுமல்ல, என் மீது ஒரு குற்றச்சாட்டையும் அவர் இந்த அவையிலே எடுத்துச் சொல்லி, அது பதிவாகியிருக்கிறது.

முற்பகல் 11-20

அதாவது, தி.மு.க. ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது சைதாப்பேட்டை தொகுதியிலே சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான ஒரு நிலத்தை நானும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சிலரும் தனியாரிடம் விட்டுக்கொடுத்துவிட்டதாகவும், ஆகவே இதிலே தவறு நடந்திருக்கிறது, ஊழல் நடந்திருக்கிறது, எனவே, முதலமைச்சர் தலையிட்டு விசாரணை கமிஷன் அமைக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கையை எடுத்து வைத்தார். நானும், எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அவர் சொன்னதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு. ராதாரவி அவர்கள் அந்தக் குற்றச்சாட்டை இந்த அவையிலே 29-10-2002 அன்று இங்கே குறிப்பிட்டிருக்கிறார். அதற்கு அடுத்த நாள், அதாவது அதற்கு மறுநாள் 30-10-2002 அன்று சென்னை மாநகராட்சியினுடைய உதவி செயற் பொறியாளர், அந்த நிலத்தினுடைய உரிமையாளருக்கு அதிகாரத் தோரணையிலே, ஒரு கடிதத்தை அனுப்புகிறார். அதாவது, ஓர் உத்தரவுக் கடிதத்தையே அனுப்பி வைக்கிறார். இடத்தினுடைய உரிமையாளருக்கு எழுதிய கடிதத்திலே குறிப்பிட்டிருப்பது என்னவென்று கேட்டால், அவருடைய விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டுவிட்டதாகவும், தக்க அதிகாரியினுடைய ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாகவும், 89 இலட்சத்து, 92 ஆயிரத்து, 280 ரூபாயை உடனடியாகக் கட்டும்படியும் உத்தரவுக் கடிதம்கூட அனுப்பி வைக்கப்படுகிறது. அதனுடைய நகல்தான் இது.

*(உறுப்பினர் கடித நகல் ஒன்றை அவையில் காண்பித்தார்)*

நம்முடைய பேரவைத் தலைவர் மூலமாக முதலமைச்சரிடத்திலேகூட நான் ஒப்படைக்கக் காத்திருக்கிறேன். அதுமாத்திரமல்ல, அதற்கு அடுத்த மாதம் அதாவது 28-11-2002 அன்று சென்னை மாநகராட்சியினுடைய மன்றக் கூட்டம் நடக்கிறது. அந்த மன்றக் கூட்டத்திலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித் துளிக்குள் முடித்துவிடுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மன்னிக்கவும், ஐந்து நிமிடங்கள் கொடுங்கள். மன்றக் கூட்டத்திலே கேள்வி நேரப்பகுதி. அந்தக் கேள்வி நேரப் பகுதியிலே ஆளுங்கட்சியாக இருக்கக்கூடிய அ.தி.மு.க. மாநகராட்சி மன்ற உறுப்பினர் திரு. செல்வநாயகம் அவர்கள், ஒரு கேள்வி கேட்கிறார், மன்றக் கூட்டத்திலே, அதாவது, நிலத்தைப் பற்றி, நிலத்தினுடைய நிலையைப் பற்றி ஒரு கேள்வி கேட்கிறார்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி மாமன்றத்திலே பேச வேண்டிய விஷயங்களையெல்லாம் இங்கே சட்டமன்றத்திலே பேசி அவையின் நேரத்தை வீணாக்கக்கூடாது என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஸ்டாலின், பேச்சை தொடங்குகிறபோது, இந்த நிதிநிலை அறிக்கை தொடர்பாக சொல்லவேண்டிய கருத்துக்களைச் சொல்லிக்கொண்டு வந்தீர்கள். நிதிநிலை அறிக்கையிலே சொல்லி முடியுங்கள், மற்றவற்றை மற்ற நேரங்களிலே பேசலாம். (குறுக்கீடு) அதற்குப் பதில் சொல்லி முடித்துவிடுங்கள். அதற்கு மட்டும் பதில் சொல்லி முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) பதிலை மட்டும் சொல்லி முடித்துவிடுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. நான் ஒன்றும் தப்பாகச் சொல்லவில்லை. அவர் சொன்னதைத்தான் வழிமொழிந்திருக்கிறேன். நான் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. அதாவது, அந்தக் கேள்விக்கு துணை மேயர் அவர்கள் மன்றத்திலே பதில் தந்திருக்கிறார். என்னவென்று கேட்டால்,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இதற்கு உங்களுக்கு பதில் சொல்ல துணை மேயர் இங்கே இல்லை.

**திரு. மு.க. ஸ்டாலின்:** சரி, அப்படியென்றால் நான் ஆதாரத்தைக் கொடுத்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி அதைக் கொடுங்கள். அதை நான் முதலமைச்சரிடம் கொடுக்கிறேன்.

(உறுப்பினர் கடித நகல் ஒன்றை மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் அளித்தார்.)

**திரு. மு.க. ஸ்டாலின்:** என்னைப் பொறுத்தவரையிலே, அவர் வைத்த கோரிக்கையைத்தான் வலியுறுத்துகிறேன்; வற்புறுத்துகிறேன்; வழிமொழிகிறேன். எனவே, விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டும் என்றுதான் முதலமைச்சரை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுதானே தவிர வேறொன்றும் அல்ல.

அடுத்து, ஜனநாயகத்தினுடைய நான்கு தூண்களாக விளங்கிக் கொண்டிருப்பதுதான் Pillars of democracy—என்று சொல்கிறோமே, சட்டமன்றம், நிர்வாகம், நீதிமன்றம், பத்திரிகைகள். சட்டமன்றத்தை இன்றைக்கு வழிநடத்திக் கொண்டு இருக்கக்கூடியவர் நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள். பேரவைத் தலைவருடைய இல்லத்தின் வாசலிலே அவருடைய உதவியாளர் ஒருவர் தாக்கப்பட்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஸ்டாலின், நான் சொல்வதைக் கேளுங்கள். அதற்கு உடனே நடவடிக்கை எடுக்கப்பட்டது. காவல் துறை விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. அதோடு முடியுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** நான் ஒன்றும் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. உண்மையான குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும். நிரபராதிகள் தண்டிக்கப்பட்டு விடக்கூடாது என்பதுதான் என்னுடைய கோரிக்கையே தவிர, வேறு அல்ல. அடுத்து, நிர்வாகம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஸ்டாலின், தாங்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னீர்கள். பேரவைத் தலைவருடைய வீட்டு வாசலிலே ஒன்று நடந்தது என்று சொன்னீர்கள். உடனடியாக குற்றவாளி கண்டுபிடிக்கப்பட்டார். காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டார். அதிலிருந்தே நாட்டிலே சட்டம் ஒழுங்கு சரியாக இருக்கிறது என்று தெரிகிறது. அதைவிட்டுவிட்டு, மேற்கொண்டு பேசுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து இன்றைக்கு நீதிமன்றத்தினுடைய கண்டனத்திற்கு அரசு ஆளாக்கப்பட்டிருக்கிறது. அதேபோல், தேர்தல் கமிஷனுடைய கண்டனத்திற்கும் நம்முடைய அரசு ஆளாக்கப்பட்டிருக்கிறது. எனவே, அதுகுறித்து எல்லாம் ஏற்கெனவே பத்திரிகைகளில் செய்திகளெல்லாம் வந்திருக்கின்றன. எனவே, நான் அதைப்பற்றிக்கூட அதிகம் விளக்கம் சொல்ல விரும்பவில்லை.

அதேபோல, பத்திரிகைகளைப் பொறுத்தவரையிலே எத்தனை வழக்குகளில் இன்றைக்கு அவர்களெல்லாம் சிக்கியிருக்கிறார்கள் என்பதையும் நாடு பார்த்துக்கொண்டிருக்கிறது. தினகரன் பத்திரிகை மீது, இந்து பத்திரிகை மீது, எக்ஸ்பிரஸ் பத்திரிகை மீது, இந்தியா டுடே பத்திரிகை மீதெல்லாம் பல்வேறு வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. எனவே, ஜனநாயகத்தினுடைய தூண்கள் இன்றைக்கு எந்த நிலையில் இருக்கின்றன என்பதை நாடு பார்த்துக் கொண்டிருக்கிறது.

கடைசியாக ஒன்றே ஒன்றை மாத்திரம் சொல்லி நான் முடித்துக்கொள்கிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று அரசு நிகழ்ச்சிகளிலே பங்கேற்று வரக்கூடிய நிகழ்ச்சி தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. அதிலே குறிப்பாக அண்மையிலே ஈரோடு மாவட்டத்திலே ஒரு அரசு நிகழ்ச்சியிலே பங்கேற்றபோது ஒரு கருத்தை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். என்ன கருத்து என்று கேட்டால், எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்களை நோக்கி இரண்டு கேள்விகளை அவர் கேட்டிருக்கிறார். அதிலே ஒன்று என்னைப் பற்றியது. கடந்த ஆண்டு கவர்னர் உரை நடைபெற்ற நேரத்திலேகூட, நம்முடைய உறுப்பினர்களுக்கெல்லாம் பதில் சொல்கிறபோது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அப்போதும் அந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள்.

*முற்பகல் 11-25*

நான், இதே அவையிலே கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்தபோது பேசியிருக்கிறேன். அப்போதுகூட, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு என்னைப் பார்த்து ஒன்றைக் கேட்டார்கள். இரண்டு பதவிகளில் இருக்கலாமா? மேயராக இருக்க வேண்டும். இல்லையென்றால் எம்.எல்.ஏ.-ஆக இருக்க வேண்டும். அதற்காக ஒரு சட்டத்தைக் கொண்டு வரப் போகிறோம். ஒருவர் இரண்டு பதவிகளில் இருக்கக் கூடாது என்று சொல்லி உடனே ஒரு சட்டத்தையும் இந்த அவையில் கொண்டுவந்து, அதற்குப் பிறகு ஆளுங்கட்சியினுடைய பெரும்பான்மை உறுப்பினர்களுடைய ஆதரவோடு அதை நிறைவேற்றி, கவர்னருடைய கையெழுத்தையும் பெற்று அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, மேயர் பதவி பறிக்கப்பட்டது எல்லோருக்கும் தெரியும். அது உயர் நீதிமன்றத்திற்குச் சென்று சட்டம் செல்லாது என்று தீர்ப்பு வந்திருக்கிறது. அதற்குப் பிறகு அரசு உச்ச நீதிமன்றத்திற்கும் சென்றிருக்கிறது. எனவே, நான் அந்தப் பிரச்சினைகளுக்குக்கூட அதிகம் செல்ல விரும்பவில்லை. ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள், நான் கேட்ட கேள்விக்கு முதலமைச்சர் முதலிலே பதில் சொல்லட்டும் என்று தெரிவித்தார்கள். அப்போதுகூட, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டார்கள்.**

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இது நிதிநிலை அறிக்கைக்குத் தொடர்பில்லை. நேரம் முடிந்துவிட்டது. டாக்டர் குமாரதாஸ். (குறுக்கீடுகள்) உங்களுடைய நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடுகள்)

*(திராவிட முன்னேற்றக் கழகத்தை சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவருக்கு வழங்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. 15 மணித்துளிகளுக்கு அதிகமாகவே பேசிவிட்டார். அதோடு முடியுங்கள். டாக்டர் குமாரதாஸ். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே நீண்ட கால உறுப்பினராக நானும் இருக்கிறேன். குறைந்தது அரை மணி நேரம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், எதிர்க்கட்சிக்கு 15 மணித்துளிகள். முதலிலே பேசக்கூடியவர்களுக்கு 15 மணித்துளிகள். (குறுக்கீடுகள்) அரைமணி நேரம் எல்லாம் கிடையாது. எப்பவும் கிடையாது. (குறுக்கீடுகள்) அரைமணி நேரம் கிடையாது. 15 மணித்துளிகள்தான். டாக்டர் குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேராசிரியர் சொல்லுங்கள்.

**•பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முறையான பேச்சு பேசி வருகிறபோது, எதிர்க்கட்சியின் சார்பாகத் தொடங்கி வைத்து பேசுகின்ற ஒரு பேச்சாளர் இரண்டு நிமிடம், நான்கு நிமிடம் அதிகம் பேசிவிட்டால் கூட ஒன்றும் தவறல்ல. ஆனால் உரிமையை திடீரென்று பறிப்பதன் மூலமாக, பேச்சு தடைப்படுவதன் மூலமாக, எதிர்க்கட்சி உரிமை பாதிக்கப்படுகிறது. ஆகவே அந்த இரண்டு நிமிடங்களில், இந்த அவையில் எத்தனையோ குறுக்கீடுகள் ஏற்பட்டு எவ்வளவோ நேரம் செலவாகிறது. இது சபாநாயகருடைய, அவைத் தலைவருடைய discretion. உங்களுடைய சொந்த எண்ண அடிப்படையில், உங்களுடைய கருத்து அடிப்படையில்

2 நிமிடம், 5 நிமிடம் அதிகம் அளிப்பது தவறல்ல. அதன்மூலமாக அவை மிக அமைதியாக நடைபெறுவதற்கு தாங்கள் வழிகாண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே அவருக்கு 5 மணித்துளிகள் என்று சொன்னேன். அதற்குப்பிறகு 2 மணித்துளிகள் கேட்டார்கள். கடைசியாக ஒரு வாக்கியத்தைச் சொல்லி முடியுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** திரும்பத் திரும்ப அதையே சொல்லிக் கொண்டிருக்கிறார். **நான் பதில் சொல்லிக்கொண்டு இருக்க வேண்டாம் என்றுதான் இத்தனை ஆண்டு காலம் பதில் கூறவில்லையென்று அவர்கள் குறிப்பிட்டார்கள். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மு.க. ஸ்டாலின், பொதுக்கூட்டங்களில் பேசக்கூடிய கருத்துகளை அப்படியே கொண்டு வந்து பேச ஆரம்பித்தால் (குறுக்கீடு) திராவிட முன்னேற்றக் கழக மேடைகளில் பேசியவற்றையெல்லாம் சொல்லலாம் (குறுக்கீடுகள்) அரசு விழாக்களில் பேசியவற்றையெல்லாம் (குறுக்கீடுகள்) சட்டமன்றத்திலே பேசிய கருத்துகளை நீங்கள் சொல்லுங்கள். கடைசியாக ஒரு வாக்கியத்தைச் சொல்லி முடிப்பதாக இருந்தால் முடியுங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் ஸ்டாலின் நிதிநிலை அறிக்கை சம்பந்தமாக கேட்ட ஒரு கேள்விக்கு இங்கே நான் பதில் தர விரும்புகிறேன்.

385 ஊராட்சி ஒன்றியங்களில் ஒவ்வொரு ஒன்றியத்திலும் குறைந்தபட்சம் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள ஒரு தொழில் துவங்கப்படும் என்று அறிவித்தீர்களே, அது என்னவாயிற்று, ஒன்றாவது தொடங்கப்பட்டதா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டார். அதோடு, புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று அறிவித்தீர்களே, அது என்னவாயிற்று என்று இன்னொரு கேள்வி கேட்டார். இரண்டும் ஒன்றுதான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் புரிந்துகொள்ளவில்லை. 385 ஊராட்சி ஒன்றியங்களில் ஒவ்வொரு ஒன்றியத்திலும் தலா குறைந்தபட்சம் ஒரு கோடி ரூபாய்க்கு ஒரு புதிய தொழிலைத்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

துவக்குவதுதான் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் (குறுக்கீடு) (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் நான் முடிக்கவில்லை. இதன் கீழ் முப்பத்தி.(குறுக்கீடு)

முற்பகல் 11-30

**திரு. கோ.சி. மணி:** ஒரே ஒரு விஷயம். அது வேளாண்மையைச் சார்ந்த தொழிலாக இருக்கிறது. (குறுக்கீடுகள்) நான், பதில் சொல்லக்கூடாதா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** ஆமாம்; வேளாண்மையைச் சார்ந்த தொழில்தான். நான் இன்னும் பதில் சொல்லி முடிக்கவில்லை. இந்தத் திட்டத்தின்கீழ், 33 தொழில்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு, 4 ஏற்கெனவே தொடங்கப்பட்டு, இப்போது இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோயம்புத்தூரில், Coconut shell powder manufacture-க்காக இரண்டு யூனிட்டுகளும், திருநெல்வேலியில், Desicated and Processed vegetables and fruits தயாரிக்கிற ஒரு யூனிட்டும், புதுக்கோட்டையில், அறந்தாங்கியில் ஒரு Modern Rice Mill ஆக, 4 யூனிட்டுகள் இப்போது இயங்கிக் கொண்டிருக்கின்றன. மொத்தம் 33 யூனிட்டுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு விடை சொல்லக்கூடிய எல்லா உரிமைகளும் இருக்கின்றது. இந்த விளக்கங்களை அவர் சொல்வதிலே, எங்களுக்கு எந்த மாறுபாடும் இல்லை. ஆனால், இவையெல்லாம், இந்தத் திட்டத்தின் பெயரால்தான் நடைபெற வேண்டுமென்ற அவசியம் இல்லை. இவையெல்லாம் வழக்கமாக நடைபெறுகிற காரியமே தவிர, இந்தத் திட்டத்தின் பெயரை இன்று சூட்டுகிறோமே தவிர, ரைஸ் மில் நடத்துவதோ, மற்றவையோ இந்தத் திட்டம் என்று கூறும்படி ஒரு சிறப்பு அடையாளமாக அமையவில்லை என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' என்று அறிவிக்கப்பட்டு, இதற்காக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் bids' offers வரவழைக்கப்பட்டு, அவை, மாவட்ட ஆட்சித் தலைவர்களால்

பரிசீலிக்கப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டு, அதன்கீழ்தான் இதுவரை 33 யூனிட்டுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு முதலமைச்சர் சொல்வதை அப்படியே ஒப்புக்கொள்கிறேன். ஆனால், இது ஒரு தனித் திட்டம் என்று சொல்வதற்கு அர்த்தம் இல்லை என்பதை, நான் உணர்வதைச் சொல்கிறேன். அது தவறாகவும்கூட இருக்கலாம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஸ்டாலின், கடைசியாக வாக்கியத்தை முடியுங்கள்; நிறைவுபடுத்துங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கை புத்தகத்திலே 33 தொழில் பிரிவுகளைத் தொடங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்த காரணத்தினால்தான், அந்தக் கருத்தை எடுத்துவைத்தேன்.

தமிழ்நாட்டிலே, இன்றைக்கு அனைத்து தரப்பு மக்களும், பல்வேறு நிலைமைகளுக்கு, பல கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டு இருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையிலே, இந்த நிதிநிலை அறிக்கை எப்படி இருக்கிறது என்று சொன்னால், 'வெந்த புண்ணில் வேல்பாய்ச்சுவது போல' அமைந்திருக்கிறது என்று ஒரே வரியில் சொல்லி, அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தேசிய இயக்கத்தில் இருந்த நாங்கள், அந்த இயக்கத்தினுடைய கொடுமை தாங்க முடியாமல், மக்கள் தலைவர் அய்யா மூப்பனார் அவர்களுடைய தலைமையின்கீழே செயல்பட்டு, தமிழ் மாநில காங்கிரஸ் பேரியக்கத்திலே எங்களை இணைத்துக்கொண்டு, செயல்பட்டுக் கொண்டிருந்த காலகட்டத்தில், நாங்கள் சார்ந்திருந்த இயக்கம், மீண்டும், தேசிய இயக்கத்திலே பலிக்கடாவாகின்ற சூழ்நிலையில், மக்கள் தலைவர் அய்யா மூப்பனார் அவர்கள், தாம் வாழ்ந்த அந்த இறுதிக் காலகட்டத்தில், நடந்துமுடிந்த பொதுத் தேர்தலிலே, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்து, 'அது மக்கள் விரோத சக்தி; இந்த நாட்டை ஆளுகின்ற தன்மையும்,

நல்லாட்சியைத் தருகின்ற மனோபக்குவமும், டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்குத்தான் உண்டு' என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கூட்டணியினை ஏற்படுத்தினார்கள். ஆனால், அன்றைய தமிழ் மாநில காங்கிரஸை சேர்ந்த நண்பர்கள், அத்தனையையும் மறந்து, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளரும், தமிழகத்தினுடைய...

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், உட்காருங்கள். நீங்கள் எதற்கு? அவருக்கு பாத்தியப்பட்ட கட்சியே கிடையாது. நீங்கள் உட்காருங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** ஹேமச்சந்திரன் அண்ணாச்சிக்கு அடிக்கடி பெருங்கோபம் வரும், சார். ஆக, எங்களைப் பொறுத்தவரைக்கும்... (குறுக்கீடு) நான் introduction-க்குத்தான் வந்திருக்கிறேன். இனிமேல் அறிக்கைக்கு வருகிறேன். ஆக, எங்களைப் பொறுத்தவரைக்கும், மீண்டும் தேசிய இயக்கத்திலே, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியோடு, தமிழ் மாநில காங்கிரஸை இணைக்கக்கூடாது என்று நாங்கள் வலுவாகக் குரல் கொடுத்தோம். ஆனால்...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவரே சொல்லிவிட்டார், 'முன்னுரைக்குதான் வந்திருக்கிறேன்' என்று. திரு. குமாரதாஸ். நிதிநிலை அறிக்கைக்கு நீங்கள் போய்விடுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** ஆனால், அத்தனையையும் உதாசீனப்படுத்திவிட்டு, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியை, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியோடு இணைக்கின்ற காலகட்டத்தில், நாங்கள் அதை எதிர்த்தவர்கள். ஒரு முடிவை எடுக்கக்கூடிய சூழ்நிலையில் நாங்கள் ஒரு முடிவினை எடுத்து, தனியாகச் செயல்பட்டோம். ஆனால், 'திக்குத் தெரியாத காட்டில் இருந்ததுபோல' நாங்கள் தனியாக, நான்கைந்து பேர் இணைந்து செயல்பட்டுக் கொண்டிருந்த காலகட்டத்தில், தமிழகத்திலே ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்திட வேண்டும்; தமிழகத்தை நல்வழிப்படுத்திட வேண்டும்; தமிழகத்தை இந்தியாவின் முதன் மாநிலமாக ஆக்கிட வேண்டுமென்கிற உணர்வோடு மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்கள் சொன்ன கோஷமான,

வளமான தமிழகம், வலுவான பாரதத்தை அமைக்க, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தலைமை தாங்கிக் கொண்டிருக்கின்ற எங்களது வணக்கத்திற்கும், போற்றுதலுக்கும் உரிய டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய இயக்கத்திலே நாங்கள் அனைவரும் எங்களைப் பொறுத்தவரைக்கும் இணைத்துக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொண்டர்களாகப் பணியாற்றுவது என்று செயல்பட்டு களம் இறங்கி இருக்கிறோம்.

*முற்பகல் 11-35*

கழிந்து முடிந்த தேர்தலிலே, சாத்தான்குளம் தேர்தலிலேகூட டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை அத்தனை சாத்தான்களும் ஒருமுகமாக எதிர்த்த நேரத்திலும், அவர்கள் சாத்தான்குளத்திலே மாபெரும் வெற்றியினைப் பெற்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சாத்தான்குளத்திலே அவர்கள் பெற்ற வெற்றி என்பது வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி. (குறுக்கீடுகள்)... எதிரிகளை உதிரிகளாக்கிய வெற்றி. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புகழேந்தி, நிதிநிலை அறிக்கையிலேயே சாத்தான்குளம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது தொடர்பாக அவர் பேசுகிறார். நீங்கள் பேசும்போது அவர்களுக்குப் பதில் சொல்லுங்கள்; பதில் சொல்லக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

**திரு. இ. புகழேந்தி:** இது என்ன அரசியல் கூட்டமா?

**டாக்டர் தே. குமாரதாஸ்:** எதிரிகளை உதிரிகளாக்கிய வெற்றி. அங்கே அம்மா அவர்களை எதிர்ப்பதற்கு நாதியில்லை என்கிற சூழ்நிலை சாத்தான்குளத்திலே மட்டுமல்ல, தமிழகத்திலேயும் இன்றைக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கிற ஒரு சூழ்நிலை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த இயக்கத்திலே இணைந்து இன்றைக்கு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின் அடிப்படையில், அவர்களுடைய அறிவுரைப்படி செயல்பட இருக்கிறோம்.

*2003-2004* ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் சில கருத்துகளை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். வேதாகமத்திலே ஒரு வசனம் வரும். என்ன சொல்லுவார்கள் என்றால், ஏசுபிரான் சொல்கிறார், "இராயனுக்கு உள்ளதை இராயனுக்கும்; தேவனுக்கு உள்ளதை தேவனுக்கும் செலுத்துங்கள்" என்று. அதனுடைய பொருள் என்னவென்று சொன்னால், அந்த நாட்டினுடைய மன்னன் ஆட்சி செய்து கொண்டிருக்கும்பொழுது, அவனுக்குச் செலுத்த வேண்டிய வரியினை நீ செலுத்து; மீதி உள்ள பணத்தை தேவனுடைய மகிமைக்காக

செலுத்து என்பதாகும்; அப்படி ஒரு வசனம் வரும். அதுபோல ஒரு அரசாங்கம் நடைபெறுகிறது என்று சொன்னால், அந்த அரசாங்கத்தை நடத்துவதற்கு வரிகள் தேவைப்படும். அந்த வரிகள் இல்லாமல் ஆட்சி செய்வது என்பது இயலாத ஒன்று.

தலைவர் காமராஜ் அவர்கள் தமிழகத்திலே ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, தமிழகத்தினுடைய வருமானம் 100 கோடி ரூபாய். ஆனால் இன்றைக்கு 22 ஆயிரம் கோடி ரூபாய் வந்திருக்கிறது என்று சொன்னால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே வரியே போடவில்லையா? ஏதோ, அவர்கள் குறை சொல்கிறார்கள். அவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு என்ன சொன்னார்கள் என்று சொன்னால், 'வரியைக் குறைப்போம்; வசதியைப் பெருக்குவோம்' என்று. செய்துவிட்டீர்களா? 'ரூபாய்க்கு ஒரு படி அரிசி நிச்சயம்; 3 படி இலட்சியம்.' செய்துவிட்டீர்களா? (குறுக்கீடுகள்) திராவிட முன்னேற்ற கழகத்தைப் பார்த்துக் கேட்கிறேன். (குறுக்கீடுகள்) இன்றைக்கு குற்றச்சாட்டுகளைச் சொல்கிறீர்களே, உங்களைப் பார்த்துக் கேட்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புகழேந்தி உட்காருங்கள். சொல்கிறேன். அவர் தேசிய இயக்கத்திலே இருந்து திராவிட இயக்கத்திற்கு இப்போதுதான் வந்து இருக்கிறார். அதனால் நிலைமைகளை எல்லாம் தெரிந்துகொண்டு, இன்னும் விளக்கமாகப் பேசுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. இது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்ததற்குப் பிறகு, அவர் பேசக்கூடிய கன்னிப் பேச்சு. அதனால் விட்டுவிடுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** 15 ஆண்டுகளாக சட்டமன்றத்திலே பேசிய பிறகு இப்போது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே நாங்கள் இணைந்த பிறகு ஆற்றுகிற, ஆளும் கட்சியின் சார்பிலே ஆற்றுகிற முதல் கன்னிப் பேச்சு.

***திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தெரிந்துதான் பேசுகிறாரா? ரொம்ப right.

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) உங்கள் மூலம் எங்கள் தோழர்களுக்கு ஒரு வேண்டுகோள்.**

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், உங்கள் தோழர்களுக்கே என் மூலமாகத்தான் வேண்டுகோள் விடக்கூடிய நிலைமையா? (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை. அவர்கள் ஆத்திரப் படக்கூடாது என்பதற்காக.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கூறிய உவமை அவைக்கு கண்ணியமாக இராது. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) அது வேண்டாம். வேறு உவமையைச் சொல்லுங்கள். தமிழிலே ஏராளமான உவமைகள் இருக்கின்றன. உவமை என்பது உயர்ந்தோர் பேச்சு. ஆகவே, ஓர் உயர்ந்த உவமையைச் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** இதில் என்ன இருக்கிறது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் சொன்ன உவமை நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ** புதுசா அந்த கட்சிக்குப் போயிருக்கிறார். ஆகையினாலே யார் கட்சி மாறினாலும், விட்டுவிடுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்ன சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** புதுசா அந்தக் கட்சிக்குப் போய் இருக்கிறார். ஆகையினாலே யார் கட்சி மாறினாலும் இப்படித்தான் வேகமாக முதலில் பேசுவார்கள். ஆகையினாலே அவர் பேசுகிறார். மறப்போம், மன்னிப்போம் என்று சொல்லி அதை மறக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். அவ்வளவுதானே தவிர, வேறு ஒன்றும் இல்லை. எங்களுக்கு இந்த மாதிரி பல பேச்சுக்களைக் கேட்டுப் பழக்கம்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் ஓர் உவமையைச் சொன்னார். அது அவருடைய தரத்தைக் காட்டுகிறது. அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. எனவே, என்னைப் பொறுத்தவரைக்கும், இங்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கையின்மீது சில கருத்துக்களைக் கூற நான் கடமைப்பட்டு இருக்கின்றேன். இன்றைக்கு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்... (குறுக்கீடு) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்...(குறுக்கீடு)

*முற்பகல் 11-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நன்மாறன், உட்காருங்கள். பேசி முடித்து விடட்டும், உட்காருங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிற நிதிநிலை அறிக்கையின்மீது.... (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு)

**டாக்டர் தே. குமாரதாஸ்:** ஆகவே, இந்த (குறுக்கீடு) நான் சாத்தான்கள் என்று உங்களை யாரும் சொல்லவில்லையே! சாத்தான்கள் என்றால் உங்களை ஏன் எடுத்துக்கொள்கிறீர்கள்? நீங்கள் சாத்தான்களா? எனக்குப் புரியவில்லை. அனைத்து சாத்தான்களும் என்றுதான் சொன்னேன். உங்களை சாத்தான்கள் என்று நீங்கள் ஏன் எடுத்துக்கொள்கிறீர்கள்? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழனிசாமி, அவர் நிதிநிலை அறிக்கைக்குப் போய்விட்டார். உட்காருங்கள். குமாரதாஸ், பேசுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆக, இன்றைக்கு இந்த பட்ஜெட் உரையின்மீது சில கருத்துகளை நான் கூற விழைகிறேன். இலவச மின்சாரம் இரத்து என்கிற சூழ்நிலையில், நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும், ஒரு வளமான பாதையில் தமிழகத்தைக் கொண்டு செல்ல வேண்டுமென்று சொன்னால், பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அம்மா அவர்கள் தன்னுடைய பிள்ளைகள் எப்படி இருந்தால் இந்த நாடு முன்னேறும், என்னென்ன துறைகளை வளப்படுத்துவதற்கு நாம் முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்கிற கருத்தாய்வு மூலம் சில

நன்மைகளைச் செய்திருக்கிறார்கள். சுகாதாரம் ஆனாலும் சரி, கல்வி ஆனாலும் சரி, மனிதநேயம் ஆனாலும் சரி, அதேபோல போக்குவரத்து வசதியானாலும் சரி, மின்சாரம் ஆனாலும் சரி, எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் காணவேண்டும் என்று பல அரிய திட்டங்களை இங்கே தந்திருக்கிறார்கள். அந்த அரிய திட்டங்களைப் பற்றி தெரிந்து கொண்டவர்கள், புரிந்துகொண்டவர்கள், நாட்டு மக்கள் பாராட்டுகிறார்கள். இன்றைக்கு ஏழையெளிய மக்கள் யாருமே இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி கவலைப்படவில்லை. இந்த நிதிநிலை அறிக்கையிலே ஏழையெளிய மக்களுக்கு எந்தவிதமான நேரடியான பாதிப்பும் இல்லாத ஒரு சூழ்நிலையில் இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி இவர்கள் வேதனைப்பட்டுக் கொண்டிருப்பது வேடிக்கையான ஒன்றாக இருக்கிறது.

இப்போது, 8000 கோடி ரூபாய்க்குப் புதிய மின் திட்டங்களை அறிவித்து இருக்கிறார்கள். வட சென்னைப் பகுதியிலே 4000 கோடி ரூபாய்க்கும், தூத்துக்குடி மாவட்டத்தில் 1000 கோடி ரூபாய்க்கும் மின் திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். பாராட்ட வேண்டாமா? இந்த 8000 கோடி ரூபாய் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று சொன்னால் எங்கிருந்து பணம் வரும்? ஆக, இப்படிப்பட்ட திட்டங்களை அறிவிக்கிறபோது, அதிலே எதிர்க்கட்சிகளுக்கு எப்போதுமே நல்ல திட்டங்களை எதிர்த்துதான் பழக்கமே தவிர, நீங்கள் கொண்டு வந்திருக்கிற திட்டங்களில் ஏதாவது ஒரு திட்டத்தை இந்தத் திட்டம் சிறப்புடையது என்று பாராட்டுகிற மனப்பக்குவம் இந்த எதிர்க்கட்சிகளுக்கு இதுவரைக்கும் இருந்திருக்கிறதா? இல்லை. ஆகவே, அவர்களைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம்.

யார் போற்றினாலும், இகழ்ந்தாலும், அவர்களைப் பற்றி கவலைப்படாமல் தமிழகத்தை இந்தியாவின் முதல் மாநிலமாக ஆக்கவேண்டும் என்கிற ஒரே இலட்சிய குறிக்கோளோடு செல்கிற உங்கள் பயணத்திற்கு நாட்டு மக்கள் துணை இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 100 சதவிகிதம் சாத்தான்குளத்தில் வாக்குப் பதிவு என்று சொன்னால், 65 சதவிகிதம் மக்கள் உங்களுக்கு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை, இரட்டை இலையை நம்பி வாக்கு அளித்திருக்கிறார்கள் என்றால், இதைவிட வேறு அத்தாட்சியோ, சான்றிதழோ நமக்குத் தேவையில்லை என்று நான் கருதுகிறேன்.

சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS

அடுத்து, இலவச மின்சாரம் இரத்து செய்யப்பட்டாலும் அது அந்த ஏழையெளிய விவசாயிகளை மீண்டும் பாதித்து விடக்கூடாது என்பதற்காக ஒரு ஹார்ஸ் பவருக்கு 250 ரூபாய் வீதம், 5 ஹார்ஸ் பவர் சக்தி கொண்டதற்கு 1250 ரூபாய் நீங்களே கொடுத்து, அதைச் செலுத்துங்கள் என்று சொன்னீர்கள்; ஏன் அப்படி செய்கிறீர்கள்? ஆணையம்; திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய காலத்திலே ஏற்படுத்தப்பட்ட மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அறிவித்த ஓர் உயர்வினை—இல்லை என்று சொன்னால், நீங்கள் வளர்ச்சித் திட்டங்களை அறிவிக்க முடியாது. மத்திய அரசிடமிருந்து பணம் கிடைக்காது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்தப் பணத்தை நாங்களாவது தந்து விடுகிறோம். இந்த மாநிலத்திலே பல ஆயிரம் கோடி ரூபாய்க்கு மின்சாரத் திட்டங்கள் வேண்டும் என்கிற காரணத்தால் இந்தத் திட்டத்தை அறிவித்து இருக்கிறீர்கள்.

அதுமட்டுமல்ல; கலைஞர் பல கால கட்டங்களிலே இந்த அவையிலே பேசி இருக்கிறார்கள். சம்சாரம் இல்லாமலும் வாழ்ந்து விடலாம், ஆனால் மின்சாரம் இல்லாமல் வாழ முடியாது என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட மின்சாரத்திற்குக் கொஞ்சம் வரியை அதிகப்படுத்தியவுடன் ஏன் இந்த அங்கலாய்ப்பு? இன்றைக்கு நாடு முதல் தரமாக செல்ல வேண்டுமென்று சொன்னால், தொழில் பெருக வேண்டும். தொழில் பெருக வேண்டுமென்றால் அதற்கு மின்சாரம் வேண்டும். அந்த மின்சார உற்பத்திக்கு இப்படிப்பட்ட ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கிறபோது ஏன் இந்த அங்கலாய்ப்பு? ஆக, நீங்கள் எடுத்திருக்கிற முடிவு, நாட்டு மக்கள் ஏற்றுக்கொண்ட ஒன்று. 9 இலட்சம், கிட்டத்தட்ட 10 இலட்சம் விவசாயிகள் பயன் அடைகிறார்கள். 6 கோடி மக்களிலே 5 கோடியே 90 இலட்சம் பேருக்கு எந்தவிதமான பலனும் கிடையாது. ஆகவே, 5 கோடியே 90 இலட்சம் மக்களுக்கு அரசின் சார்பில் எந்தவிதமான உதவிகளும் இல்லை. ஆக, இப்படிப்பட்ட சூழ்நிலையில் 10 இலட்சம் விவசாயிகளுக்கு, இப்படி இரத்து செய்து, அவர்களுக்குப் பணமும் கொடுக்கிற பெருந்தன்மை உலகளாவிய அளவிலே அம்மா உங்கள் ஒருவருக்குத்தான் இந்தப் பரந்த உள்ளம் இருக்க முடியும்; (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைகளை காப்பாற்றுகிற உள்ளம் இருக்க முடியும் என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-45

அதேபோல 5,000 கி.மீ. சாலைகளைப் புதுப்பிக்க ரூ.180 கோடி ஒதுக்கியிருப்பதை பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறோம். அதேபோல, தமிழை மைய அரசினுடைய ஆட்சி மொழியாக ஆக்க வேண்டுமென்கின்ற முயற்சி, தமிழை வைத்து வியாபாரம் செய்பவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற சவுக்கடி. தமிழை ஆட்சி மொழியாக ஆக்க வேண்டும் என்று குரல் கொடுத்து மத்திய அரசை வற்புறுத்தி வருகிற உங்களுடைய செயல்பாட்டை, தமிழ்பற்றை தமிழக மக்கள் ஒட்டுமொத்தமாகப் போற்றுகிறார்கள், வணங்குகிறார்கள், பாராட்டுகிறார்கள்.

அதேபோல, தமிழகத்தினுடைய வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு திட்டத்தை, சேதுசமுத்திர திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த வேண்டும் என்று மத்திய அரசை நீங்கள் வற்புறுத்தி இருக்கிறீர்கள். அதற்காக நீங்கள் நாடாளுமன்றத்திலே பணியாற்றியபோது கொடுத்த குரல் இப்போது நடைமுறைக்கு வருகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதை எண்ணி தமிழக மக்கள் பெருமைப்படுகிறார்கள், பாராட்டுகிறார்கள்.

சென்னையிலே உள்ள துறைமுகம் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்கிற கருத்தோடு மட்டுமல்லாமல், இரண்டாவது விமான நிலையத்தையும் அமைக்க வேண்டும் என்கிற ஒரு கோரிக்கையையும் வலியுறுத்தி இருக்கிறீர்கள். ஆகவே, தமிழகத்திலே இப்படிப்பட்ட செயல்பாடுகளும், சிந்தனைகளும் இருக்கும் என்று சொன்னால்தான் தமிழகத்தினை முதல் மாநிலமாக ஆக்கிட முடியும் என்கிற உங்களுடைய துணிச்சலான முடிவுக்கு, நீங்கள் எடுத்து வருகின்ற முயற்சிகளுக்கு, நாங்களும், தமிழக மக்களும் நன்றிக் கடன்பட்டவர்களாக பாராட்டிக்கொண்டு இருக்கிறோம்.

அதேபோல, சென்னை டைடல் பார்க் அருகில் இரண்டாவது தொழில் பூங்கா அமைப்பதற்கான முயற்சியை நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல் கடலூர் துறைமுகம் ரூ.250 கோடி செலவிலே மேம்படுத்துவதற்காக எடுத்து இருக்கிற திட்டத்தை தமிழக மக்கள் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

நெசவாளர் துயர் துடைக்க ஊக்கத் தொகையாக ரூ.83 கோடி ஒதுக்கப்பட்டு உள்ளதை தமிழக மக்கள் பாராட்டுகிறார்கள்.

ரூ. 2,900 கோடி செலவில், குளங்கள், குட்டைகள் நதிநீர்ப் பிடிப்புப் பகுதிகளில் உள்ள நீர் ஆதாரங்களை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை தமிழக மக்கள் பாராட்டிக்கொண்டு இருக்கிறார்கள்.

அதேபோல, கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு, காவல் துறையை நவீனப்படுத்த ரூ.130.90 கோடி அதிகமாக ஒதுக்கீடு செய்திருப்பதை நாட்டு மக்கள் பாராட்டிக்கொண்டு இருக்கிறார்கள்.

அதேபோல, உங்கள் ஆட்சியில் 148 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் புதிதாகச் செயல்படத் தொடங்கியிருப்பதை பெரிதும் பாராட்டுகிறார்கள்.

அதேபோல, மகளிர் மேம்பாட்டிற்காக சுய நிதிக் குழு கட்டமைப்பையும், தரிசு நில மேம்பாட்டு பணிகளையும், ஒருங்கிணைந்த ஊரக வளாகங்களிலே தொழில் நடத்துவதற்காக 385 வட்டங்களிலே சுய தொழில் தொடங்க ரூ.271 கோடி ஒதுக்கீடு செய்து அதற்கான முயற்சிகள் மேற்கொண்டு இருப்பதைத் தமிழக மக்கள் பாராட்டுகிறார்கள்.

தமிழகத்தில் 1.22 இலட்சம் சுய உதவிக் குழுக்கள் இப்போது இயங்கி வருகின்றன. அவற்றை மேலும் 25,000 குழுக்கள் உயர்த்தி, மகளிருக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்கிற உங்களுடைய பெரிய நோக்கும், அன்றைக்கு நாகர்கோவில் அரசு விழாவிற்கு நீங்கள் வந்து இருந்த நேரத்தில் ஆற்றிய உரை என்னுடைய காதிலே ரீங்காரமாகிக் கொண்டிருக்கிறது. நாட்டிலே ஏழை விவசாயக் குடும்பத்தைச் சார்ந்த அல்லது சுய உதவிக் குழுவிலே இருக்கிற பெண்கள், ஒட்டுமொத்தமாக தமிழகத்து பெண்கள், பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைவார்கள் என்று சொன்னால், நாட்டினுடைய பொருளாதாரம் முன்னேறும், நாட்டினுடைய வறட்சி நீங்கும், ஏழை எளிய மக்களுடைய இன்னல்கள் நீங்கும். எனவே, மகளிரினுடைய மேம்பாடு இந்த நாட்டினுடைய மேம்பாடு, உங்களுடைய பொருளாதார வளர்ச்சியை நீங்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கு இந்த அரசு துணையாக இருக்கும் என்று சொன்னதை தமிழகத்திலுள்ள ஒட்டுமொத்த மக்களும் நம்பி இந்த நாட்டிலே பொருளாதார மறுமலர்ச்சி மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் வரும் என்று எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள்.

அதேபோல் ரூ. 2,300 கோடி செலவில் மத்திய அரசின் ஸ்வஜல்தாரா திட்டத்தின்கீழ் ஊரகப் பகுதியில் குடிநீர் வழங்கும் திட்டத்தை நீங்கள் மேற்கொண்டு இருக்கிறீர்கள். அந்தத் திட்டத்தையும் மக்கள் பாராட்டிக் கொண்டு இருக்கிறார்கள்.

அதேபோல ரூ.367.22 கோடி மதிப்பீட்டில் 2,937 கி.மீ. தூரம் தரம் உயர்த்துவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சியையும் மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

ஊரகக் குடிநீர் வழங்குவதற்கான குறைந்தபட்சத் தேவையை பூர்த்தி செய்யும் திட்டத்தின்கீழ் ரூ.413 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோல பாசனம் குறித்த ஒதுக்கீடு கடந்த ஆண்டு ரூ.668.94 கோடி ஆக இருந்ததை இந்த ஆண்டு ரூ.748 கோடியாக ஒதுக்கீடு செய்ததை பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல கடும் வறட்சியை சமாளிக்க மழைநீர் சேமிப்புத் திட்டங்களை வருமுன் காப்போம் திட்டத்தைப்போல இந்த நாட்டிலே வறட்சி ஏற்படாமல் தடுப்பதற்கான கடும் முயற்சிகளை நீங்கள் மேற்கொண்டு இருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்காக 1.59 இலட்சம் பயன்படாத கிணறுகளை பயன்படுத்துகின்ற முகத்தான், மழை நீரை சேர்த்து வைக்கின்ற முகத்தான், எடுத்து இருக்கிற முயற்சிகளை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-50*

அதேபோல, நகர்ப்புறங்களிலே கழிவுநீர் அகற்றவும், சாலை மேம்பாடு, பேருந்து நிலையங்கள், சாலைகள் முதலியவற்றைச் சீரமைத்து நகர்ப்புற வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக ரூ.200 கோடி ஒதுக்கீடு செய்திருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருப்பூர் நகராட்சி மற்றும் அனைத்து கிராமங்களையும் ஒருங்கிணைத்து ரூ.1026 கோடி செலவிலே குடிநீர் திட்டத்தை தயாரித்து, ஆயிரக்கணக்கான மக்களுக்குப் பயனுள்ள விதத்திலே, இலட்சக் கணக்கான மக்களுக்குப் பயனுள்ள விதத்திலே இந்தத் திட்டத்தை நீங்கள் அறிவித்திருப்பதைக் கண்டு நாட்டு மக்கள் உங்களைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கான அடிக்கல்லையும் நீங்கள் நாட்டியிருப்பது இன்னும் சாலச் சிறந்ததாக இருப்பதாக மக்கள் கருதுகிறார்கள்.

அதைப்போல, 11 புதிய துணை மின் நிலையங்களை அமைப்பதற்காகவும், 8 துணை மின் நிலையங்களின் எரிசக்தி மாற்றிகளின் திறனை அதிகரிக்கவும், மாநிலத்தின் நகர்ப் பகுதிகளில் 696 புதிய மின் பகிர்வு மாற்றிகளை நிறுவுவதற்கும், ரூ.155 கோடி ஒதுக்கீடு செய்திருப்பதையும் மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

மாமல்லபுரம், ஊட்டி, கொடைக்கானல், கன்னியாகுமரி ஆகிய பகுதிகளிலே சுற்றுலா மேம்பாட்டிற்காக எடுத்துக்கொண்ட முயற்சிகளை மக்கள் பெரிதாகப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல, வறட்சியால் பாதிக்கப்பட்ட 28 மாவட்டங்களில் ரூ.341.92 கோடி செலவில் வேலைவாய்ப்புத் திட்டங்களை உருவாக்கி,

அரிசியாகவும், கூலியாகவும் கொடுக்கின்ற ஒரு பெரிய திட்டத்தை நீங்கள் நடைமுறைப்படுத்திக்கொண்டு இருப்பதற்காக மக்கள் உங்களைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த ஆண்டு தீபாவளியை முன்னிட்டு காவிரி டெல்டா பகுதியில் வாழ்கின்ற 10 இலட்சம் ஏழைக் குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கு, எல்லோரும் நாட்டிலே தீபாவளியைக் கொண்டாடிக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில் அவர்களுடைய வயிறு வாடிவிடக் கூடாது என்கிற காரணத்தினாலே சுமார் 21 கோடி ரூபாய்க்கு 10 இலட்சம் பேருக்கு தலா 210 ரூபாய் மதிப்புள்ள பரிசுப் பொருட்களை வழங்கியதற்காக இந்த நாட்டு மக்கள் உங்களைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் ஏழை விவசாயிகளுக்கு 30 கிலோ அரிசி வழங்கி தாயுள்ளத்தோடு காப்பாற்றி வருகின்ற உங்களை இந்த நாட்டு மக்கள் வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள், பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

ஊரக வீட்டு வசதித் திட்டத்தில் மாநில அரசின் பங்காக 28.37 கோடி ரூபாயில் 37,451 வீடுகள் கட்டித்தர திட்டம் போட்டு, செயல் திட்டம் வடித்துக் கொண்டிருக்கிற உங்களைத் தமிழக மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல் கிண்டி, அம்பத்தூர் தொழிற்பேட்டைகளின் மேம்பாட்டிற்காக ரூ.12 கோடி ஒதுக்கியதற்காகவும் நாட்டு மக்கள் உங்களைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலனுக்காக ரூ.1380 கோடி நிதி ஒதுக்கீடு செய்ததற்காக உங்களை நாட்டு மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். 385 புதிய சுகாதார துணை நிலையங்களை இந்த ஆண்டு கட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்காக இந்த நாட்டு மக்கள் உங்களைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல, கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 756 தொடக்கப் பள்ளிகளும், 676 நடுநிலைப் பள்ளிகளும் தொடங்கப்பட்டுள்ளன. 220 உயர்நிலைப் பள்ளிகளும், 260 மேனிலைப் பள்ளிகளும் தொடங்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 30 உயர்நிலைப் பள்ளிகளும், 30 மேனிலைப் பள்ளிகளும் தொடங்கப்படவுள்ளன. இதற்காக தமிழகத்தில் உள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள் உங்களைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

200 மேனிலைப் பள்ளிகளை கணினிமயமாக்கும் திட்டத்தின்கீழ் கொண்டுவரும் பெருமுயற்சியை இந்த நாடு பாராட்டிக் கொண்டிருக்கிறது.

அதேபோல, ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக 439 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ததை நாட்டு மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படி வளர்ச்சிப் பணிகள் என்று பார்க்கின்றபோது தமிழகத்தினுடைய வளர்ச்சியிலே நீங்கள் எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சிக்கு பெரும் பாராட்டு கிடைத்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்தில் சில கோரிக்கைகளையும் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். நீங்கள், உங்களுடைய தாயுள்ளம் இந்த நாட்டில் உள்ள யாரும் பசியால், பட்டினியால் வாடக்கூடாது என்கிற உயரிய நோக்கத்தின் அடிப்படையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிற காலகட்டத்தில், உங்களுடைய கவனத்திற்குத் தெரியாமல் அதிகாரிகள் அங்கொன்றும், இங்கொன்றுமாக சில தவறுகள் நடந்திருப்பதாக என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். குறிப்பாக, கருணை இல்லங்கள், மனநிலை பாதிக்கப்பட்ட குழந்தைகள், உடல் ஊனமுற்றோர், முதியோர் மற்றும் ஆதரவற்றோர் உதவிகள் காப்பகம் ஆகியவற்றிற்கு வழங்கப்பட்டு வந்த ரேஷன் பொருட்கள் இப்போது தடை செய்யப்பட்டிருப்பதாகச் செய்திகள் வருகின்றன. நிச்சயமாக இது அம்மா அவர்களுடைய கவனத்திற்கு வந்திருக்காது. எனவேதான் நான் உங்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வருகின்றேன்...

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான தகவலை அவைக்குத் தந்து கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குமாரதாஸ், நீங்கள் ஆளுங்கட்சி உறுப்பினர் என்பதை மறந்துவிடாதீர்கள். எதுவாக இருந்தாலும் எழுதிக் கொடுக்கலாம்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** நான் பதில் சொல்லிவிடுகிறேன். தவறான தகவல் அவைக் குறிப்பில் இடம்பெற வேண்டாம் என்கிற

காரணத்தால் நான் இந்த பதிலைச் சொல்ல விழைகிறேன். ரேஷன் பொருட்களினுடைய அளவை அதிகமாக்கித் தரவேண்டும் என்றுதான் கோரிக்கை வைத்திருக்கிறார்களே தவிர, ரேஷன் பொருட்கள் தருவது தடைப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதாக அரசினுடைய கவனத்திற்கு வரவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-55*

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்த தகவல் ஒருவேளை தவறாக இருக்கலாம். பொறுத்தருள வேண்டுகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தற்பொழுது ஆளும் கட்சியில் இருக்கிறார் என்பதைத் தங்கள் மூலமாக அவருக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இதுபோன்ற தகவல்கள் இனிமேல் அவருக்குக் கிடைத்தால் அதை என் கவனத்திற்கோ, சம்பந்தப்பட்ட துறை அமைச்சரின் கவனத்திற்கோ எடுத்துச் சொல்லலாம். அவற்றையெல்லாம் இந்த அவையில் எடுத்துக்கூற வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குமாரதாஸ், உரையை முடித்துவிடுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி. என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்ததை, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு போகவேண்டுமென்ற ஆவலில் சொன்னது. அது தவறாக இருக்கும்பட்சத்தில் பொறுத்தருள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, குளச்சல் துறைமுகம் அமைக்கவேண்டுமென்பது வெகுகாலமாக இருக்கக்கூடிய கோரிக்கை. அந்தக் கோரிக்கையையும் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

அதேபோல, தேங்காய்பட்டணம் பகுதியிலே மீன்பிடித் துறைமுகம் வேண்டும். இப்படி மாவட்டத்திலே பல்வேறு கோரிக்கைகள் இருக்கின்றன. அதேபோல, சுதந்திரப் போராட்டத் தியாகிகள், தாய்த் தமிழக போராட்டத் தியாகிகள் வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. இதையெல்லாம் உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் கழிந்த சட்டமன்றக் கூட்டத்தொடர் நடைபெற்றபோது ஓர் அறிவுரையை முன்னாள் முதல்வர் அவர்களுக்குச் சொன்னீர்கள். 'இலக்கியத்தில் இருந்தால் இலக்கியத்தில் இருக்கவேண்டும். அரசியலில் இருந்தால் அரசியலில் இருக்கவேண்டும்' என்ற ஒரு கருத்தினைச் சொன்னீர்கள். ஆனால் அதைக் கேட்டுக் கொண்டு, பொறுக்க முடியாத முன்னாள் முதலமைச்சர் (குறுக்கீடுகள்) கருணாநிதி கொடைக்கானலுக்குச் சென்றிருக்கிறார். கொடைக்கானலில் எங்கே சென்றிருக்கிறார் என்று சொன்னால், (கூச்சல்-குழப்பம்) தற்கொலை, சூசைட் பாயிண்ட் பகுதிக்குச் சென்று இருக்கிறார். (குறுக்கீடுகள்) அங்கே சூசைட் பாயிண்ட்டுக்குச் சென்ற நோத்திலே நமது மாண்புமிகு...... (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குமாரதாஸ், நிதிநிலை அறிக்கையோடு உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இது பட்ஜெட்டுக்கு relevant என்றால் பேசச் சொல்லுங்கள். Is it relevant to the budget? தயவுசெய்து உங்களைக் கேட்டுக்கொள்கிறேன், இல்லையென்றால் எடுத்துவிடுங்கள். இது பட்ஜெட் உரைக்கு சம்பந்தப்பட்டதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குமாரதாஸ், நிதிநிலை அறிக்கையோடு தொடர்புள்ள கருத்துகளைச் சொல்லி, பேச்சை நிறைவு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** அதாவது வேறு ஒன்றுமில்லை. அம்மா அவர்கள் அன்றைக்கு என்ன சொன்னார்கள் என்றால், 'இலக்கியத்தில் இருந்தால் இலக்கியத்தில் இருங்கள். அரசியலில் இருந்தால் அரசியலில் இருங்கள்' என்று சொன்னார்கள். அவர் சாத்தான்குளம் இடைத் தேர்தல் வரை பொறுத்திருந்தார். இடைத் தேர்தலில் தோல்வியைத் தழுவியவுடனே, சூசைட் பாயிண்ட்டுக்குப் போயிருக்கிறார். அங்கே நம்முடைய மில்லர் அவர்கள் காரிலே வருகிறார்கள். அப்போது சூசைட் பாயிண்ட்டுக்கு வந்தவுடனே, மில்லரைப் பார்த்து, அவர் முன்னாலே சூசைட் பண்ணிவிடக் கூடாது என்ற காரணத்தால் அங்கிருந்து...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணை தலைவர் அவர்கள், இது நிதிநிலை அறிக்கைக்கு சம்பந்தம் உள்ளதா என்று கேட்கிறார். கொடைக்கானல் பற்றி பேசினால், சுற்றுலாத் துறைக்கு சம்பந்தம் உடையதுதான் என்று எடுத்துக்கொண்டு, இதோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்களை நிறுத்திக் கொள்ளுமாறு தாங்கள் கேட்டுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதத்திலே கலந்துகொள்கிற வாய்ப்பை நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

புன்னகையு மின்னிசையு மெங்கொளித்துப் போயினவோ
இன்னலொடு கண்ணீ ரிருப்பாகி விட்டனவே!
ஆணெலாம் பெண்ணாய் அரிவையரெலாம் விலங்காய்
மாணெலாம் பாழாகி மங்கிவிட்ட திந்நாடே!
ஆரியர்கள் வாழ்ந்துவரும் அற்புத நா டென்பதுபோய்
பூரியர்கள் வாழும் புலைத்தேச மாயினதே!
வீமாதி வீரர் விளிந்தெங்குப் போயினரோ!
ஏமாறி நிற்கு மிழிஞர்களிங் குள்ளாரே!
வேத வுபநிடத மெய்ந்நூல்க ளெல்லாம்போய்
பேதைக் கதைகள் பிதற்றுவரிந் நாட்டினிலே!
ஆதி மறைக்கீதம் அரிவையர்கள் சொன்னதுபோய்
வீதி பெருக்கும் விலையடிமை யாயினரே!
செந்தேனும் பாலும் தெவிட்டி நின்ற நாட்டினிலே
வந்தே தீப்பஞ்ச மரபாகி விட்டதுவே!
மாமுனிவர் தோன்றி மணமுயர்ந்த நாட்டினிலே
காமுகரும் பொய்யடிமைக் கள்வர்களும் சூழ்ந்தனரே!
பொன்னு மணியுமிகப் பொங்கிநின்ற விந்நாட்டில்
அன்னமின்றி நாளு மழிவார்க ளெத்தனைபேர்!

என்று பாரதி பாடுகிறான். பாரதி பாடிய கூற்று, முன்பெல்லாம் எந்த அளவிற்கு இந்த நாடு செழிப்போடு இருந்தது என்பதை அவன் சொல்லி, பிறகு எப்படி அன்னம் இல்லாமல் எத்தனையோ பேர் இந்த நாட்டிலே அழிந்து கொண்டு..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், வெள்ளையர் ஆட்சிக் காலத்திலே பாடியது இது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் இப்பொழுது நினைவுபடுத்திய அந்தப் பாடல், முன்பு இங்கே காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, அரிசி இல்லாமல் மக்கள் தவித்தபோது, அரிசி கிடைக்கவில்லையென்றால் எலிக்கறி சாப்பிடுங்கள் என்று காங்கிரஸ் மந்திரி அன்றைக்கு சொன்னாரே, அந்தக் காலத்திற்குப் பொருத்தமுடையது என்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நண்பகல் 12-00

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காலத்திற்கும் மிகப் பொருத்தமாகி, எலிக்கறி சாப்பிட்டுக்கொண்டு காவிரி டெல்டா பகுதியிலே எத்தனை பேர் இன்று செத்து சுண்ணாம்பாகிக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காகத்தான் இதைச் சொல்லிக் கொண்டிருக்கிறேனே ஒழிய ...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி டெல்டா பகுதியில் யாரும் பட்டினியால் செத்து சுண்ணாம்பாகவில்லை. அத்தகைய ஒரு சூழ்நிலை தமிழகத்தில் இல்லை. எத்தனை முறை மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் அந்தக் குற்றச்சாட்டைச் சொன்னாலும் அது உண்மை அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தமிழகத்தில் இன்று மழை இல்லாமல் காவிரி டெல்டா பகுதியிலே இன்றெல்லாம் எப்படி விவசாயிகள் துன்புற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை ஓரளவிற்கு ஆளும் கட்சித் தரப்பிலே மறைத்தாலும்கூட, நீங்கள்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழை இல்லை என்பதை ஆளும் கட்சி எப்படி மறைக்க முடியும்? அதேநேரத்தில் மழை இல்லை என்பதற்காக அரசு மீது குற்றம் சொன்னால் அது எப்படிப் பொருத்தமாக இருக்கும்? மழை பெய்யவில்லை என்றால், அது இயற்கையின் குற்றம், அதற்கு மாநில அரசு எப்படி பொறுப்பாக முடியும்?

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கையின் குற்றம் ஒரு புறம். மறுபுறம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இயக்கமான காங்கிரஸ் பேரியக்கம் - கர்நாடக மாநிலத்தில் ஆளுகிற காங்கிரஸ் பேரியக்கம் - தமிழகத்து (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளை வஞ்சித்து தண்ணீர் தராமல் துரோகம் செய்ததற்கு என்ன காரியத்தை நீங்கள் செய்தீர்கள்? இங்கே இருக்கிற காங்கிரஸ்காரர்கள், உங்களது அன்னை சோனியா காந்தி என்ன காரியம் செய்தார்? தமிழகத்து மக்களுக்குத் துரோகம் இழைக்கவில்லையா?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் மற்ற பகுதிகளிலே நிலவுவது இயற்கையான வறட்சி. காவிரி டெல்டாப் பகுதியில் நிலவுவது செயற்கையான வறட்சி. கர்நாடகத்திலிருந்து காவிரி தண்ணீர் திறந்துவிடாததால் ஏற்படுத்தப்பட்ட செயற்கையான வறட்சி.

**திரு. போளூர் வரதன்:** ஒரு நிமிஷம். (குறுக்கீடு) நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் கர்நாடகத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றபோது அன்னை சோனியா காந்தி பற்றிக் குறிப்பிட்டார்கள். கர்நாடகம் காங்கிரஸ் ஆட்சி. இங்கே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி. தண்ணீர் வேண்டுமென்று சொன்னால் மாநிலத்தோடு மாநிலம் பேசவேண்டும். நம்முடைய முதலமைச்சர் எத்தனை முறை அந்த மாநிலத்து முதலமைச்சரை அழைத்துப் பேசினார்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றிப் பேசவேண்டும் என்பதற்காகத்தான் ஆணையம் அமைக்கப்பட்டிருக்கிறது. எதைப் பேசினாலும் அந்த ஆணையத்தில்தான் பேசவேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. அதனால்தான் ஆணையத்தில் பேசினோம். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. போளூர் வரதன், இப்போது திரு. ஞானசேகரன் பேசட்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமதி சோனியா காந்தி அவர்கள் அவருடைய இயக்கத்தைச் சேர்ந்த கர்நாடகா முதலமைச்சர் மாண்புமிகு கிருஷ்ணா அவர்களுக்கு ஆணையிட்டு, உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணையை நீங்கள் நிறைவேற்றுங்கள். கர்நாடகா இந்திய நாட்டிலே ஒரு தனி நாடாக இல்லை. அரசியல் சட்டத்தை மதியுங்கள். தமிழகத்துக்குத் தண்ணீர் தாருங்கள் என்று சொல்லியிருக்க வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றம் சொன்னதுபோல அந்த ஆணையத்திற்கு நம்முடைய முதலமைச்சர் தவறாமல் சென்றிருந்தால் நிச்சயமாக கூடியவிரைவிலே அதற்கான விடிவுகாலம் வந்திருக்கும். ஆனால் அதையும் தவிர்த்துவிட்ட காரணத்தால்...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆணையம் கூடியபோது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்றபோது, உங்களது இயக்கம்தானே கேரளத்து முதல்வரையும் அங்கே அனுப்பவில்லை; பாண்டிச்சேரி முதல்வரையும் அனுப்பவில்லை; தமிழகத்தைக் காட்டிக் கொடுத்து துரோகம் செய்தீர்களே அதை நாடு மறந்துவிடாது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *28* மாவட்டங்களை நீங்கள் வறட்சி மாவட்டங்களாக அறிவித்து மத்திய அரசிடம் அறிக்கை கொடுத்துக் கேட்பது *3527.92* கோடி. ஆனால் இந்த பட்ஜெட்டிலே நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஒதுக்கி இருப்பதோ *276* கோடி. *3527* கோடி எங்கே? வெறும்

276 கோடியை இப்போது நீங்கள் இந்த வறட்சி மாவட்டங்களுக்குக் கொடுத்து எப்படி இந்த மாவட்டங்களைக் கரையேற்றப் போகிறீர்கள்? வறட்சி மாவட்டங்கள் என்று அறிவித்துவிட்ட பிறகு, வரி, நில வரியையாவது ஓரளவிற்கு நீங்கள் தள்ளுபடி செய்திருக்கிறீர்களா என்று சொன்னால் அதுகூட கிடையாது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாவட்டத்தை வறட்சி மாவட்டம் என்று அறிவித்து விட்டாலே அந்த நில வரியை வசூல் செய்வது கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணியக்காரர் ஊர் ஊராகப் போய் வாங்கிக்கொண்டிருக்கிறாரே, வரியை எல்லா மாவட்டங்களிலும் வசூலித்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்குச் சான்றை நான் காட்டுகிறேன். (குறுக்கீடு) நீங்கள் எங்கே ஆணையிட்டீர்கள்? எல்லா கிராம நிர்வாக அதிகாரிகளும் இப்போது வரி வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 12-05

**திரு. ஜி. பழனிசாமி:** Point of Order......

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** இல்லை, இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வதைப்போல வறட்சி மாவட்டம் என்று அறிவிக்கப்பட்ட மாவட்டங்களில் நிலவரி வசூல் செய்வதில்லை. செஸ், சர்-சார்ஜஸ் (குறுக்கீடுகள்) No, No நில வரி வசூலிப்பது முழுமையாக நிறுத்தப்பட்டுவிட்டது. நில வரி வேறு, செஸ் வேறு. செஸ்ஸை வசூலிக்கலாம். அதிலே எந்தவித (குறுக்கீடுகள்) No, No. நில வரி வேறு, செஸ் வேறு, சர்-சார்ஜ் வேறு. முழுமையாக அனைத்து மாவட்டங்களிலும் அனைத்து வறட்சி மாவட்டங்களிலும் நிலவரி வசூலிப்பது நிறுத்தப்பட்டுவிட்டது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன், அமைச்சர் பேசியவுடன் நீங்கள் பேசி முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** அதெல்லாம் இல்லை. Cess வேறு, Sur-charge வேறு.

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நானே நில வரியைக் கட்டியிருக்கிறேன். (குறுக்கீடு) நானே கட்டியிருக்கிறேன். (குறுக்கீடு) நானே நில வரியைக் கட்டியிருக்கிறேன். அதுகூட தெரியாமலா அமைச்சர் பேசிக் கொண்டிருக்கிறார்?.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, பேசுங்கள், நீங்கள் பேசி முடியுங்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பாக வறட்சி மாவட்டம் என்று அறிவிக்கப்பட்டால் நில வரி வசூல் செய்யப்படுவதில்லை என்பதுதான் உண்மை. அப்படி உறுப்பினர் அவர்கள் ஏதாவது குறை இருந்தால் அதை அவர்கள் எழுத்துபூர்வமாகத் தெரிவித்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். ஞானசேகரன், அரசு தரப்பிலேயிருந்து தெளிவான விளக்கம் சொல்லப்பட்டுவிட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வறட்சி மாவட்டம் என்று அறிவிக்கப்பட்டுவிட்டால் நில வரி வசூலிப்பது கிடையாது என்று தெரிவித்துவிட்டார்கள். அரசு தரப்பிலே சொல்லப்படுவது ஏதாவது தவறு இருந்தால் எழுதிக் கொடுங்கள் என்றும் சொல்கிறார்கள். அதற்கு மேற்கொண்டு நீங்கள் ஏதாவது பேச வேண்டியிருந்தால் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** கூட்டுறவுக் கடன்களை வசூல் பண்ணிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, நீங்கள் பேசும்போது பேசுங்கள். உங்களுக்கு வாய்ப்பு வரும்போது பேசுங்கள், உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்தில் வறட்சி மாவட்டம் என்று 28 மாவட்டங்களை அறிவித்துவிட்டு விவசாயிகள் எவ்வளவு துன்பத்தில் இருந்து கொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழலில் திடீரென்று பாக்தாத்தில் விழுந்திருக்கிற அணுகுண்டைவிட மிக மோசமான அணுகுண்டாக இலவச மின்சாரத்தை இரத்து செய்வது எந்த விதத்தில் நியாயம் என்பதை இந்த அரசு விளக்க வேண்டும். சட்டமன்றத்திற்கு நீங்கள் நாள் குறித்துவிட்டீர்கள்....

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இலவச மின்சாரம் இரத்து செய்யப்பட்டது என்று சொன்னார்கள். ஆனால் இலவச மின்சாரம் இரத்து செய்யப்பட்டாலும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஒரு Horse Power-க்கு 250 ரூபாயிலிருந்து 3 Horse Power Motor வைத்திருந்தால் ஆண்டு ஒன்றுக்கு 750 ரூபாய் போடப்பட்டாலும், அவர்களுக்கு 1000 ரூபாய் அரசாங்கத்தின் சார்பிலே மானியமாக வழங்கப்படுகிறது. அதுமாதிரி 5 Horse Power Motor வைத்திருப்பவர்களுக்கு 1250 ரூபாய் அரசின் சார்பிலே மானியமாக வழங்கப்படுகிறது. அதுவும் முன்பணமாக அவர்கள் எந்தத் தேதியில் கட்ட வேண்டுமோ அதற்கு முன்பாக அரசாங்கத்தின் சார்பில் கொடுக்கப்பட்டு, இலவச மின்சாரம் இரத்து செய்யப்பட்டது என்பதைவிட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஏழை விவசாயிகளுக்கு மானியமாக கொடுப்பது இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லாத அளவிற்கு சிறப்பான முறையைக் கையாண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது Land Revenue பற்றி மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டார். ஒரு மாவட்டத்தை வறட்சி மாவட்டம் என்று அறிவிக்கின்றபோது பொதுவாக இந்த Kist எனப்படும் Kist Land Revenue-ஐ வசூலிப்பதில்லை. ஆனால் Final orders, இறுதி ஆணைகள் ஏப்ரல், மே வாக்கில் ஜமாபந்தி எனப்படும் நேரத்தில்தான்

வெளியிடுவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. ஆகவே இந்த பைனல் ஆர்டர்ஸை விரைந்து வெளியிடுமாறு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன் பேசட்டும். அவர் பேசிக்கொண்டு இருக்கிறார். *(குறுக்கீடு)* அவர் பேசிவிட்ட பிறகு பேசுங்கள். *(குறுக்கீடு)* ஞானசேகரன் பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடு)*.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், பேசுங்கள். *(குறுக்கீடு)*

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு clarification, மின் துறை அமைச்சரிடம் ஒரு clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச மின்சாரம்-மைக்கை-கொடுப்பா மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளராக இருந்து 1999-லே கொடுத்த தேர்தல் அறிக்கையானாலும் சரி, நாடாளுமன்றத்திற்கு, அல்லது 2001 நம்முடைய சட்டமன்ற தேர்தல் அறிக்கையானாலும் சரி இலவச மின்சாரத்தை இரத்து செய்யக்கூடிய ஷரத்துக்களை எல்லாம் நாங்கள் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி 29-வது செக்ஷனையே நாங்கள் எடுத்துவிடுகிறோம் என்றெல்லாம் முயற்சி எடுத்து தொடர்ந்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தைக் கொடுப்பதற்குப் பாடுபடும் என்கிற தேர்தல் அறிக்கையை 1999-லே விட்டீர்களே...

*பிற்பகல் 12-10*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த முரண்பாடும் இல்லை. இன்றைக்கும் சிறு குறு விவசாயிகளுக்குத் தொடர்ந்து இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது. ஏற்கெனவே இதுசம்பந்தமாக வெளியிட்ட அறிக்கையில் என்ன நிலைமை என்பதைத் தெளிவாக வெளியிட்டிருந்தேன். எங்களுக்கு முன்னால்

இருந்த தி.மு.க. அரசு State Electricity Regulatory Commission என்னும் ஆணையத்தை அமைத்துவிட்டது. அவர்கள் மத்திய அரசிடமிருந்து முன்பணமாக நிதியைப் பெற்றுக்கொண்டு ஒப்பந்தம் போடுவதற்கு ஒப்புக்கொண்டு விட்டார்கள். குறிப்பிட்ட தேதிக்குள் ஆணையத்திடம் tariff revision application சமர்ப்பிக்கப்படும், குறிப்பிட்ட தேதிக்குள் ஆணையம் அமைக்கப்படும், குறிப்பிட்ட தேதிக்குள் மீட்டர்கள் பொருத்தப்படும் என்றெல்லாம் முந்தைய அரசு ஒப்புக்கொண்டுவிட்டது. அதற்கான முன்பணத்தையும் பெற்றுக்கொண்டுவிட்டார்கள். ஆகவே, எங்கள் அரசு பொறுப்பேற்ற பிறகு அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்து போட வேண்டிய நிர்ப்பந்தம், கட்டாயம் எங்களுக்கு ஏற்பட்டது.

அதேநேரத்தில், சிறு குறு விவசாயிகள் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக இன்றையதினம் 3 எச்.பி. பம்புசெட்டுக்கு யூனிட்டுக்கு 20 பைசா என்ற கட்டணத்தை இந்த ஆணையம் விதித்திருக்கிறதே தவிர, அந்தக் கட்டணத்தைச் செலுத்துவதானால் ஒரு விவசாயிக்கு ஆகின்ற செலவு ஆண்டு ஒன்றுக்கு 750 ரூபாய். ஆனால், நாங்கள் அந்த சிறு விவசாயிகளுக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, சிறு விவசாயிகளுக்கு, 3 எச்.பி. பம்புசெட்டு வைத்திருப்பவர்களுக்கு உபரியாக 250 ரூபாய் கிடைக்க உள்ளது. அதுமட்டுமல்லாமல், 5 எச்.பி. பம்புசெட் வைத்திருப்பவர்களுக்கு ஆண்டுக்கு 1,250 ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும். அந்தத் தொகையையும் முழுவதுமாக அரசு வழங்கப் போகிறது. ஆகவே, இதற்கு என்ன அர்த்தம்? சிறு குறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தொடர்ந்து கிடைத்துக் கொண்டிருக்கிறது என்றுதானே அர்த்தம்? (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் எந்த முரண்பாட்டையும் இங்கே செய்யவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேச்சிற்கு ஞானசேகரன் விளக்கம் சொல்லட்டும் (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, Regulatory Board-னுடைய Recommendations-களை திராவிட முன்னேற்றக் கழகம் இருந்தால் ஏற்றுக்கொள்ளுமா, கொள்ளாதா என்ற விவாதத்திற்கு நான் போகவில்லை. அதனுடைய Recommendations-களை இந்த அரசு ஏற்றுக்கொண்டது. அது வேறு பிரச்சினை. ஆனால், இப்போது முதலமைச்சர் சொன்னார். 750 ரூபாய்தான் அவர்கள் கட்ட வேண்டும்,

ஆனால் ஆயிரம் ரூபாயாக தருகிறேன். 250 ரூபாய் உபரி என்கிறார்கள். ஏன் அரசாங்கம் அந்த சிறு குறு விவசாயிகள் கட்ட வேண்டிய அதை அவர்கள் கையிலே எக்ஸ்ட்ராவா 250 ரூபாய் கொடுத்து கட்டுகிறீர்கள். நான் மொத்தத்திற்கும் கேட்கிறேன். முன்பு எப்படி திராவிட முன்னேற்றக் கழகம் Electricity Board-க்கு அதனுடைய நஷ்டத்தை சர்க்காரே கொடுத்துவிடுமோ அப்படிக் கொடுக்காமல், இப்போது அவர்களிடத்திலே cash-ஆக அரசாங்கத்திலே adjustment-Book adjustment என்று சொல்வார்கள், நமக்கும் Electricity Board-க்கும், ஆகையினால் நேரடியாகச் கொடுக்காமல் Electricity Board-க்கு இப்படி மூக்கைத் தொடாமல், இப்படித் தொடுவதைப்போல, இவர்கள் பணத்தை விவசாயிகளுக்கு கொடுக்க, அவர்கள் கொண்டு போய் அதைக் கட்ட, இது இடையிலே பலது ice fruit கரைவதைப்போல, கரைந்து போக, இவ்வளவு பெரிய நிலைமை ஏன் ஏற்பட வேண்டும்? ஏன் உபரியாக 250 ரூபாய் தர வேண்டும்? அப்படியானால் அரசாங்கத்தில் நிறைய பணம் இருந்தால் வேறு மாதிரி கொடுங்கள். ஆகையினால் அரசாங்கம் திராவிட முன்னேற்றக் கழக அரசு எப்படி அவர்களுடைய நஷ்டத்தை ஏற்றுக்கொண்டதோ அதேபோன்று நீங்கள் செய்யாமல், இது ஏன் இப்படி ஒரு இருகல் வேலை என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் கேட்ட கேள்விக்கு நானாக பதில் சொல்லவில்லை. அவருடைய முன்னாள் மின்சாரத் துறை அமைச்சர் சொன்ன பதிலையே சொல்கிறேன். ஏன் அப்படிக் கொடுக்கக் கூடாது என்று சொல்வதற்கு நான் விளக்கமும் சொல்கிறேன். அவர் சொல்லியிருக்கிறார். 2000ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் தேதி இதே மன்றத்தில் பேசியிருக்கிறார். "இலவச மின்சாரத்தை இப்போது விவசாயிகளுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதுபோல, குடிசையிலே வாழக்கூடிய ஏழை எளியவர்களுக்கு ஒரு விளக்குத் திட்டத்திற்கு நாம் இலவசமாக மின்சாரம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். நான் உண்மையிலேயே சொல்கிறேன். குடிசையிலே வாழக்கூடியவர்கள் எவரும் ஒரு விளக்குடன் வாழ்வதில்லை. அவர்கள் வீட்டிலே ரேடியோ இருக்கிறது, அவர்கள் வீட்டிலே டி.வி. இருக்கிறது. சில வீடுகளிலே Grinder இருக்கிறது. அதுபோன்று தவறாகப் பயன்படுத்துபவர்களுக்கு நாம் இலவச மின்சாரம் கொடுக்கக்கூடாது." இப்போதும் சொல்கிறேன். (குறுக்கீடு) இருங்க, இருங்க, அதுதான் சொல்கிறேன், ஏன் கொடுக்கவில்லை என்பதற்குச் சொல்கிறேன். அதனால், குடிசை விளக்குகளுக்கு எரிகிற அந்த

மின்சாரத்திற்கு மட்டும் அரசு பொறுப்பேற்றுக்கொள்கிறது. இது போன்று mis-use செய்பவர்களுக்கும் கொடுக்க முடியாது. நீங்கள் சொல்வதைப்போல் கொடுத்தால் mis-use செய்கிற அந்த மின்சாரத்திற்குண்டான கட்டணத்தையும் அரசு கட்ட வேண்டியிருக்கும். அதை எப்படி நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியும்?. (குறுக்கீடு) No, No, இல்லை, இல்லை. (குறுக்கீடு) திருடன் திருடிக் கொண்டேதான் இருப்பான். அதைத் தவிர்க்க முடியாது. அதிகாரிகள் கண்காணிக்க முடியாது. எனவேதான் ஒரு குடிசைக்கு ஓர் ஆண்டுக்கு எவ்வளவு மின்சாரம் ஆகிறது என்பது கணக்கெடுக்கப்பட்டு அந்த மின்சாரத்தை மட்டும் நாங்கள் கொடுக்கிறோம். தவறாகப் பயன்படுத்துபவர்கள் இருப்பார்களேயானால் அந்தத் தொகையை அவர்கள்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும். அரசு ஏற்றுக்கொள்ளாது.

பிற்பகல் 12-15

**திரு. துரைமுருகன்:** 750 ரூபாய் கொடுக்க வேண்டிய இடத்தில் ஆயிரம் ரூபாயாக நாங்கள் தருகிறோம். 250 ரூபாய் அதிகப்படுத்தித் தருகிறோம் என்று பெருந்தன்மை காட்டுகின்ற நீங்கள், ஒரு குடிசையிலே இருக்கிறவன், பக்கத்தில் இன்னொரு விளக்கு போட்டுக்கொண்டால் அல்லது ரேடியோ வைத்துக்கொண்டால் அதை மறுக்க முடியாது அது எல்லா ஆட்சிகளிலும் இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், பழைய அரசில் இருந்ததைத்தான் பேசினார் அவர். துரைமுருகன், பழைய, (குறுக்கீடு) முன்னாள் அமைச்சர் சொன்னதைத்தான் அமைச்சர் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைகளுக்கு தற்போது இலவச மின்சாரம்தான் தரப்படுகிறது. அவர்களுக்காகத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் 100 ரூபாய் குடிசைக்கு என ஒதுக்கியிருப்பது. அதுவும் 90 ரூபாய்தான் ஆகின்ற செலவு. பத்து ரூபாய் அதிகமாகக் கொடுத்திருப்பது அவர்கள் பயன்படுத்தும் அனைத்து மின்கட்டணத்திற்கும்தான் அது பொருந்தும். குடிசைகளுக்கு இலவச மின்சாரம் என்பதுதான் நடைமுறையில் இருக்கிற ஒன்று. அதில் எந்தவித மாற்றத்தையும் நாங்கள் ஏற்படுத்தவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன். (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு explanation கொடுங்கள் சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன் பத்து மணித்துளிகள் கொடுக்கப்பட்டன. பாரதியார் பாடலோடு ஆரம்பித்தீர்கள். நீங்கள் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) திரு. மணி, வாய்ப்பு வரும்போது பேசலாம். (குறுக்கீடு) வாய்ப்பு வரும்போது தாராளமாகப் பேசலாம். (குறுக்கீடு) திரு. ஞானசேகரன் பேசட்டும். பேசுங்கள். (குறுக்கீடு) ஞானசேகரன் பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன் பேசுங்கள், பேசி முடியுங்கள். (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, Point of order.

**திரு. ப. ரங்கநாதன்:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன் பேசட்டும். (குறுக்கீடு) அவர் பேசட்டும் (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு அனைத்து கட்சி உறுப்பினர்களும் சிறு, குறு விவசாயிகள் எந்தவிதத்திலும் பாதிக்கப்பட்டுவிடக்கூடாது, இலவச மின்சாரம் அவர்களுக்குத் தொடர்ந்து வழங்கவேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களும் அதைத்தான் இன்றையதினம் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். நாம் நிதி நிலைமை மிகவும் மோசமான நிலையில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிற ஒரு காலகட்டத்தில் நின்று கொண்டிருக்கிறோம். அதற்கு உலக வங்கியினுடைய நிதியை, பல்வேறு வங்கிகளுடைய நிதியை நாம் பெறுவதற்குண்டான ஒரு சூழ்நிலை இங்கே இருக்கிறது. உலக வங்கி சில வரைமுறைகளை, சீர்திருத்தங்களை

நீங்கள் செய்தாக வேண்டுமென்று, சில பிரச்சினைகளை, கோரிக்கைகளை வலியுறுத்தி, அவற்றை நீங்கள் சரிப்படுத்திக் கொடுத்தால்தான் நாங்கள் உங்களுக்கு நிதியுதவி செய்வோம் என்று Norms Fix பண்ணியிருக்கிறார்கள். அப்போது நாம் சிறு, குறு விவசாயிகளையும் காப்பாற்ற வேண்டும், அவர்களுக்கு எந்தவிதத்திலும் இன்னல்கள் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதனை கருத்தில் கொண்டு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தீவிரமாக ஆலோசனை செய்து, சிறு, குறு விவசாயிகள், அவர்கள் பயன்படுத்துகின்ற மின்சாரத்தின் அளவு, அவர்கள் ஒரு வருடத்திற்கு எவ்வளவு கட்டணம், யூனிட்டுகள் செலவழிக்கின்றார்கள், எவ்வளவு மின்சாரத்திற்கு எவ்வளவு செலவுத் தொகை வருகிறது என்பதைக் கணக்கிட்டு 5 குதிரைத் திறன் இருக்கின்ற சிறு, குறு விவசாயிகள் 750 ரூபாய் என்று கணக்கில் வருகின்றபோது அவர்களுக்குக் கூடுதலாக ஆயிரம் ரூபாயாகவும் 5 குதிரைத் திறன் கொண்ட விவசாயிகள் பயன்படுத்துகிற மின்சாரத்திற்கு 1,250 ரூபாய் என்று இலக்கு வருகின்றபோது அரசாங்கமே அவர்களுக்கு அந்தத் தொகையைக் கொடுத்து அதைக் கட்டச் சொல்லியிருக்கிறது. அந்தவகையில், எந்தவகையிலும் தமிழ்நாட்டில் இருக்கின்ற சிறு, குறு விவசாயிகள் பாதிக்கப்பட்டு விடக்கூடாது, அவர்கள் பயன்படுத்துகின்ற மின்சாரத்திற்கு அவர்களுடைய நிதியை செலவழிக்கக்கூடாது, அதை அரசாங்கமே ஏற்றுக்கொள்ளும் என்ற நல்ல எண்ணத்தோடுதான் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உலக வங்கியினுடைய அந்த norms-களை சரி செய்ய வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு விவசாயிகளைக் காக்கின்ற வகையில்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) நேரமில்லை. பேசி முடிக்கட்டும் (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** Point of order, Please.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன சொல்லுங்கள்?

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது சொன்னார்கள். ஒரு யூனிட்டுக்கு 20 பைசா என்று. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது Point of order இல்லை. ஞானசேகரன் பேசுங்கள் (குறுக்கீடு) திரு. ஞானசேகரன் பேசுங்கள். பேசி முடியுங்கள். இது Point of order இல்லை. பேசுங்கள் (குறுக்கீடு) இல்லை, இல்லை. (குறுக்கீடு) ஞானசேகரன் பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..... (குறுக்கீடு)

*பிற்பகல் 12-20*

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன், பேசுங்கள். (குறுக்கீடுகள்) பேசி முடியுங்கள் (குறுக்கீடு) Point of order இல்லை (குறுக்கீடு) அதை இல்லையென்று சொல்லிவிட்டேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது Point of order இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை. ஞானசேகரன், பேசுங்கள். (குறுக்கீடுகள்) பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**டாக்டர் க. பொன்முடி:** Point of order...

**திரு. துரைமுருகன்:** அவர் Point of order கேட்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Point of order இல்லை.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான் இல்லையென்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) ஆமாம், அது முறை இல்லை. (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** No, No. அது Point of order தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன், பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** A member can raise a Point of Order at any time. So, Hon. Chair, நீங்கள் yield பண்ணுங்கள். Point of order இல்லை என்றால், இல்லை என்று சொல்லுங்கள். நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொல்ல ஆரம்பித்ததிலேயிருந்தே தெரிந்துகொண்டேன். அது Point of order இல்லை.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, நான் உங்களைப் பேச அனுமதிக்கவேயில்லை. Point of order-ம் இல்லை. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டத்துறை அமைச்சர், சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது இந்தத் தொகையை ஏன் சிறு, குறு விவசாயிகளுக்கு நேரடியாகக் கொடுக்க வேண்டும்; அரசாங்கம் ஏன் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கே அந்தப் பணத்தைச் செலுத்தக் கூடாது என்று கேட்கிறார். அரசாங்கம் நேரடியாக மின்சார வாரியத்திற்குக் கொடுப்பது என்றால், cross subsidy செய்ய வேண்டி வரும். அதாவது, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் என்று சொல்லுகிறோம். ஆனால், அதன் போர்வையில் பலர் அந்த மின்சாரத்தை தொழில்களுக்கு, வேறு பல பயன்பாடுகளுக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அது எல்லாம் விவசாயிகள் கணக்கில் எழுதிவிடுகிறார்கள். ஆகவே, ஒட்டுமொத்தத் தொகையை அரசாங்கம் மின்சார வாரியத்திற்குச் செலுத்த வேண்டுமானால் 2,600 கோடி ரூபாய்க்கு மேல் செலுத்த வேண்டியிருக்கும். அத்தகைய நிதி மாநில அரசாங்கத்திடம் இல்லை. அவ்வளவு பெரிய தொகையை நாம் செலுத்த முடியாது. நம்முடைய நோக்கம், நம்முடைய எண்ணம், இந்த அரசினுடைய இலக்கு சிறு, குறு விவசாயிகள் இலவசமாக மின்சாரத்தைப் பெற வேண்டும்.

இப்போது உலக வங்கி சில ஷரத்துக்களைப் போட்டிருப்பதால் அந்த ஷரத்துக்களுக்கு உட்பட்டு ஆணையம் சில விதிமுறைகளை விதித்திருப்பதால் அந்த விதிமுறைகளுக்கு உட்பட்டு நம்முடைய இலக்கை நாம் அடைய வேண்டும். விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்க வேண்டும். அதேநேரத்தில் இந்த ஷரத்துக்களை நாம் மீறக்கூடாது. இதற்கு என்ன வழி என்று யோசித்தோம். ஆகவே, இன்றையதினம் இந்த அரசு வகுத்திருக்கும் திட்டத்தின்படி யாருக்கு அந்த உதவி போய்ச் சேர வேண்டுமோ நேரடியாக அவர்களுக்குப் போய்ச் சேருகிறது. ஒரு சிறு விவசாயிக்கு 3 Horse Power Pumpset வைத்திருக்கும் ஒரு சிறு விவசாயிக்கு ஆண்டு ஒன்றுக்கு 750 ரூபாய் கட்டணம் வரும் என்று கணக்கிட்டு அவருக்கு 1,000 ரூபாய் கொடுக்கிறோம். அவரே அதைக் கொண்டு போய்ச் செலுத்துகிறார். ஆகவே, அந்தச் சட்டத் தேவையும் நிறைவு செய்யப்படுகிறது. அரசாங்கம் நேரடியாக அவர்களுக்குப் பணம் கொடுப்பதால், அதை உலக வங்கிக்கு

இலவச மின்சாரம் இல்லை என்று நாம் சொல்லிக்கொள்ளலாம். அதே நேரத்தில் விவசாயிகள் செலுத்தவேண்டிய கட்டணத்தை நாமே அவர்களுக்குக் கொடுத்துவிடுகிறோம். ஆகவே, அந்த விவசாயிகள் பயனடைகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு மேலும் 250 ரூபாய் கிடைக்கிறது. இதை ஏன் வழங்குகிறீர்கள் என்று மாண்புமிகு துரைமுருகன் கேட்கிறார். இந்த இலாபம் அடைகின்ற எந்த விவசாயிகளும் இதை வரவேற்கமாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்மூலம் நீங்கள் விவசாயிகளுக்கு எதிரான ஒரு போக்கை மேற்கொண்டிருக்கிறீர்கள் என்றுதான் விவசாயிகள் கருதுவார்கள் என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, 5 Horse Power Pumpset வைத்திருக்கின்ற விவசாயிகளுக்கு ஆண்டுக்கு 1,250 ரூபாய் கட்டணம் ஆகிறது என்று சொன்னால், அந்தத் தொகையை அரசாங்கமே கொடுத்து விடுகிறது. இதன்மூலம் யாருக்கு இந்த உதவி போய்ச் சேர வேண்டுமோ, அவர்களுக்கு மட்டும் இந்த உதவி போய்ச் சேரும். மின்சாரம் திருட்டு போகிறது. அது தடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள ஒரு 3 Horse Power உள்ள Pumpset வைத்திருப்பவர்களுக்கு 750 ரூபாய் ஆகும். ஆகவே, 250 ரூபாய் அதிகம் கொடுக்கிறோம்; அதை வேண்டாம் என்று சொல்கிறாரே துரைமுருகன்; அது விவசாயிகளுக்கு எதிர்ப்பா என்று கேட்கிறார். நான் வரவேற்கிறேன். ஆனால், 5 Horse Power உள்ள Pumpset வைத்திருப்பவர்களுக்கு 1,250 ரூபாய்தான் கொடுக்கிறீர்கள். அதை நீங்கள் 1,500 ரூபாய் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் சொன்ன.....

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது விவசாயிகளுக்கு இருக்கிற சந்தேகம் எல்லாம் அரசு அறிவித்திருக்கக்கூடிய திட்டம் என்பது நமக்கு நிச்சயமாகத் தொடர்ந்து கிடைக்காது; இது ஏமாற்றுத் திட்டம் என்று சொல்கிறார்கள் அதற்கு

விளக்கம் சொல்கிறேன். எந்த வகையிலே என்று சொன்னால், வறட்சியால் பாதிக்கப்பட்ட சிறு, குறு விவசாயிகளுக்கு, விவசாயத் தொழிலாளர்களுக்கு, குடும்பத்திற்கு 30 கிலோ அரிசி என்று சொல்லப்பட்டது. ஆனால் எந்தவகையிலே அந்த ஏழை விவசாயிகளுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் சென்றடைந்தது? ஒரு மையத்திற்கு ஐம்பது பேர் என்று சொல்லி அதிலேயும் குறிப்பாக ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)

*முற்பகல் 12-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இல்லை இப்போது பிரச்சினை எங்கெங்கேயோ போகிறது. ஞானசேகரன் (குறுக்கீடு) இதைப்பற்றி விரிவாக நீங்கள் பேசும்போது பேசுங்கள். உங்களுக்கு வாய்ப்பு வரும்போது பேசுங்கள். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் தவறான தகவலை அவைக்குச் சொல்கிறார். ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்குத்தான் அந்த 30 கிலோ அரிசி கொடுப்பதாகக் கூறுகிறார். அது மிகத் தவறான ஒன்று. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். என்ன ஆதாரத்தின் அடிப்படையில் அவர் கூறுகிறார்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு குற்றச்சாட்டு என்று குறிப்பிடுகிற போது, (குறுக்கீடு) மணி, ஜி.கே. மணி (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** குற்றச்சாட்டா (குறுக்கீடு) அண்ணா தி.மு.க., ஆளுங்கட்சியைப் பொறுத்த.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜி.கே. மணி, (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மையத்திற்கு ஐம்பது பேர்தான் என்ற குற்றச்சாட்டு ஏற்கெனவே இந்த அவையில் கடந்தமுறை கூட்டத்தொடர் நடைபெற்றபோது கூறப்பட்டு அப்பொழுதே அதற்கு விளக்கமும் கூறப்பட்டுவிட்டது. அது

உண்மையல்ல. மீண்டும், மீண்டும் பதிவு செய்து கொள்வதற்கான தேதி நீட்டிக்கப்பட்டு, காலக்கெடு மேலும் மேலும் நீட்டிக்கப்பட்டு கடைசியில் 14 இலட்சம் பேர் பதிவு செய்துகொண்டு இருக்கிறார்கள். அந்த 14 இலட்சம் குடும்பங்களுக்கும் தற்போது 30 கிலோ அரிசி ஒரு மாதத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன். இன்னும் மூன்று நிமிடத்தில் முடியுங்கள். ஏழு பேர் பேச வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** 14 இலட்சம் பேர் என்று சொன்னால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களே, நீங்கள் பேசக்கூடிய வாய்ப்பு வருகிற நேரத்தில் நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு வாய்ப்பு வருகிற நேரத்தில் நீங்கள் பேசுங்கள். ஞானசேகரன், பேசி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** என்னைப் பேச விடவேமாட்டேன் என்கிறார்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடியுங்கள். இன்னும் மூன்று நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின்சாரத்தைக் குறித்து நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் முதன்முதலிலே வெள்ளை அறிக்கை வைத்தபோது இலவச மின்சாரத்திற்காக, ஆண்டுக்கு, நாங்கள் மின்சார வாரியத்திற்கு 3,208 கோடி ரூபாயைச் செலுத்துகிறோம் என்று சொன்னார்கள். இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லுகிறபோதுகூட இலவச மின்சாரம் விவசாயிகளுக்கு 2,600 கோடி ரூபாய் கட்ட வேண்டியிருக்கிறது என்கிற கருத்தைச் சொன்னார்கள். ஆனால் இப்போது நீங்கள் இதற்காக இந்த பட்ஜெட்டிலே ஒதுக்கியிருப்பது நூறு கோடி ரூபாய். இந்த நூறு கோடி ரூபாய் (குறுக்கீடு)...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை விவசாயிகள் பம்ப் செட்டுகள் வைத்து

இருக்கிறார்கள் என்பதைக் கணக்கிட்டு இருக்கிறோம். அவர்களில் எத்தனை பேர் சிறு, குறு விவசாயிகள் என்று கணக்கிட்டு இருக்கிறோம். அதன்படி பார்த்தால் இந்த 100 கோடி ரூபாய் போதுமானது. அதற்குத் தேவையானதை ஒதுக்கியிருக்கிறோம்; அவ்வளவுதான்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரத்தை ரத்து செய்ய மத்திய அரசு அவசர சட்டத்தைப் பிறப்பித்தபோது கழகப் பொதுச் செயலாளர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கடுமையாகப் போராடி விவசாயிகளுக்கு எதிரான அந்த ஷரத்தை வாபஸ் பெறவைத்ததை நினைவூட்டுவதோடு, எதிர்காலத்தில் தொடர்ந்து விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கிடைக்க கழகம் பாடுபடும் என்று மிகத் தெளிவாகத் தேர்தல் அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக இப்போது மற்ற விவசாயிகள், சிறு, குறு விவசாயிகளை நீங்கள் கணக்கு எடுக்கிறபோது அது சரியாக வருமா என்பதைப் பார்க்க வேண்டும். நீங்கள் இலவச மின்சாரத்தைக் கொடுக்கிறோம் என்று இதே அவையிலேகூட மீட்டர் பொருத்த வேண்டாம் என்று சொன்னபோது அமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள்? அரசு என்ன சொன்னது? மின்சாரம் எவ்வளவு செலவிடுகிறார்கள் என்று கணக்கு பார்ப்பதற்காகத்தான் மீட்டர் பொருத்துகிறோம், இலவச மின்சாரம் இரத்து ஆகாது என்று சொன்னார்கள். ஆனால், சட்டசபைக்கு தேதி குறிப்பிட்ட பின்னால் இங்கே விவாதத்திற்குக்கூட எடுத்துக்கொள்ளாமல் நீங்கள் திடீரென்று ஒரு புறக்கடை வழியாகச் சென்று இங்கே, ஒரு கமிஷன் மூலமாக இப்படி நீங்கள் திடீரென்று இலவச மின்சாரத்தை இரத்து செய்வது, மின் கட்டணத்தை உயர்த்துவது, அதேபோல் குடிசைகளுக்கு இருக்கக்கூடிய மின்சாரத்தை இரத்து செய்வது என்பது எல்லாம் நிச்சயமாக நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றலல.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன். இலவச மின்சாரம் சிறு, குறு விவசாயிகளுக்கு இரத்து செய்யப்படவில்லை. தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது. புரட்சித் தலைவி அவர்கள் அதற்கான நடவடிக்கைகள் எடுத்து இருப்பதை நாடு அறியும். அவைக்குத் தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் தொடர்ந்து தர வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

2003 மார்ச் 24]

**திரு. துரைமுருகன்:** ஒரே ஒரு (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் சொல்கிறபோது Electricity Board-க்கு கவர்மெண்டே பணம் கொடுத்தால் இரண்டாயிரத்துச் சொச்சம் கோடி கட்ட வேண்டியதாக வரும். அது அவர்களால் முடியாது என்று சொன்னார்கள். சரி பரவாயில்லை. இப்போது 100 கோடி ரூபாய்தானே ஒதுக்கியிருக்கிறீர்கள் என்று திரு. சி. ஞானசேகரன் கேட்டவுடனே சிறு, குறு விவசாயிகளுக்கு அது போதும் என்று சொல்கிறார்கள். விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கொடுப்பதற்குத்தான் நாங்கள் சொல்கிறோம். அதைத்தான் அவர்கள் கையில் கொடுத்து, விவசாயிகளை Electricity Board-ல் கட்டச் சொல்கிறீர்கள். ஏன் நீங்களே கட்டவில்லை என்று கேட்டால் இரண்டாயிரம் சொச்சம் கோடி வேண்டும் என்றார் முதலமைச்சர். இப்போது நூறு கோடியே போதும் என்று சொல்கிறார்கள். எது உண்மை என்பதை கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கள்.

*பிற்பகல் 12-30*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஒரு முன்னாள் அமைச்சர், மெத்த படித்தவர், அவருக்குப் புரியவில்லையா? அல்லது புரியாததுபோல் நடிக்கிறாரா என்று தெரியவில்லை. நான் ஏற்கெனவே சொன்னேன், தமிழக அரசு நேரடியாக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குப் பணம் செலுத்துவதானால் அதில் Cross subsidy செய்ய வேண்டி வரும்....Cross subsidy எல்லாம் சேரும்போது 2,000 கோடி ரூபாய் வரும். அந்த அளவுக்குச் செலுத்த முடியாது. ஏனென்றால் ஒட்டுமொத்தமாக இலவச மின்சாரத்திற்கு மாநில அரசு மின்சார வாரியத்திற்குப் பணம் கட்டுவதானால் யார் யாரோ அந்த மின்சாரத்தைத் திருடிக் கொண்டிருக்கிறார்கள். Commercial establishment-களுக்கு, கடைகளுக்கு, ஓட்டல்களுக்கு, சிறு தொழில்களுக்கு என்று அந்த மின்சாரத்தை இழுத்து பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்கெல்லாம் இந்த அரசு நிதி வழங்க முடியுமா? அதைத் தவிர்பதற்காகத்தான் யாருக்கு இலவசமாக மின்சாரம் கிடைக்க வேண்டுமோ, அந்தச் சிறு குறு விவசாயிகளுக்குக் கிடைப்பதற்கு ஆவன செய்திருக்கிறோம். ஓர் உவமையைச் சொல்லுகிறேன், ஓர் உதாரணம் சொல்லுகிறேன். அப்போதாவது புரியும் என்று நம்புகிறேன்.

கூட்டுறவுக் கடன்கள், கூட்டுறவு வங்கிகள் மூலம் கடன் வழங்க வேண்டுமானால் நபார்டு அதற்கு நிதி வழங்க வேண்டும். நபார்டு ஒரு

ஷாத்து போடுகிறது, விவசாயிகள் பெறுகின்ற கூட்டுறவுக் கடன்களை தள்ளுபடி செய்யக்கூடாது, அப்படித் தள்ளுபடி செய்தால் நபார்டு நிதி வழங்காது என்று சொல்லுகிறார்கள். அதற்கு ஒரு வழி கண்டுபிடித்தோம். மாநில அரசே அந்தக் கடன்களுக்கான தொகையை வங்கிகளுக்குச் செலுத்திவிட்டது. ஆகவே, விவசாயிகளின் கடன் தள்ளுபடி என்று சொல்லாமல், அவர்களுக்குத் தள்ளுபடி கொடுத்துவிட்டு, அவர்கள் செலுத்த வேண்டிய கடனை மாநில அரசு செலுத்தியது. இப்போது ரிவர்ஸ் நடைபெறுகிறது. இப்போது விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கொடுக்கக்கூடாது என்கிறார்கள். அதேசமயம் இலவச மின்சாரம் கொடுத்தாக வேண்டும். ஆகவே அந்த மின்சாரத்திற்கான கட்டணத்தைச் செலுத்துவதற்கு மாநில அரசே பணத்தை விவசாயிகளின் கைகளில் கொடுத்து நீங்கள் கட்டுங்கள் என்கிறோம். இதில் என்ன தவறு? (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்படி சுற்றிப் பேசினாலும் இதுதான். எப்படி World Bank-ஐ ஏமாற்றுவது என்பதுதான் இதில் பிரச்சினை. நாம் கடன் வாங்கலாம். அது வேறு விஷயம். அதை விட்டுவிடுங்கள். ஆனால் ஒன்று கேட்கிறேன். 100 கோடி இருந்தால் போதும் இந்தச் சிறு, குறு விவசாயிகளுக்குக் கட்டுவதற்கு என்று முதலமைச்சர் சொன்னார். Cross subsidy எவ்வளவு என்றால்—Cross subsidyயோடு கட்டணம் ஏன் நீங்கள் கட்டவில்லையென்றால், இரண்டாயிரத்துச் சொச்சம் கோடி வேண்டுமென்று சொன்னார்கள். அப்படியானால் 100 கோடியைக் கழித்துவிட்டால் 1,900 கோடி ரூபாயா Cross subsidy-ல் போய்க்கொண்டிருக்கிறது? அப்படியானால் அவ்வளவு திருடா நடக்கிறது? இவ்வளவு திருடு நடப்பதைக் கண்டுபிடிக்காமல் இந்த Electricity Board என்ன செய்துகொண்டிருக்கிறது? அந்த அமைச்சர் என்ன செய்கிறார்? இந்த ஆட்சி என்ன செய்கிறது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, இல்லை, நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்பு ஐந்தாண்டு காலம் தி.மு.க. அரசு இருந்தபோது இந்த Cross subsidy-யை எல்லாம் கண்டுகொள்ளாமல் விட்டதால்தான் மின்சார வாரியம் திவாலாகும் நிலைமைக்கு வந்து, நாங்கள் 2001-ல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது 5000 கோடி ரூபாய்

நஷ்டத்தில் மின்சார வாரியம் தவித்துக் கொண்டிருந்தது, இயங்கிக் கொண்டிருந்தது. மேலும் அதை இயக்கமுடியாத ஒரு நிலைமை ஏற்பட்டதால்தான் நிலைமையை எவ்வாறு சரி செய்வது, சீர் செய்வது என்று ஆலோசித்துதான் இந்த நடவடிக்கையை இப்போது எடுத்திருக்கிறோம். நீங்கள் செய்த தவறை நாங்கள் திருத்துகிறோம்.

**திரு. துரைமுருகன்:** நீங்களும் இதை ஒத்துக்கொண்டீர்களே என்பதுதான். நாங்கள் செய்த தவறுதான். நீங்கள்தான் ஆட்சிக்கு வந்துவிட்டீர்களே, நல்லது செய்கிறோம் என்று. ஏன் நீங்கள் செய்யக்கூடாது? அவ்வளவுதான் கேட்கிறோம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு, குறு விவசாயிகள் என்று நீங்கள் சொல்லுகிறபோது . . .

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் முதலில் 2,600 கோடி என்றீர்கள், பின்னர் 100 கோடிதான் விவசாயிகளுக்காக ஒதுக்கியிருக்கிறீர்கள். மீதம் உள்ள தொகை என்னவாயிற்று என்று கேட்டார். Revised estimates for 2002-2003-ல் 1962 கோடி ரூபாய்க்கு provision செய்யப்பட்டிருக்கிறது. "This is to settle the old pending bills of the T.N.E.B. due to Central Undertakings. This will settle the finances of the T.N.E.B. Hereafter T.N.E.B. will have to operate on a commercially viable basis. So, the State will only help the small and marginal farmers for the charges levied by the Regulatory Commission." உங்களுக்குத் தேவையான விடை இதில் கிடைத்துவிட்டது என்று கருதுகிறேன்.

**திரு. துரைமுருகன்:** கடைசியிலே விவசாயிகளுக்குத்தான் கோடி கோடியாக கொடுத்துக்கொண்டிருக்கிறோம் என்று இல்லாமல் 100 கோடிதான் விவசாயிகளுக்குப் போகிறது என்பது இப்போது தெரிந்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், இரண்டு மணித் துளிகளில் உரையை முடித்துக்கொள்ளுங்கள். இன்னும் 7 பேர் பேச வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்னும் பேசவே இல்லையே.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்குப் பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்தை அவர் ஏற்படுத்தியிருக்கிறார். விவசாயிகளுக்கு, சிறு, குறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவோம் என்றுதான் சொன்னோமே தவிர, இத்தனை கோடி ரூபாய்க்கு வழங்குவோம் என்று சொல்லவில்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், மற்ற அமைச்சர்கள் எல்லாம் சொல்லுகிறபோது சிறு, குறு விவசாயிகளைப் பற்றியே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நான் ஒரு விவசாயி. நான் 100 ஏக்கர் வைத்திருந்தாலுங்கூட உழவனுக்கு உழக்குக்கூட மிஞ்சாத ஒரு காலகட்டம். எந்தப் பயிர் செய்தாலும், எங்களாலே செலவு செய்த பணத்தைக்கூட எடுக்கமுடியாமல் நாங்கள் தத்தளித்துக் கொண்டிருக்கிறோம். இந்த நாட்டிற்குத் தேவைப்படுகின்ற உணவுப் பொருளை எல்லாம் தயாரித்து கொடுத்துக்கொண்டிருக்கின்ற பெரு விவசாயியாக இருந்தாலும் சரி, சிறு விவசாயியாக இருந்தாலும் சரி உழவுத் தொழிலுக்கு நாம் முக்கியத்துவத்தைக் கொடுக்க வேண்டும். பெரு விவசாயியாக இருந்தாலுங்கூட அவன் நிச்சயமாக எப்படிப் பார்த்தாலும் லாபம் ஈட்டப்போவதில்லை. செலவு செய்த பணத்தைக்கூட எடுக்க முடியாமல் தத்தளித்துக்கொண்டிருக்கின்ற அந்தப் பெரு விவசாயிகளுக்கும் சேர்த்து நீங்கள் இலவச மின்சாரத்தை கொடுக்க......

*பிற்பகல் 12-35*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய விவசாயிகளுக்கும் இலவசமாக மின்சாரம் வழங்கவேண்டும் என்று கேட்பதில் எந்த நியாயமும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் 100 ஏக்கர் நிலம் வைத்திருக்கிறார் என்று சொன்னால் அவர் நிச்சயமாக பெரிய விவசாயிதான். அப்போதும் அவரால் லாபம் அடையமுடியவில்லை என்று சொன்னால், அவர் திறமையாக விவசாயம் செய்யவில்லை என்பதைத்தான் இது காட்டுகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி).*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை ஞானசேகரன், 100 ஏக்கர் நிலம் வைத்திருக்கிறீர்கள் என்று சொன்னால் உச்சவரம்பு சட்டத்தை எல்லாம் நீங்கள் ஏமாற்றியிருக்கிறீர்கள் என்று அர்த்தம்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவுதான் திறமையாகச் செய்தாலுங்கூட லாபம் ஈட்ட முடியவில்லை. ஏனென்றால் கரும்புக்கு ஆயிரம் ரூபாய் டன்னுக்கு கொடுக்கிறேன் என்று சொன்னீர்கள். அதைக் கொடுக்கவில்லை. அதிலே, சுத்தமாக அயோக்கியத்தனம் எல்லாமே போய்விட்டது எங்களுக்கு. எந்தப் பொருளை உற்பத்தி செய்தாலும் எங்களால் எதையும் எடுக்க முடியாததால்தான் மாண்புமிகு முதலமைச்சரை நான் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் இலவச மின்சாரத்தை தயவுசெய்து இரத்து செய்ய இருக்கக்கூடிய நிலைமை மாற்றி எல்லோருக்கும் இப்போது இலவசமாக மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று நான் பணிவோடு மீண்டும் ஒருமுறை கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்களுடைய வினாவிற்கு பதில் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு ஞானசேகரன் அவர்களைப் போன்ற பெரும் பணக்கார, 100 ஏக்கருக்கு மேல் வைத்திருக்கிற விவசாயிகளுக்குக்கூட ஹார்ஸ் பவர் ஒன்றுக்கு 250 ரூபாய் என குறைத்திருக்கிற பெருமை உழவர் பெருமக்களை ஒட்டுமொத்தமாகக் காக்கவேண்டுமென்ற உன்னதக் கொள்கையுடைய புரட்சித் தலைவி அவர்களுக்கு உண்டு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இந்தியாவிலேயே 250 ரூபாய்தான் மின் கட்டணத்திற்கு என மிகக் குறைந்த அளவிற்கு ஒரு ஹார்ஸ் பவருக்கு 250 ரூபாய் என்று நிர்ணயித்து இருப்பது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், முடியுங்கள், கடைசி வாக்கியத்தோடு முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சாத்தான்குளம் தேர்தலிலே ஜெயித்ததையே சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். இவ்வளவு சீர்திருத்தங்களை நீங்கள் முன்னாடியே செய்திருந்தீர்களென்றால், என்ன ரிசல்ட் என்று தெரிந்திருக்கும். தமிழ்நாட்டிலே இப்பொழுது வேண்டுமானால் நீங்கள் இன்றைய தேதியில் வேண்டுமானால் மக்களுடைய கருத்துக் கணிப்பை எடுப்பீர்கள் என்று சொன்னால், இராஜினாமா செய்தீர்கள் என்றால் நிச்சயமாக உங்களால் வரவே முடியாது. காரணம் என்ன? தமிழ்நாட்டு

மக்கள் வயிறு எரிந்துகொண்டிருக்கிறார்கள். நீங்கள் எத்தனை வரிகளைப் போடவேண்டுமோ அத்தனை வரிகளையும் இப்போது போட்டு, பெட்ரோலுக்கு வரி, டீசலுக்கு வரி, அதற்கு அப்புறம் பசுமை வரி, வண்டி புகைவிட்டால் அதற்கும் வரி......

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் சொன்ன கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். உங்களுடைய பதவியை நீங்கள் இராஜினாமா செய்துவிட்டு, இப்போதே தேர்தலை சந்தித்தால் அண்ணா தி.மு.க. அதை எதிர்கொள்வதற்குத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் ஒட்டுமொத்தமாக சட்டசபையை கலைத்துவிட்டு தேர்தலுக்கு நில்லுங்கள். யார் வெற்றி பெறப்போகிறார்கள் என்பதைப் பார்த்துவிடுவோம்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாக சட்டமன்றத்தை கலைக்க வேண்டிய அவசியம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு இல்லை. ஏனென்றால் நடந்து முடிந்த எல்லா இடைத்தேர்தல்களிலும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்மீது மக்கள் முழுமையான நம்பிக்கை வைத்து வாக்கு அளித்து இருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னொன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். எல்லாக் கட்சிகளையும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி கண்டு இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தை வெற்றி கண்டிருக்கிறது. பாட்டாளி மக்கள் கட்சியை வெற்றி கண்டிருக்கிறது. முஸ்லீம் லீக்கை வெற்றி கண்டிருக்கிறது. ஒன்றுபட்ட காங்கிரசையும் வெற்றி கண்டிருக்கிறது. எனவே, முழுமையான நம்பிக்கையை மக்கள் டாக்டர் புரட்சித் தலைவி மீது வைத்திருக்கிறார்கள். உங்கள் சவாலை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். நீங்கள் வேண்டுமானால்இராஜினாமா செய்யுங்கள். கண்டிப்பாக களத்திலே நாங்கள் சந்திக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர். (குறுக்கீடு).

2003 மார்ச் 24]

**திரு. சி. ஞானசேகரன்:** நான் பதில் சொல்லி விடுகிறேனே.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் ஒட்டுமொத்தமாக இராஜினாமா செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். கடந்த சட்டமன்றப் பொதுத் தேர்தலில் யார் முதலமைச்சராக வரவேண்டுமென்று கேள்வி எழுந்தபோது எதிர்க்கட்சிகள் மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்தலில் நிற்க முடியாத ஒரு துரோகச் சூழ்நிலையை உருவாக்கியும், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் முதலமைச்சராக வரவேண்டுமென்று நாட்டு மக்கள் நல்ல தீர்ப்பினை வழங்கினார்கள் (மேசையைத் தட்டும் ஒலி). அந்த நல்ல தீர்ப்பின் அடிப்படையில் மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றைக்கு ஒரு நல்ல ஆட்சியைத் தமிழகத்திற்கு தந்துகொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் ஞானசேகரன் அவர்கள், அவர்களுடைய தொகுதியில், அவர் தன்னுடைய சட்டமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துவிட்டு நின்றால், உறுதியாக அவர் வெல்ல முடியாது என்பது தெரியும். ஆகவேதான் ஒட்டுமொத்தமாக அனைத்து உறுப்பினர்களையும் இந்த வம்புக்கு இழுக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கின்றேன். (குறுக்கீடு)

பிற்பகல் 12-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, முடிந்தது உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே,.......

**திரு. சி. ஞானசேகரன்:** திரு. மணி, கொஞ்சம் இருங்கள், நான் பதில் சொல்லிவிடுகிறேன்......

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே,........

**திரு. சி. ஞானசேகரன்:** மணி கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடு) நான் பதில் சொல்கிறேன், கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடு) மணி கொஞ்சம் இருங்கள். ஒரு நிமிஷம் இருங்கள். மணி கொஞ்சம் நேரம் உட்காருங்கள்.

கொஞ்சம் உட்காருங்கள். (குறுக்கீடு) My point, I am not yielding, I am not yielding. ஒரு நிமிஷம், ஒரேயொரு நிமிஷம் நான் சொல்கிறேன், இருங்கள் (குறுக்கீடு) நான் சவால் விடுகிறேன், கொஞ்சம் இருங்கள், கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரிலே நிச்சயமாக இராஜினாமா செய்துவிட்டு நான் நிற்கத் தயார். ஆனால் எல்லா இடங்களிலேயும் நீங்கள்—தனியாக ஒரு தொகுதி என்றால் ** எல்லா இடங்களிலேயும் வாருங்கள் நிற்கலாம். (குறுக்கீடு) எல்லா இடங்களுக்கும் வாருங்கள், நிற்கலாம். அதை விட்டுவிட்டு நீங்கள் இப்படி புரட்சிகரமாக, திடீரென்று இலவச மின்சாரத்தை இரத்து பண்ணுவது, மின் கட்டணத்தை உயர்த்துவது என்னென்ன வரிகள் போடவேண்டுமோ அவ்வளவையும் போடுவது, இவ்வளவு எல்லாம் நீங்கள் போட்டதற்குப் பிறகும்கூட மக்கள் உங்கள் பக்கம் இருப்பார்கள் என்று நம்புவது நிச்சயமாக நீங்கள் கண்ணாடி வீட்டில் இருந்துகொண்டு கல் எறிவதற்குச் சமம். இதை எல்லாம் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஆகவே, நீங்கள் தயவுசெய்து இலவச மின்சாரத்தை மீண்டும் தமிழ்நாட்டு மக்களுக்குக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடிந்தது, திரு. கே. ஆறுமுகம். (குறுக்கீடு) திரு. கே. ஆறுமுகம் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொன்ன ** என்பதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. சி. ஞானசேகரன்:** அது எப்படித் தவறாகிவிடும்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** தவறு.

**திரு. சி. ஞானசேகரன்:** தேர்தல் ஆணையம் சொல்லியிருக்கிறதே?.....

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குற்றச்சாட்டைச் சொன்னால் ஆதாரத்தோடு சொல்ல வேண்டும். போகிற போக்கிலே புழுதி வாரித் தூற்றக்கூடாது. (குறுக்கீடுகள்) திரு. ஆறுமுகம், பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** ** என்றுதான் சொன்னார். (குறுக்கீடுகள்)
**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அது நீக்கப்படுகிறது. திரு. மணி.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் கமிஷன் ** தொடர்பாக எதுவும் கூறவில்லை. ** (குறுக்கீடுகள்) அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது நீக்கப்பட்டுவிட்டது. அது தொடர்பாகப் பேசப்பட்டவையும் நீக்கப்பட்டுவிட்டன. திரு. கே. ஆறுமுகம். (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம், உங்கள் கட்சியிலிருந்துதான் பேசுகிறார். திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** எங்கள் கட்சித் தலைவர் பேசுகிறார், ஒரு நிமிஷம்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்றத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான அணி வெற்றி பெற்றதற்குக் காரணம், தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய பிரதான கட்சிகளெல்லாம் ஒன்றாகச் சேர்ந்த காரணத்தினால்தான் கிடைத்த வெற்றியே தவிர, ஒரு தனிக் கட்சிக்குக் கிடைத்த.....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரேயொரு பதிலைச் சொல்ல விரும்புகிறேன். 2001-ல் சட்டமன்றப் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றபோது ஒரு கூட்டணி அமைத்தோம். அந்தக் கூட்டணியில் கூட்டணிக் கட்சிகளுக்கென்று சில இடங்களை ஒதுக்கினோம். அந்தக் கூட்டணிக் கட்சிகளெல்லாம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினால்தான் வெற்றி

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

பெற்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதை நிரூபிக்கின்ற வகையில் அந்தக் கட்சிகளுடைய உறுப்பினர்கள் இயற்கை எய்தியபோது இடைத் தேர்தல்கள் வந்தபோதெல்லாம்,—இப்போது கூட்டணி முறிந்துவிட்டது. அதன் பின்னர்—அந்த எதிர்க்கட்சிகள் முன்பு வெற்றி பெற்ற அதே தொகுதியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றிருக்கிறது என்று சொன்னால், மக்கள் யாருக்காக அப்போது வாக்களித்தார்கள், யாருக்கு ஆதரவு அளிக்கிறார்கள் என்பதை நிரூபித்துவிட்டோம். பாட்டாளி மக்கள் கட்சி நின்று வென்ற அச்சரப்பாக்கம் தொகுதியிலேயே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இடைத் தேர்தலில் நின்று வெற்றி பெற்றிருக்கிறது என்று சொன்னால் (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் எங்களுக்கு வாக்களித்தார்களா, அவர்களுக்கு அளித்தார்களா என்பதை நிரூபித்துக் காட்டிவிட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம். (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைத் தேர்தல் வெற்றிபற்றிச் சொன்னார்கள். பொதுத் தேர்தலுக்கும், இடைத் தேர்தலுக்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. ஆளும் கட்சி என்ற (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. அதுமட்டும் அல்ல, இன்னொன்றையும் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) சத்தம் போடக்கூடாது. சொல்வதைக் கேளுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-லே பாட்டாளி மக்கள் கட்சி தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டது. அப்படித் தனித்துப் போட்டியிட்ட நேரத்தில் 42 தொகுதிகளிலே, 32,000, 28,000, 25,000 என்கிற அளவில் வாக்குகளைப் பெற்றிருக்கிறது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, மணி.....

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, இல்லை. நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. மணி இப்போது ஆராய்ச்சிக்கு நேரம் இல்லை. இப்போது இந்த ஆராய்ச்சிக்கு நேரம் இல்லை. திரு. ஆறுமுகம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், ஆறுமுகம் பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அதே நாங்கள் போட்டியிட்ட தொகுதிகளிலே அ.தி.மு.க. வெற்றி பெற்றிருக்கிறது. இத்தனை கட்சிகளும் சேர்ந்து

அ.தி.மு.க.-வுக்கு வாக்களித்து, வெற்றி வித்தியாசம் எவ்வளவு என்று சொன்னால் அந்தத் தொகுதிகளிலே 10,000, 12,000, 15,000 ஓட்டுகள்தான். அப்போது, யாருடைய வாக்குகளினாலே அந்தத் தொகுதிகளிலே வெற்றி பெற்றது? பாட்டாளி மக்கள் கட்சி இல்லாமல் அந்தத் தொகுதிகளிலே வெற்றி பெறவில்லை. ஆகவே, இவர்கள் வெற்றி பெறவில்லை என்றால் அண்ணா தி.மு.க. ஆட்சியும் இல்லை. இதுதான் உண்மை. நிதர்சனமான உண்மை. (குறுக்கீடுகள்) ஆகவே, ஓட்டு மொத்தமாக எல்லா கட்சிகளும் சேர்ந்து வெற்றி பெற்றிருக்கிறது என்பதை மறைக்கக் கூடாது. உண்மை நிலைமை அதுதான். இதை மாற்றிவிட்டு எல்லோரையும் புண்படுத்தும்படி சொல்வது என்பது நிச்சயமாக ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல.

பிற்பகல் 12-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இது நிதிநிலை அறிக்கையின் மீது விவாதம். திரு. கே. ஆறுமுகம். (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பேசி முடித்தவுடன் நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் மனசாட்சியை சற்று ஒதுக்கி வைத்து விட்டு இங்கு உரையாற்றிக் கொண்டிருக்கிறார். கடந்த சட்டமன்ற பொதுத் தேர்தலில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையிலான கூட்டணியை ஏற்று போட்டியிடுகின்றபோது பெரியகுளம் தொகுதியில் போட்டியிட்ட நானோ, பெண்ணாகரம் தொகுதியில் போட்டியிட்ட மாண்புமிகு உறுப்பினர் மணியோ அவரவர்களுக்காக ஓட்டு கேட்கவேயில்லை. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக வர வேண்டும், அதற்காக எங்களுக்கு ஓட்டு போடுங்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்றுதான் நாங்கள் எல்லாம் ஓட்டு கேட்டோமேயொழிய, அவர் உட்பட எங்கள் கூட்டணியில் இருந்த அத்தனைப் பேரும் எங்களுக்காக ஓட்டு கேட்கவில்லை. ஆகவே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக வர வேண்டும் என்று தான் கடந்த சட்டமன்றப் பொதுத் தேர்தலில் மகத்தான தீர்ப்பினை மக்கள் அளித்தார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** 1996 தேர்தலிலே பாட்டாளி மக்கள் கட்சியிலே நான்கு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் 4 தொகுதிகளில் தான் வெற்றி பெற்றிருக்கிறது. கூட்டணியினுடைய வெற்றி தானே தவிர வேறு அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம், கொஞ்சம் நிதிநிலை அறிக்கைக்கு வாருங்கள். திரு கே. ஆறுமுகம்.

* **திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 2003-2004 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கும், இந்த நிதிநிலை அறிக்கையின் மீது தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக பேச வாய்ப்பளித்த மக்கள் காவலர் டாக்டர் ஐயா அவர்களுக்கும் இந்தச் சமயத்திலே நன்றி கூறிக் கொள்கிறேன். இங்கே 2003-2001 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. ஒட்டுமொத்த வருவாய் ரூ. 22,665.90 கோடி எனவும், மொத்த வருவாய்ச் செலவு ரூ. 26,599.37 கோடி எனவும், நிகர பற்றாக்குறை ரூ. 3,933.47 கோடி எனவும், அதிலே ஒட்டுமொத்தப் பற்றாக்குறை ரூ. 1,295.15 கோடி எனவும், இதிலே புதிய வரிகள் மீது 430 கோடி ரூபாய் புதிய வருமானம் கிடைக்கும் எனவும் இங்கே நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு முன்பாக, சில தினங்களுக்கு முன்பாக மின்வாரிய ஆணையம் ஓர் அறிவிப்பை வெளியிட்டது. அதன் மீது, தமிழக மக்கள் மீது 1,400 கோடி ரூபாய் கூடுதலாகக் கட்டணம் வசூலிக்கப்பட்டிருக்கிறது. அதை சேர்த்துப் பார்த்தால் 1,830 கோடி ரூபாய் கட்டணமாக இன்றைக்கு தமிழக மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திலே சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1979-லே 14 இலட்சம் குடும்பங்களுக்கு ஒரு விளக்கு திட்டத்தைக் கொடுத்தார்கள் இலவசமாக.

அதுமட்டுமல்லாமல் 1989-லே தமிழகத்திலே இருக்கிற ஒட்டுமொத்த விவசாயிகள் 15,63,000 பேர்கள் இலவச மின்சாரத்தை அனுபவித்து வந்தார்கள். ஆனால் மின் வாரிய ஆணையம் இன்றைக்கு அதற்குக் கட்டணம் வசூலிப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஒரு பழமொழியை எங்களுடைய மக்கள் காவலர் டாக்டர் ஐயா அவர்கள் சொல்வார்கள். விவசாயத்தைப் பற்றிச் சொல்கிறபோது, 100 ரூபாய் முதலீடு போட்டு 1 ரூபாய் இலாபம் பெறுவது விவசாயமாக இந்த நாட்டிலே இருந்து கொண்டிருக்கிறது. விவசாயி அவ்வளவு இளிச்சவாயனாக இருக்கிறான்

என்று மக்கள் காவலர் டாக்டர் ஐயா அவர்கள், செல்கிற இடங்களில் மேடைகளிலே எல்லாம் சொல்வார்கள். அந்த அளவிற்கு இன்றைக்கு கேட்பாரற்று கிடக்கிறது விவசாயம். விவசாயி எந்தப் பொருளை உற்பத்தி செய்கிறாரோ அந்தப் பொருளை—ஒரு வெண்டைக்காய் உற்பத்தி செய்தால்—நான் விற்கிற பொருள் இன்றைக்கு 2 ரூபாய் என்று சொல்ல முடியாது. ஆனால் சாதாரணமான.....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய உறுப்பினர் மாண்புமிகு ஆறுமுகம் அவர்கள் தொடர்ந்து தவறான தகவலை அவைக்குத் தந்து கொண்டிருக்கிறார். சிறு, குறு விவசாயிகளுக்கு புரட்சித் தலைவர் காலத்தில் எப்படி அவர்களுக்கு இலவச மின்சாரம் தரப்பட்டதோ அப்படியே இலவச மின்சாரத்தை புரட்சித் தலைவர் அவர்களுடைய வாரிசாக இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களும் தந்து கொண்டிருக்கிறார்கள். இதுதான் உண்மை. குடிசைகளுக்கு எப்படி இலவச மின்சாரம் அந்தக் காலத்தில் தரப்பட்டதோ, அதைப் போலவே இலவச மின்சாரத்தை குடிசைகளுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்து கொண்டிருக்கிறார்கள். தவறானத் தகவலை அவைக்கு மாண்புமிகு உறுப்பினர் தர வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தவறான தகவலைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக இதைச் சொல்லவில்லை. எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், இன்றைக்குக்கூட நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். 3 எச்.பி.க்கு என்றால் *1,000* ரூபாய் நாங்கள் இனாமாகத் தருகிறோம். 5 எச்.பி.க்கு என்றால் *1,250* ரூபாய் தருகிறோம். ஒரு வீட்டுக்கு ஒரு விளக்கு என்ற திட்டத்திற்கு *100* ரூபாய் ஒரு வருடத்திற்குத் தருகிறோம் என்று சொல்கிறார்கள்.

*பிற்பகல் 12-50*

உங்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நாட்டிலே மூன்றில் ஒரு பங்கு மக்கள் இன்றைக்கு வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள். ஆனால் விவசாயிகளுக்கும், விவசாயக் கூலி மக்களுக்கும் *30* கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது என்று சொல்கிறபோது, வெறும் *14* இலட்சம் குடும்பங்களுக்கு மட்டும்தான் இங்கே கொடுக்கப்படுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கிறபோது சொன்னார்கள். என்ன சொன்னார்கள் என்று சொன்னால், அதற்காக விண்ணப்பம் கொடுத்தவர்களுக்கு மட்டும்தான் நாங்கள் இந்த அரிசியைக் கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போதுகூட, இந்த மின் கட்டணச் சலுகையைப் பெறுவதற்காக—1,000 ரூபாய், 1,250 ரூபாய், 100 ரூபாய் என்று அந்தக் கட்டணத்தைப் பெறுவதற்காக—விவசாயிகளும், விவசாய மக்களும், அடித்தளத்தில் வாழ்கிற வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்கிற மக்களும் ஏதாவது அரசுக்கு விண்ணப்பம் தர வேண்டுமா என்பதை இந்தச் சமயத்தில் நான் கேட்டுக்கொள்ள விழைகிறேன். அதுமட்டுமல்லாமல் இந்த விவசாய மக்கள்.....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30 கிலோ அரிசியைப் பொறுத்தவரைக்கும் தேவைப்பட்டவர்கள் பதிவு செய்தார்கள்; தேவையென்று பதிவு செய்தவர்கள் அத்தனை பேருக்கும் புரட்சித் தலைவி அவர்கள் தந்துவிட்டார்கள். பதிவு செய்யாதவர்கள் எல்லாம் 30 கிலோ அரிசி தேவையில்லை என்று கருதியவர்கள் என்றுதான் பொருள் கொள்ள வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், இந்த விவசாயிகளைப் பொறுத்தவரைக்கும், 2 1/2 ஏக்கர் நஞ்சை, 5 ஏக்கர் Ordinary land என்று நிலம் வைத்திருக்கிறவர்கள் குறு நில விவசாயிகள், சிறு விவசாயிகள் என்று கணக்கெடுப்பு ஏற்கெனவே Revenue record-ல் இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் அவர்களுக்கு இலவச மின்சாரம் தரப்படுகிறது.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, விண்ணப்பங்கள் கொடுத்த அத்தனை பேருக்கும் அரிசி வழங்கப்பட்டதாக இங்கே சொன்னார்கள். ஆனால் இது உண்மையான நிலை அல்ல. விண்ணப்பங்கள் பல இலட்சக்கணக்கான பேர்களுக்கு வழங்கப்பட்டு கொடுத்திருக்கிறார்கள். அதிலே அந்தந்த ஊர் பஞ்சாயத்துத் தலைவரும், முன்சீபும் கையொப்பமிட்டுக் கொடுத்த ஒரு சிலருக்கு மட்டும்தான் வழங்கியிருக்கிறார்கள். அதைத்தான் இங்கே இதற்கு முன்பாக பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர், நண்பர் மணி அவர்கள் பேசும்போது ஒரு ஊருக்கு 50 பேர் என்று சொன்னாரேயொழிய, மாற்றுக் கருத்து அல்ல. கொடுத்தவர்கள் அத்தனை பேருக்கும் அரிசி வழங்கப்படவில்லை.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான தகவலை மாமன்ற உறுப்பினர் சொல்லிக்கொண்டிருக்கிறார். தமிழகத்தில் வறட்சி என்று சொன்ன உடனேயே எந்த ஒரு தனி மனிதருக்கும் உணவு இல்லை என்ற நிலை இங்கே இருக்கக் கூடாது என்பதற்காக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் வேலையில்லாத அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு இலவசமாக உணவு அளிக்கின்ற திட்டத்தினை நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தினார்கள். அப்போது 3 முறை கால நீட்டிப்பு செய்து, யார், யாருக்கு உணவு தேவைப்படுகின்றதோ, தேவைப்படுகிறவர்கள் மனுக்கள் அளித்து, அதை வாங்கிக்கொள்ளலாம் என்றும், அதன்படி அவர்களுக்குத் தனியாக கூப்பன்கள் வழங்கப்பட்டு, உணவு வழங்கப்பட்டு வந்தது. பல்வேறு பகுதிகளிலிருந்தும், இந்த மாமன்றத்திலும்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணவுக்குப் பதிலாக அரிசியாகத் தாருங்கள் என்ற வேண்டுகோள் விடுத்தார்கள். அந்த அடிப்படையிலேதான் யார், யாருக்கு உணவு வழங்கப்பட்டதோ, உணவு வாங்கினார்களோ, அவர்களுக்கு மீண்டும் கால நீட்டிப்பு செய்யப்பட்டு, இந்த இலவசமாக அரிசி வழங்கும் திட்டத்தின்கீழ் அரிசி வழங்கப்பட்டிருக்கிறது. யார், யார் உணவு வாங்கிச் சாப்பிட்டார்களோ, உண்டார்களோ அவர்களுக்கு, அனைவருக்கும் இந்த இலவச அரிசி வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு வழங்கப்பட்டது தலைக்கு—per head. ஆனால் அரிசி வழங்கப்படுவது குடும்பத்திற்கு. 150 பேர் உணவை ஒரு மையத்திலே சாப்பிட்டார்கள் என்று சொன்னால், ஒரு குடும்பத்திற்கு 3 பேர் வீதம் 50 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இதிலே ஒன்றும் தவறு இல்லை. இந்தக் கணக்கு சரியாகத்தான் இருக்கிறதே தவிர எண்ணிக்கை குறைந்துவிட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் மணி வேதனைப்பட வேண்டியதில்லை. இது குடும்பத்திற்கு, அது தலைக்கு.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, உண்மை நிலவரம் என்னவென்று சொன்னால், அரசு உத்தரவிட்டது, அங்கு இருக்கக்கூடிய ஊராட்சி மன்றத் தலைவர்கள், கிராம நிருவாக அலுவலர்கள் மூலமாக டோக்கன் வழங்கப்பட வேண்டுமென்று பணித்திருந்தீர்கள். அதை ஏற்றுக்கொண்டு அவர்கள் வழங்கியது 50 நபர்களுக்கு மட்டும்தான். ஆனால் விண்ணப்பங்கள் பெற்றது 500 பேர்,

600 பேர், பெரிய கிராமங்களில் 1200 பேர்கூட—என்னிடம் விவரம் இருக்கிறது; நான் வேண்டுமானால் கொடுக்கிறேன்—500 பேர், 600 பேர் விண்ணப்பித்து இருந்தாலுங்கூட, அங்கே வழங்கப்பட்டது என்பது 50 நபர்களுக்குத்தான். பிறகு கால நீட்டிப்பு கொடுத்த காரணத்தினாலே ஒரு சிலர் மனு பெற்றார்கள். ஆனால் முழுக்க முழுக்க அங்கே ஊராட்சி மன்றத் தலைவராலும், கிராம நிருவாக அலுவலராலும் மக்கள் புறக்கணிக்கப்பட்டார்கள் என்பதுதான் உண்மை.

பிற்பகல் 12-55

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கு தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். நான் கூறியது தவறான தகவல் என்று அமைச்சர் எந்தவிதமான புள்ளிவிவரங்களை வைத்துக் கொண்டும் சொல்லவில்லை. நான் சொல்கிறேன், என்னுடைய பகுதியிலே அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். பூலாம்பட்டி, நிதி அமைச்சருக்கே தெரியும். சித்தூர் மற்றும் எடப்பாடியிலே, பல்வேறு பகுதிகளிலே பல்லாயிரக்கணக்கான மனுக்கள் அளிக்கப்பட்டன. விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டன. அத்தனையும் நிராகரிக்கப்பட்டுவிட்டன. இதுதான் உண்மை. எனவே, சாப்பிட்ட அத்தனை பேருக்கும் அரிசி வழங்குகிறோம் என்று சொல்லுங்கள். ஆனால் விண்ணப்பம் கொடுத்தவர்கள் அத்தனை பேருக்கும் அரிசி வழங்கப்படவில்லை என்பதை ஒத்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான், இரண்டும் ஒன்றுதான். திரு. கணேசன், இரண்டு பேர் சொல்வதும் உண்மைதான். சாப்பிட்டவர்கள் அத்தனை பேருக்கும் அரிசி வழங்கப்படுகிறது. அதைத்தான் அமைச்சர் சொன்னார். மாண்புமிகு திரு. ஆறுமுகம். 3 மணித் துளி.

**திரு. கே. ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, இதிலே நான் பேசியது,

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது என்னுடைய தொகுதியிலே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. திரு. ஹேமச்சந்திரன், இது தொடர்பான பிரச்சினை ஏதாவது இருந்தால், எழுதிக் கொடுங்கள். திரு. ஆறுமுகம் பேசி முடியுங்கள்.

GISLATIVE ... ALONE TRIUMPHS

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள், இப்பொழுது சொல்லியிருக்கிற அந்தக் கருத்துக்கு, ஏழை எளிய விவசாயிகள் அனைவரும் விண்ணப்பிக்கத் தேவையில்லை. தாங்களாகவே முன்வந்து தருகிறோம் என்று அரசாங்கம் அறிவித்ததற்கு, இந்த சபையிலே நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். வீடுகளுக்காக 23 சதவிகிதம்....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன கூறுகிறார் என்றே புரியவில்லை. சிறு விவசாயிகள், குறு நில விவசாயிகள் ரெவின்யூ கணக்குப்படி யார் யார் இருக்கிறார்களோ, அவர்களுக்கெல்லாம் இலவச மின்சாரம். அதைத்தான் நான் சொன்னேன்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் குறிப்பிட்டேன். விவசாயிகள் அனைவரும் மனு செய்யவில்லை; மனு செய்யாவிட்டாலும், இலவச மின்சாரம் - அந்தத் தொகை கிடைக்கும் என்று சொன்னேன். அதில் தவறு இல்லையே? மேலும் வீடுகளுக்காக வழங்கப்பட்ட மின்சாரக் கட்டணம் இப்பொழுது கூடுதலாக 23 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல் வீட்டு உபயோகத்திற்கான வரி வேறு 5 சதவிகிதம் இப்பொழுது போடப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் இந்த அரசாங்கம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கூறுகிறேன்.

இப்பொழுது தமிழகத்தில், சென்னை நீங்கலாக இருக்கிற 28 மாவட்டங்களும் வறட்சி மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதிலே, 341.92 கோடி ரூபாய் வேலைவாய்ப்புக்காக வழங்கப்படுகிறது என்று அறிவித்திருக்கிறீர்கள்.

அதுமட்டுமல்லாமல், இந்த நாட்டிலே முதன்மைத் தொழிலாக இருக்கிற விவசாயிகளினுடைய தொழில்கள் இன்றைக்கு 62 சதவிகிதத்தை எட்டியிருக்கிறது. அந்தத் தொழில்கள் எல்லாம் இன்றைக்கு நலிவுற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தத் தொழில்களை மேம்படுத்த வேண்டுமென்றால், இந்தியாவிலே முதன்முதலாக தமிழகத்திலேயாவது முதன்மைத் தொழிலுக்கு என தனியாக தமிழக அரசாங்கம் ஒரு பட்ஜெட்டை வெளியிட முன்வர வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் கோரிக்கையாக முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதோடு முடித்து விடுங்கள். திரு. ஆறுமுகம் கடைசி வாக்கியத்தோடு முடியுங்கள்.

TRUTH ALONE TRIUMPHS

**திரு. கே. ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, குறுக்கீடு மட்டும் 10 நிமிடம் போய்விட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. உங்கள் தலைவர்களும் பேசியிருக்கிறார்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** அதேபோன்று இன்றைக்கு வறட்சி மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டிருக்கிற பகுதியிலே அந்த அனாவாரி சான்றிதழ் கொடுத்தால்தான் நாங்கள் நில வரியை வாங்கமாட்டோம் என்று அங்கே இருக்கிற அதிகாரிகள் சொல்கிறார்கள். தமிழக அரசாங்கம் உடனடியாக அனாவாரி சட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், தமிழகத்திலே இருக்கிற 352 ஊராட்சிகளிலே வெறும் 33 பகுதிகளில் மட்டுமே அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஓராண்டு காலத்திலே 385 திட்டங்கள் முடிக்கப்பட வேண்டும். மாறாக இந்த ஆண்டு இரண்டாவதாக.....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 280-க்கு மேற்பட்ட, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் மனுக்கள் பெறப்பட்டு, குறைந்தபட்சம் ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு rural based industry என்ற முறையிலே 280-க்கும் மேற்பட்ட தொழில்கள் தற்பொழுது ஆய்வில் இருக்கின்றன. விரைவிலே இது நடைமுறைக்கு வர இருக்கின்றது. ஏற்கெனவே தொடங்கப்பட்ட தொழில்கள் 33 என்பதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியென்றால், உடனடியாக 385 வட்டங்களுக்கும் அதற்கான அரசாணை வெளியிடப்படுமா என்று இந்த சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று எம்.எல்.ஏ.-க்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற நிதி 50 சதவிகிதம் மட்டும்தான் இப்போது பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

அதற்கும் மேலாக இன்னொன்றை சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் மூடு விழா காணுகின்ற ஒரு நிலைமைக்கு வந்திருக்கின்றன. ஏனென்று சொன்னால், இன்றைக்கு வீடு கட்டும் கூட்டுறவு சங்கத்திலே கடன் வாங்குகிறவர்கள் 11 சதவிகிதம் வட்டியைக் கொடுக்க வேண்டும். ஆனால் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே கடன் கேட்டால் 8.5 சதவிகிதம் வட்டிக்கு வீடு கட்டுபவர்களுக்குக் கடன் கொடுக்கத் தயாராக

இருக்கிறார்கள். இதனால் ஆயிரக்கணக்கான அந்தத் தொழிலாளர்களும், அந்த வீடுகட்டும் சங்கமும் மூடப்படும் நிலைமைக்கு வந்துவிடுமோ என்ற பயம் இருக்கிறது.

பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி. (குறுக்கீடு)

**திரு. கே. ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, 10 நிமிடங்கள் குறுக்கீடுகளாகவே போய்விட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கட்சித் தலைவர்களே பேசிவிட்டார்கள். (சிரிப்பு)

**திரு. கே. ஆறுமுகம்:** அதுமட்டுமல்ல, 160.00 கோடி ரூபாய்க்கான திட்டங்களை தமிழக அரசாங்கம் இரத்து செய்திருக்கிறது. அது ஏழைகளுக்கு மட்டுமல்ல, அது விவசாய, நெசவாளர் தொழிலாளர்களுக்கும் மிகவும் பாதிப்பாக இருக்கிறது. எனவே, 160.00 கோடி ரூபாய் அளவிற்கு இலவச வேட்டி, சேலைகளை நெய்கிற அந்த் நெசவாளர்களுக்கு மீண்டும் வாய்ப்பளிக்கிற வகையிலே இலவச வேட்டி, சேலை திட்டத்தை மீண்டும் தமிழக அரசாங்கம் கொண்டுவர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அத்தோடு முடித்துக் கொள்ளுங்கள். செல்வி க. பாலபாரதி.

**திரு. கே. ஆறுமுகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, 2 நிமிடங்களிலே முடித்துவிடுகிறேன். கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். பால் விலை கூடிவிட்டது. ஆனால் பால் உற்பத்தி செய்கின்றவர்களுக்குக் கொடுக்கும் விலை குறைந்துகொண்டே போகிறது. இதற்கெல்லாம் இந்த அரசாங்கம் என்ன செய்யப் போகிறது என்பதைக் கேட்டு, என்னுடைய தொகுதிப் பிரச்சினைக்கு வந்துவிடுகிறேன்.

என்னுடைய தொகுதி செங்கல்பட்டு தொகுதி. செங்கல்பட்டு தொகுதியிலே இருக்கிற செங்கல்பட்டு நகர மன்றம் இன்றைக்குச் செயல்படாத நகர மன்றமாகப் போய்விட்டது. அங்கே இருக்கிற தலைவருக்கும், அங்கேயிருக்கிற கவுன்சிலர்களும் பிரச்சினைகளால்......

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொகுதிப் பிரச்சினையை எல்லாம் எழுதிக் கொடுங்கள். (குறுக்கீடு) தொகுதிப் பிரச்சினையை எழுதிக் கொடுங்கள். செல்வி க. பாலபாரதி. (குறுக்கீடு)

**திரு. கே. ஆறுமுகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இது என்னுடைய தொகுதிப் பிரச்சினை. அது இயங்காமல் இருக்கிறது. அந்த நிர்வாகத்தை இயக்குவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், மாமல்லபுரம்.....

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். ஆறுமுகம், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம். என்னுடைய தொகுதிப் பிரச்சினை. அரசியல் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரேயொரு மணித் துளியில் முடித்துவிடுங்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே மாமல்லபுரம் - இ.சி.ஆர். சாலை இருக்கிறது. அதிலேயிருந்து மாமல்லபுரம், திருக்கழுக்குன்றம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், அரக்கோணம், திருத்தணி வரையிலே இந்தச் சாலைகளை இணைக்கும் 3 தேசிய நெடுஞ்சாலைகள் இருக்கின்றன. இ.சி.ஆர். சாலை இருக்கிறது. அதையெல்லாம் இணைப்பதற்கு ஒரு தேசிய நெடுஞ்சாலை உருவாக்க வேண்டும். அந்தப் பகுதியிலே புராதனக் கோயில்கள் இருக்கின்றன. அதிகமான சுற்றுலாத் தலங்கள் இருக்கின்றன. எனவே, அதை தேசிய நெடுஞ்சாலையாக ஆக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, செங்கல்பட்டு தொகுதி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி, (குறுக்கீடு) போதும், போதும்.

***செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையை நான் வாசித்தேன். இந்த மாநில அரசுக்கும், அரசினுடைய பொருளாதார நிலைமைக்கும் இருக்கக்கூடிய

நெருக்கடியைப் படித்துப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், தமிழகத்து மக்களுடைய பொருளாதார நிலைமை என்ன என்பதை மீண்டும் உங்கள் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். வரலாறு காணாத வறட்சியில் தமிழகம் சிக்கித் தவிக்கிறது. குடிதண்ணீர்ப் பிரச்சினை பெரும் பிரச்சினையாக இருக்கிறது. திண்டுக்கல்லில் 15 நாட்களுக்கு ஒரு முறைதான் தண்ணீர் கிடைக்கிறது. ஒரு குடம் தண்ணீர் 3.00 ரூபாய்க்கு விற்பனை ஆகிறது. பல்வேறு மாவட்டத் தலைநகரங்களில் பெண்கள் தண்ணீர் வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய சூழ்நிலையிலே இந்தத் தண்ணீருக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி என்பது மிகவும் குறைந்த அளவிலே இருக்கிறது. இதில்.....

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் நகரில் கடுமையான குடிநீர்ப் பிரச்சினை இருக்கிறது என்பதை உணர்ந்த தாயுள்ளம் கொண்ட புரட்சித்தலைவி அம்மா அவர்கள், இப்போது சமீபத்திலே திண்டுக்கல் மாவட்டத்திற்கு வருகை புரிந்து, நலத் திட்ட உதவிகளை வழங்கி சிறப்பு செய்த அந்த நிகழ்ச்சியில் திண்டுக்கல் மாவட்ட மக்கள், திண்டுக்கல் நகர மற்றும் கிராமப்புற மக்கள் எல்லாம் பெரிதும் பயன்பெறுகின்ற வகையிலே ஏறத்தாழ 91.50 கோடி ரூபாய் செலவிலே காவிரிக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டி, குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வினைக் கண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகளுக்குக் குடிப்பதற்குக்கூட தண்ணீர் இல்லை; தீவனமும் இல்லை. 10 ஆயிரம் ரூபாய்க்கு விற்ற மாடு, இன்றைக்கு கிராமத்தில் அடிமாட்டு விலைக்கு ஆயிரம் ரூபாய்க்குத்தான் விற்பனையாகிறது. இந்தக் கால்நடைகளைப் பராமரிப்பதற்குக்கூட பொருளாதார நிலைமை என்பது இல்லை. இந்த 1 மணி, 4 நிமிடங்களுக்கு நீங்கள் கிராமத்திற்குச் சென்றால் ஒரு ஆளைக் கூட காணமுடியாது. எல்லோரும் ஊரை விட்டு, மூட்டை முடிச்சுகளோடு அண்டை மாநிலங்களுக்கு வேலைக்காக சென்று இருக்கிறார்கள். மண்ணிலே போட்ட மக்காச்சோளம் வீடு வந்து சேரவில்லை. தப்பித் தவறி தக்காளி போட்டு விற்பனை செய்தால், ஒரு கிலோ ஒரு ரூபாய்க்கு ஒட்டன்சத்திரத்திலே விற்பனை ஆனது. ஆகவே, தமிழகத்தில் இருக்கக்கூடிய இந்தக் கடுமையான நிலைமை,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

நெருக்கடி என்பது அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிற நெருக்கடியைக் காட்டிலும் தீவிரமாக இருக்கிறது என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1-05*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட சூழ்நிலையிலுங்கூட, ஒரு ரூபாய் நாற்பது காசுக்கு தக்காளி விற்கக்கூடிய அளவிற்கு விலைவாசி குறைந்திருக்கிறது எங்கள் ஆட்சியிலே என்று எங்களைப் பாராட்டுவதற்கு நன்றி. (சிரிப்பு)

**செல்வி க. பாலபாரதி:** ஆனால் விவசாயிகளுக்கு, சிறு விவசாயிகள், குறு விவசாயிகளின் நலனுக்காக இந்த அரசாங்கம் இருக்கிறது என்று கொஞ்ச நேரத்திற்கு முன்னாடிதான், நீங்கள் அக்கறையோடு பேசினீர்கள். அப்படியிருக்க ஒரு கிலோ தக்காளியை ஒரு ரூபாய்க்கு விற்றால் விவசாயி எப்படி பிழைக்க முடியும்? ஆகவே இப்படிப்பட்ட நிலை இருக்கிறது என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவ்வளவுதான்.

இந்த நெருக்கடிதான், நிதி அமைச்சகத்திலிருந்து தொடங்கி, நீதிமன்றம் வரை நீடித்திருக்கிறது. கட்டடச்சு இல்லை, பணியாளர்கள் இல்லை, இந்த நீதிமன்றத்திற்கு, இப்படி நெருக்கடிகள் தொடர்ந்தால், நீதிமன்றத்தை நிச்சயமாக தனியார் துறைக்குக் கொடுக்கவே முடியாது. ஆகவே, இருக்கக்கூடிய நிதி நெருக்கடியிலிருந்து....

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையிலே இதுபற்றி நான் விவரமாக வினா பதிலிலே சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றதற்கு முன்பாக 140 கோடி ரூபாய் அளவிற்கு ஒதுக்கீடு இருந்தது. கடுமையான நிதி நெருக்கடி இருக்கின்ற சூழ்நிலையிலுங்கூட இந்த ஒரு வருட காலத்தில் 30 கோடி ரூபாய் அளவிற்கு, அதிகமான அளவிற்கு நீதித் துறைக்கு தாய் உள்ளத்தோடு நிதி வழங்கியிருக்கிறார்கள். எனவே, எல்லா துறைகளிலும் நாம் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டியிருக்கிறது. அரசினுடைய அந்தக் கஷ்டத்தையும் நாம் எதிர்நோக்க வேண்டும். ஒரே நாளில் எல்லாவற்றையும் செய்துவிட வேண்டுமென்பது நிச்சயமாக முடியாது.

படிப்படியாக நிச்சயமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்து தருவார்கள் என்கிற அந்தப் பதிலை காலையிலே சொல்லியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடு)*

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பாலபாரதி அவர்கள் சொல்லி, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடிய பதில் காலையிலேயும் சொன்னார். இப்போதும் சொன்னார். இது நாங்களாக கேட்கின்ற கேள்வி அல்ல. நீதித் துறையிலே நீதிபதி சொல்கிறார். அவருடைய Registrar (General) கடிதம் அனுப்புகிறார்கள். நீங்கள் சொன்ன பதிலை அதற்குப் பதிலாக அனுப்பியிருந்தால் இந்தப் பிரச்சினை நீதிமன்றத்திற்கு வந்திருக்காது. ஆகவே அது ரிட்டாக ஏற்றுக்கொண்டதற்கு பிறகு....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நிதிநிலை என்ன, மைய அரசு 540 கோடி ரூபாய் சென்ற ஆண்டு தராமல் விட்டுவிட்டது. இந்த ஆண்டு 275 கோடி ரூபாய்க்கு மேல் தராமல் விட்டுவிட்டது. நிதிநிலையைப் பொறுத்தவரைக்கும் எல்லா விவரங்களையும் உயர் நீதிமன்றத்திற்கு மிகத் தெளிவாகப் பல்முறை மாநில அரசு தெளிவுபடுத்தியிருக்கிறது. எனவே, நீதிமன்றத்திற்கு இதைத் தெளிவுபடுத்தாமல் நாங்கள் இல்லை. இருக்கின்ற பணத்தை வைத்துக்கொண்டு எப்படி ஒவ்வொரு துறைக்கும் அதைச் சிக்கனமாக செலவு செய்ய வேண்டுமென்ற முறையில் அது பகிர்ந்தளித்து செலவு செய்யப்படுகிறது. அதே நோக்கில் நீதித் துறையினுடைய கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதற்கு மாநில அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. *(குறுக்கீடு)*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**செல்வி க. பாலபாரதி:** என்னுடைய நேரம் போய்விடுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் உங்கள் தலைவர்தான்.

**செல்வி க. பாலபாரதி:** இவ்வளவு வறட்சியான காலத்திலும் கூட குடிநீர்க் குழாய் வரியை இரண்டு மடங்காக இந்தக் காலத்திலே அரசு உயர்த்தி இருக்கிறது. குடிப்பதற்குத் தண்ணீரே இல்லாத வறட்சியில், குடிநீர்க் குழாய் வரியை உயர்த்தினால் எப்படி கட்ட முடியும் என்பது தெரியவில்லை. இதுமட்டுமல்ல, இதே வறட்சியான காலத்தில் ரேஷன்

கடை அரிசியின் விலை ரூ.3.50-லிருந்து 6 ரூபாய்க்கு அடுத்த 10 கிலோவிற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது.

ஆண்டிப்பட்டி தேர்தலிலே வெற்றி பெற்றீர்கள். மகிழ்ச்சி அடைவதற்குள் அரிசி விலையை உயர்த்தியிருக்கிறீர்கள். சாத்தான் குளத்தில் வெற்றி பெறுகிறீர்கள். மகிழ்ச்சியடைவதற்குள் அடுத்த மின் கட்டண உயர்வுக்குப் போய்விடுகிறீர்கள். ஆகவே இந்த மகிழ்ச்சியைப் பொது மக்கள் கொண்டாடக்கூட முடியாமல் இந்த விலைவாசியை உயர்த்தியதால், மக்கள் திணறிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை தயவு செய்து உங்களது கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, வறட்சியிலே பயிர்க் கடன் தள்ளுபடி செய்யப்படவில்லை. கூட்டுறவுக் கடன் தள்ளுபடி செய்ய வேண்டும். அதுபோன்ற நடவடிக்கைகளை நீங்கள் எடுத்தால்தான் முடியும். இந்த நோத்தில் மத்திய அரசாங்கம் ஒரு மாநில அரசாங்கத்தினுடைய வறட்சியைப் பற்றி சிறிதளவுகூட கவலையே படவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்முடைய அரசு ஊழியர்கள் போராடியபோது, 'எஸ்மா' சட்டம், மற்றதெல்லாம் கூறினார்கள். தொலைக்காட்சியைப் பார்த்த குழந்தைகள்கூட, அழுகிற குழந்தைகள்கூட பயத்தோடு நிறுத்திக்கொண்டது. அந்த அளவிற்குக் கறாராக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகிறார்கள். ஆனால் இந்த மத்திய அரசாங்கம் நம்முடைய மாநில அரசு 3,527 கோடி ரூபாய் கேட்டால், இன்றைக்கு அறிவித்திருக்கிறார்கள் 240 கோடி ரூபாய் தருகிறோம் என்று. வறட்சியில் இரண்டு முறை தாக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிவிப்புகூட நாடாளுமன்றத் தேர்தலுக்காக சொல்லப்படுகிறதே தவிர உண்மையிலேயே தமிழக மக்கள் மீது கொண்ட அக்கறையினால் மத்திய அரசாங்கம் செய்யவில்லை. இது என்ன பிச்சை கேட்கும் நிலைமைக்கு மாநில அரசைத் தள்ளுவதா? ஒரு காலத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். கையேந்திபவன்களாக மாநில அரசு இருக்க முடியுமா? இது நம்முடைய உரிமை. இந்த உரிமையில் 6.5 கோடி டன் உணவுப் பொருள்கள் இந்திய உணவுப் பொருள் கழகத்தின் கிட்டங்கியிலே இருக்கிறது. 1200 ஊழியர்கள், எலிகளிடமிருந்து பாதுகாப்பதற்காக, பராமரிக்கிறார்கள். இப்போது அந்த 1200 ஊழியர்களை விரட்டிவிட்டு எலிகள் சாப்பிட்டுவிட்டுப்போனால் பாவாயில்லை என்று பாதுகாத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

இங்கே தமிழ்நாட்டு மக்கள், கடைகோடி கிராமத்து மக்கள், அரசுக்குக் கெட்ட பெயர் வரும், வராது என்று அவர்களுக்குத் தெரியாது. **ஆகவே, உணவுப் பொருட்களை, அரிசியை, கோதுமையை...

*பிற்பகல் 1-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. பாலபாரதி, நீங்கள் சொல்வது அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது. அப்படி எந்தச் செய்தியும் கிடையாது. எதையாவது சொல்வதாக இருந்தால் ஆதாரத்தோடு சொல்லுங்கள். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. வேறு ஏதாவது பேசுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. **எங்கே சாப்பிட்டார்கள், அவர்கள்? (குறுக்கீடுகள்)

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதுபோன்ற செய்திகள் பத்திரிகைகளில் வெளிவந்து இதற்கு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் தெளிவாக விளக்கம் அளித்திருக்கிறார். பசி, பட்டினியால் யாரும் தமிழகத்தில் **சாப்பிடவில்லை. குறிப்பிட்ட மாவட்டத்தில், குறிப்பிட்ட பகுதிகளில், குறிப்பிட்ட ஜாதியினர் அவர்களுடைய பரம்பரை வழக்கமாக **சாப்பிடுகிறார்கள். அவர்கள் அதை விரும்பிச் சாப்பிடுகிறார்களே தவிர, பசி, பட்டினியால் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான செய்தியைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எதிர்க்கட்சியிலே இருக்கிறவர்கள் ஒரு கருத்தைச் சொல்வார்கள். **சாப்பிடுகிறார்கள்; பட்டினிச் சாவு நடக்கிறது என்று சொல்லலாம்; அதற்கு உரிமையுண்டு. ஆனால், அப்படி அல்ல; ** யாரும் சாப்பிடவில்லை; பட்டினியால் சாகவில்லை என்று சொல்வதற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கு உரிமையுண்டு.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், ஒரு குற்றச்சாட்டு, அரசாங்கத்தின்மீது ஒரு குற்றச்சாட்டு சொல்கிறபோது, (குறுக்கீடு) இல்லை, இல்லை. எதுவாக இருந்தாலும் கூறலாம்; எதுவாக இருந்தாலும் மறுக்கலாம் என்றால் சரிவராது.

**திரு. துரைமுருகன்:** மறுக்கலாம். அந்த உரிமை மாண்புமிகு அமைச்சர்களுக்கு உண்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. துரைமுருகன்:** அந்த அவைக் குறிப்பிலிருந்து எடுப்பது என்பது, இந்த மன்றத்திற்கு ஒவ்வாத ஒன்றைச் சொன்னால்தான், புறம்பாக இருந்தால்தான் எடுக்க வேண்டுமே தவிர, கருத்தைச் சொல்வது கூடாது என்பது எதிர்க்கட்சியினுடைய குரல்வளையை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குற்றச்சாட்டு, ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டு எதுவாக இருந்தாலும், அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கலாம். பாலபாரதி, மேலே பேசுங்கள்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்ட அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, National Geographical Channel பார்க்க நேரிட்டது. அந்த Channel-லிலே, அவர்கள் shoot செய்தது, விவசாயிகள் ** சாப்பிடுவது போன்று, shoot செய்திருக்கிறார்கள். வேண்டுமானால் உறுப்பினர்களுக்குக்கூட நான் போட்டுக் காண்பிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாலபாரதி, இரண்டு மணித் துளிகளுக்குள் பேசி முடியுங்கள்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் 6.5 கோடி டன் இந்திய உணவுப் பொருட்களை பாதுகாத்து வைத்துக் கொண்டிருக்கிறது. மாநில அரசாங்கம் கேட்டால் 1.25 இலட்சம் டன்கள்தான் கொடுக்கிறார்கள். மாநில அரசாங்கம் எதற்காக அவர்களை மிரட்டி வாங்கவில்லை? ஒரு மத்திய

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

TRUTH ALONE TRIUMPHS

அரசாங்கத்திடம் இதற்குமேல் வறட்சியைப் பற்றி என்னதான் சொல்லமுடியும்? மத்தியில் பாரதிய ஜனதா கட்சி ஆளுங்கட்சியாக இருக்கிறது. அரிசி விலை உயர்ந்தால் அவர்கள்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் மத்திய அரசுக்கு ஆதரவு தரவில்லை. மத்திய அரசு தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கும் கூட்டணி ஆட்சியில் நாங்கள் இடம்பெறவில்லை. நாங்கள் எப்படி மத்திய அரசை மிரட்ட முடியும்? எந்த அடிப்படையில் மிரட்ட முடியும்? அப்படி மிரட்டக் கூடியவர்கள் எதிர்க்கட்சியினர், பிரதான எதிர்க்கட்சியினர். அவர்கள் அதைச் செய்யவில்லை. அவர்களிடம் அல்லவா இந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும்?

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால், மத்திய பட்ஜெட்டைக் கண்டித்து, இங்கு இருக்கக்கூடிய ஆளுங்கட்சி அண்ணா திராவிட முன்னேற்றக் கழக எம்.பி.க்கள் அங்கு ஏன் வெளிநடப்புச் செய்யவில்லை? இங்கு வறட்சிக்காக, அரிசி விலை உயர்ந்தால் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம். அங்கு ஆளும் அரசாங்கத்தை எதிர்த்து ஏன் வெளிநடப்புச் செய்யவில்லை? இதன் காரணமாக, மத்தியிலே இருக்கக்கூடிய பி.ஜே.பி. அரசாங்கம் மிக எளிமையாகத் தப்பித்துக் கொள்கிறார்கள். மின் கட்டண உயர்வுக்கு அவர்களும் உலக வங்கியும் காரணம். ஆனால், அவர்கள் முந்தைய நாள் எங்களோடு சேர்ந்து வெளிநடப்புப் பண்ணுகிறார்கள். ஆகவே, பி.ஜே.பி.-க்கு நான்கு முகங்கள் இருக்கின்றன. பிரம்மாவைப் போன்று நான்கு முகங்கள் இருக்கின்றன. உலக வங்கிக் கொள்கையா, பொடாவை ஆதரிக்க வேண்டுமா, திராவிட முன்னேற்றக் கழகம் பக்கத்திலே, மதமாற்றத் தடைச் சட்டத்தை ஆதரிக்க வேண்டுமா, ஆளுங்கட்சி பக்கம். விலைவாசி உயர்வுக்கு எதிர்க்க வேண்டுமா, எங்களோடு சேர்ந்து கொள்கிறது. இப்படியாக, பி.ஜே.பி. ஒரு ஆளுங்கட்சியாக இருக்கிறது. வறட்சிக்காக, நம்முடைய மாநிலத்திற்குத் தேவையான நிதியைக் கொடுக்காமல் இருப்பதை நாம் அனுமதிக்கக் கூடாது. இதிலே, ஒன்று மட்டும்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநடப்பு செய்தால்தான் நம்முடைய எதிர்ப்பைத் தெரிவிக்க முடியும் என்ற நிலை இல்லை. மத்திய அரசு அண்மையில் அறிவித்த மத்திய பட்ஜெட்டில் யூரியா விலையை உயர்த்தி அறிவித்தார்கள். அதற்கு நான் கண்டனம் தெரிவித்தேன்; எதிர்ப்பு தெரிவித்தேன். பிறகு மத்திய அரசு அந்த விலை உயர்வை வாபஸ் பெற்றது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**செல்வி க. பாலபாரதி:** அப்படியானால், இதற்கும் நீங்கள் செய்ய வேண்டும். அதைத்தான் நாங்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசாங்கத்தை எப்படியாவது நாம் நிர்ப்பந்தப்படுத்தி நமக்குத் தேவையான அரிசி என்பது — பிச்சை அல்ல; கையேந்துவது அல்ல. அது நம்முடைய கடமை. மக்கள் உயிர் வாழ்வதற்கான உரிமை. அந்த உரிமையைப் பெறுவதற்கு ஆளுங்கட்சியாக இருக்கக்கூடிய நீங்களும், எதிர்க்கட்சி — அங்கே ஆளுங்கட்சியாக இருக்கக்கூடிய திராவிட இயக்கக் கட்சிகளும் ஒன்றுபட்ட போராட்டத்தை நடத்தவில்லை என்று சொன்னால் மக்களுக்கு நாம் பதிலே சொல்ல முடியாது.

*பிற்பகல் 1-15*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் இங்கே தமிழகத்தில் ஆளுங்கட்சியாக இருக்கிறோம். எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழகத்திற்காக நாடாளுமன்றத்தில் என்னென்ன கோரிக்கைகள் எழுப்ப வேண்டுமோ அவ்வப்போது எழுப்பிக் கொண்டுதான் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி சார்ந்திருக்கின்ற கட்சியின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களவையிலும் இருக்கிறார்கள். ராஜ்ய சபையிலும் இருக்கிறார்கள். அவர்கள் ஏன் தமிழகத்திற்காக அங்கே குரல் எழுப்பவில்லை?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அவர்கள் ஒட்டுமொத்தமாக இந்திய நாட்டிற்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

**செல்வி க. பாலபாரதி:** திரு. மோகன் அவர்கள் குரல் எழுப்பியிருக்கிறார்கள். மேற்கு வங்க மாநிலத்தினுடைய பாராளுமன்ற உறுப்பினர்களும் குரல் எழுப்பியிருக்கிறார்கள்.

2003 மார்ச் 24]

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் ஒட்டுமொத்த இந்தியாவிற்காக குரல் எழுப்புகிறார்கள் என்கிறார். ஏன் தமிழ்நாடு இந்தியாவில் இல்லையா?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களைத் தாக்குகின்ற திட்டங்களை நீங்கள் அமல்படுத்துகின்றீர்கள். ஆனால், எங்களுடைய கட்சி ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற மாநிலங்களிலே அது அமல்படுத்தப்படவில்லையென்பது முதலமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாலபாரதி, உரையை முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்ததாக, இவ்வளவு சிரமங்களுக்கு மத்தியில் உணவு மானியத்தை இந்த பட்ஜெட்டிலே 640 கோடி ரூபாயை வெட்டிவிட்டால் அரிசியை எப்படி வாங்க முடியும்? ஆகவே, இந்த உணவு மானியத்தை வெட்டிவிட்டு மத்தியிலே அரசாங்கம் காலையிலே பெட்ரோல் விலையைக் கூட்டுகிறார்கள். மாலையிலே டீசல் விலை, மதியத்திலே மண்ணெண்ணெய் விலை, இரவிலே சமையல் காஸ் விலையைக் கூட்டுகிறார்கள். நீங்கள், உங்கள் பங்குக்கு பெட்ரோல், டீசலுக்கு வரி விலையை உயர்த்தியிருப்பது, அடிப்படைத் தொழில்களைப் பாதிக்கும். (மணியடிக்கப்பெற்றது). ஒரேயொரு நிமிடம் பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம். ஆகவே, அதன் காரணமாக...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய நிதிநிலை அறிக்கையிலேயே, 5-வது பக்கத்தில் மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதியின் கேள்விக்கு விடையளித்திருக்கிறோம். பயிர்ச் சேதம் மற்றும் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகள் பற்றிய மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றது. மைய அரசினால் அறிவிக்கப்படும் நிவாரண உதவி வகைப்பாடு மற்றும் தொகையின் அளவு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கான நிவாரணத் திட்டம் விரைவில் அறிவிக்கப்படும் என்றுதான் அதில் கூறியிருக்கிறோம். ஆகவே, நிலைமைகள் ஆய்வில் இருக்கின்றன. தேவைப்பட்டால் மேலும் உதவிகளை விவசாயிகளுக்கு அறிவிப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**செல்வி க. பாலபாரதி:** நன்றி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு வறட்சிக்கிடையிலே மின்சாரக் கட்டணத்தை இப்போது, கூட்ட வேண்டுமா? அதுதான் பிரச்சினையே, நீங்கள் கூட்டுவது மற்றது எல்லாம் இருக்கட்டும். ஆனால், ஒரு கடுமையான கோடைக்காலம், வறட்சியான காலத்தில் ஒழுங்குமுறை ஆணையமாம் மின்சாரத்திற்கு...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றை இந்த நேரத்தில் இந்த மாமன்றத்திற்கும், தமிழகத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்தியாவிலுள்ள எந்த மாநிலத்திலேயும், இன்றைக்கு மின்சாரம் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படுவதில்லை. ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு கட்டணம் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால் மற்ற எல்லா மாநிலங்களிலும் சிறு விவசாயிகளும் சரி, குறு விவசாயிகளும் சரி, செலுத்த வேண்டிய கட்டணத்தை அவர்களாகவே, தங்கள் சொந்தப் பணத்திலிருந்து செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் விவசாயிகள் செலுத்த வேண்டிய கட்டணத்தை மாநில அரசு செலுத்தவில்லை. அதை தமிழ்நாடு மட்டும்தான் செய்து கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டில்தான் இந்தியாவிலேயே மின்சாரத்திற்கான கட்டணம் மிகவும் குறைவாக இருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழ்நாட்டில் மீட்டர் கட்டணம் ஒரு யூனிட்டிற்கு 20 பைசா. ஒரு நிலைக் கட்டணம் என்றால், ஒரு ஹெச்.பி.க்கு ஓர் ஆண்டிற்கு 250 ரூபாய். ஆகவே, அண்டை மாநிலமான ஆந்திரா மாநிலத்தை எடுத்துக்கொண்டால், 2500 யூனிட்டுகள் வரை ஆண்டிற்கு யூனிட்டுக்கு 20 பைசா. 2500 யூனிட்களுக்கு மேல் பயன்படுத்தினால் ஒரு யூனிட்டுக்கு 50 பைசா. ஒரே நிலைக் கட்டணம் 3 ஹெச்.பி. வரை 275 ரூபாய். 3-லிருந்து 5 ஹெச்.பி. வரை 425 ரூபாய். 5-லிருந்து 10 ஹெச்.பி. வரை 525 ரூபாய். 10 ஹெச்.பி.க்கு மேல் 625 ரூபாய். மேற்கு வங்காளத்தை எடுத்துக்கொண்டோமானால், கம்யூனிஸ்ட் நண்பர்கள் ஆளுகின்ற ஒரு மாநிலம். அங்கே 5 ஹெச்.பி.க்கு மேல் 50 ஹெச்.பி. வரை 173 பைசா. 5 ஹெச்.பி. வரை மின் இணைப்பு ஒன்றிற்கு பிப்ரவரி மாதங்களில்

பிற்பகல் 1-20

795 ரூபாய். ஜூனிலிருந்து செப்டம்பர் மாதங்களில் 187 ரூபாய்; அக்டோபர் முதல் ஜனவரி மாதங்களில் 270 ரூபாய். இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம். குஜராத் மாநிலத்தை எடுத்துக்கொண்டால், நிலைக் கட்டணம் எச்.பி. ஒன்றிற்கு ஆண்டிற்கு 1,680 ரூபாய். மகாராஷ்டிரத்தில் 1,440 ரூபாய். இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம். ஆகவே, இதன்படி பார்த்தால்கூட, விவசாயிகளுக்கு மிகவும் குறைவான மின்சாரக் கட்டணம் விதிக்கப்பட்டுள்ளது தமிழ்நாட்டில் மட்டும்தான்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாலபாரதி போதும். அடுத்து, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.... (குறுக்கீடு)

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாலபாரதி நீங்கள் முடித்துவிட்டீர்கள். திரு. சிவபுண்ணியம் பேசட்டும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு முக்கியமான விஷயம், மாண்புமிகு உறுப்பினருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்போது விதிக்கப்பட்டிருக்கின்ற மின்சாரக் கட்டணங்கள் எல்லாம் செப்டம்பர் மாதம் முதல்தான் அமலுக்கு வரும் என்பதை ஏற்கெனவே தெளிவுபடுத்தியிருக்கிறோம். இந்த வறட்சி நேரத்தில், இந்த மின்சாரக் கட்டணங்கள் வசூலிக்கப்படமாட்டாது (மேசையைத் தட்டும் ஒலி) செப்டம்பரில், South-west monsoon-தென்மேற்குப் பருவமழை பெய்த பிறகுதான் இந்தக் கட்டணங்கள் வசூலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாலபாரதி, நீங்கள் முடித்துவிட்டீர்கள். சிவபுண்ணியம், பேசுங்கள்.

**செல்வி க. பாலபாரதி:** வறட்சி தீரும் வரை, இந்த மின் கட்டணம் இருக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. சிவபுண்ணியம்.

**திரு. கே.சி. கருணாகரன்:** உறுப்பினர் பேசி முடிக்கிறார்கள். பேசி முடிக்கிறார்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மைக் வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாலபாரதி, நீங்கள் முடித்துவிட்டீர்கள். (குறுக்கீடு) திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கான வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின்மீதான விவாதத்திலே பங்கேற்ற மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் போதுமான அளவு நேரத்தை ஒதுக்கித் தந்திருக்கிறீர்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், எனக்கும் கொஞ்சம் நேரத்தை அதிகமாக ஒதுக்கித் தரவேண்டுமாய் முன்னதாகவே உங்களிடம் விண்ணப்பித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கொஞ்சம் கூடுதலாக 10 நிமிடம் பொறுத்தருள வேண்டும்.

இந்த பட்ஜெட்டை, நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மூன்றாவது முறையாக இங்கே சமர்ப்பித்து இருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய பாராட்டு. நான்காவது முறையாகவும் அவர்கள் பட்ஜெட்டைத் தாக்கல் செய்ய வேண்டும்; ஆனால், இதுபோன்ற பட்ஜெட்டைத் தாக்கல் செய்ய வேண்டாம் என்று அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மிகப் பெரிய அளவிலே, தமிழகத்தைப் பாதிக்கிற பட்ஜெட்டை, உங்களுடைய மூன்றாவது பட்ஜெட்டின் மூலமாக தாக்கல் செய்துவிட்டீர்களே என்பதுதான் வேதனையாக இருக்கிறது. உங்களைப் பாராட்டத் தோன்றுகிறது; ஆனால், இதிலே இருக்கிற ஷரத்துக்களைப் பார்க்கிறபோது, பாராட்ட மனம் இல்லாமல் இருக்கிறது என்பதுதான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்தாக இருக்கிறது என்று நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, வறட்சி நிவாரணத்தைப் பொறுத்தவரையில் இங்கே சொன்னீர்கள். மத்திய அரசு, நேற்றையதினம் கூடி முடிவெடுத்து, *258* கோடி ரூபாய் அறிவித்திருக்கிறது. நாம் கேட்டதோ, ஏராளமான நிதியைக் கேட்டோம். *9* இலட்சம் டன் அரிசியைக் கேட்டோம். அரிசி இல்லை என்று மறுத்துவிட்டார்கள். மத்திய அரசாங்கம், இந்த நிலைக்குக் கொடுக்காததற்கு உரிய காரணங்களைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கிறபோது, அதிலே கிடைத்திருக்கிற உண்மை என்னவென்றால், தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிற வறட்சி நிலைமைகளை முறையாக, சரியாக மதிப்பிட்டு, உரிய முறையிலே, சொல்லவேண்டிய வழிகளிலே, சொல்ல வேண்டிய செய்திகளை, மத்திய அரசாங்கத்திற்குச் சொல்லாததனுடைய விளைவு, நமக்கு நிதிப் பகிர்வைக் குறைத்துவிட்டார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு, இங்குள்ள வறட்சி நிலைமைகளைப் பற்றி, எப்படியெல்லாம் சொல்ல வேண்டுமோ அப்படிச் சொன்னோம். இரண்டு முறை மகஜர்களைக் கொடுத்தோம். இரண்டு முறை மத்திய அரசு அங்கே இருந்து ஆய்வுக் குழுவை அனுப்பியது. மத்திய அரசின் அதிகாரிகள் இரண்டு முறை இங்கே வந்து தமிழ்நாட்டின் வறட்சிப் பகுதிகளையெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு, ஆய்வறிக்கை அளித்திருக்கிறார்கள். அதன் பின்னரும்கூட, மத்திய அரசு இவ்வளவுதான் அறிவித்திருக்கிறது என்ற செய்தி, இப்போதுதான் கிடைத்து இருக்கிறது. எங்களுக்கே இது அதிர்ச்சியாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னதுபோல, நமக்கு, முதல்வருக்கு மட்டுமல்ல; தமிழகத்திற்கே மிகப் பெரிய அதிர்ச்சி. காரணம், வறட்சியின் கொடுமையால், அதிர்ச்சி ஏற்பட்டது.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், போகிற போக்கிலேயெல்லாம் இப்படிப் புழுதிவாரி தூற்றக் கூடாது. அவைக் குறிப்பிலிருந்து அந்த வாக்கியம் நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) இல்லை, இல்லை. அதுவெல்லாம் வேண்டாம். (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** **என்றுதானே சொன்னார்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, இந்தமாதிரி நளிமாகப் பேசுகிற கலையிலே, திராவிட இயக்கத்தைச் சார்ந்த நாங்கள், ரொம்ப வல்லவர்கள். இந்தமாதிரி வேண்டாம். (குறுக்கீடு) அது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, பேரவைத் தலைவர் அவர்களே, நான் பட்டினிச் சாவு என்று குறிப்பிடவில்லை. **(குறுக்கீடு)

*பிற்பகல் 1-25*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை ஆளுநர் உரைக்கான சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெற்றபோதே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் போன்றவர்கள், இதுபோன்ற குற்றச்சாட்டுகளைச் சொல்லி, பல மணி நேரம், அதற்கெல்லாம் அரசு விளக்கமளித்து, பல மணி நேரம், இந்தப் பிரச்சினைகள் எல்லாம் இங்கே விவாதிக்கப்பட்டன. ஆகவே, மீண்டும் அவையின் நேரத்தை இதற்காக வீணாக்குவது முறையல்ல என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்; தமிழ்நாட்டில் கடந்த ஆண்டில் வறட்சியினால் ஏற்பட்ட பட்டினியாலோ, அதிர்ச்சியாலோ யாரும் சாகவில்லை; இயற்கைக் காரணங்களால்தான் பலர் இறந்து இருக்கிறார்கள். அது எப்போதும் நடைபெறுகின்ற ஒன்று என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசட்டும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள் என்று சொன்னால்,**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) நிதிநிலை அறிக்கைக்கு வாருங்கள்; (குறுக்கீடு) இல்லை, ஏற்கெனவே பேசினதையே மறுபடியும் பேசினால் எப்படி?

**திரு. வை. சிவபுண்ணியம்:** **

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே பேசி அதெல்லாம் நீக்கப்பட்டுவிட்டது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெற்றபோதே ஒட்டுமொத்தமாக 13 பேர் இறந்து இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்தேன். எதிர்கட்சிகள்கூட 12 பேர் என்று சொன்னபோது, 13 பேர் இறந்து இருக்கிறார்கள் என்ற விவரத்தை நான் வெளியிட்டேன். ஒவ்வொரு சாவும் எங்கே நிகழ்ந்தது, எப்படி, நிகழ்ந்தது என்று மிகவும் விவரமாக இங்கே தெரிவித்தேன். ஆகவே, மீண்டும் இதே பிரச்சினைக்காக இப்போது பட்ஜெட் கூட்டத்தொடரின் நேரத்தை வீணாக்குவதற்கு தாங்கள் அனுமதிக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிவபுண்ணியம், நிதிநிலை அறிக்கைக்கு போங்கள். (குறுக்கீடுகள்) நிதிநிலை அறிக்கைக்குப் போங்கள்; வேறு பிரச்சினைகளைப் பேசுவதாக இருந்தால் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தச் செய்திகளைச் சொல்வது என்பது அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்துவதற்காகவோ அல்லது வேறுவிதமான காரியங்களுக்காகவோ அல்ல. நான் சொல்ல வருவது, இந்த உண்மை நிலை, காரணங்களை மத்திய அரசிடம் எடுத்துச் சொல்லியிருந்தால், நாம் கோரி இருந்த அந்த நிதியைப் பெறுவதற்குரிய வாய்ப்பு ஏராளமாகக் கிடைத்திருக்கும். உண்மையை...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய பிரதிநிதிகள் வந்தார்கள்; தஞ்சைக்கு வந்தார்கள். சட்டப் பேரவை உறுப்பினர்களும் அவர்களைச் சந்தித்து இருக்கிறார்கள். உண்மை நிலையை அவர்களும் ஆய்ந்து இருக்கிறார்கள். அரசியலுக்காக, அரசியல் ஆதாயத்திற்காக இதையே திருப்பித் திருப்பி பேசாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** அரசியல் ஆதாயத்திற்காகச் சொல்லவில்லை. தமிழகத்தின் நலனுக்காகத்தான் நான் சொல்கிறேன். 258 கோடி ரூபாயாக மத்திய அரசு குறைத்துவிட்டதே. நாம் உரிய காரணங்களை, உண்மைக் காரணங்களை, தேவையான காரணங்களை உரிய முறையிலே, உரிய வகையிலே மத்திய அரசுக்குத்

தெரிவித்திருந்தால், நாம் கணிசமாக நிதியைப் பெற்று, இன்றைக்கு இந்த வறட்சி நிலையைப் போக்குவதற்குரிய முயற்சிகளை எடுத்து இருக்க முடியும் என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். இதை திரும்பவும் பரிசீலித்து அதற்குரிய முயற்சிகளை நம்முடைய மாநில அரசு எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குறிப்பாக இன்னொரு செய்தியை நான் கேள்விப்படுகிறேன். நமது தமிழ்நாடு அரசு, உலக வங்கியிடம் 10 ஆயிரம் கோடி ரூபாய் கடனாகப் பெறுவதற்கான முயற்சியை அரசு அதிகாரிகள் மூலமாக எடுத்துக் கொண்டிருப்பதாக ஒரு செய்தியை அறிகிறேன். இப்படி வாங்குவதற்குரிய முயற்சியை எடுப்பதனுடைய விளைவாகத்தான், இப்போது மின் கட்டணத்தைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறோம்; மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லும்போதே சொன்னார்கள். உலக வங்கியினுடைய நிர்ப்பந்தத்தின் காரணத்தாலே சில விதிமுறைகளை விதிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்று. அதன் காரணத்தாலே விவசாயிகளுக்குக் கட்டணத்தை நாங்கள் செலுத்தி அவர்களுக்கு இலவச மின்சாரத்தைக் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். நான் மறுக்கவில்லை. ஆனால், இந்த இலவச மின்சாரத்திற்காக நீங்கள் செலுத்தப்படுகிற தொகை இருக்கிறதே, அதை எத்தனை மாதங்களுக்கு நீங்கள் செலுத்தப்போகிறீர்கள் என்பது சந்தேகத்திற்குரிய மிகப் பெரிய கேள்வி. கண்டிப்பாக உலக வங்கி இந்த ஒரு மாதம், 2 மாதத்திற்குரிய தொகையைக் கட்டுவதற்கு அனுமதித்துவிட்டு, 3-வது மாதத்திலே நிறுத்த வேண்டுமென்று உலக வங்கி சொன்னால்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு இந்தக் கட்டணத்தைச் செலுத்துவதற்கு அரசாங்கமே உதவி செய்யும் என்று அறிவித்து இருக்கிறோம். இதற்கு நாங்கள் உலக வங்கியிடம் அனுமதி பெறவில்லை; அனுமதி பெற வேண்டிய அவசியமும் இல்லை. ஆகவே, உலக வங்கி தலையிட்டு இதை நிறுத்தும் என்ற பேச்சுக்கே இடமில்லை. இந்த அரசு சொன்னபடி செய்யுமா, இல்லையா; சொன்னபடி இந்தப் பணத்தை விவசாயிகளுக்கு வழங்குமா, இல்லையா என்பதைப்பற்றி விவசாயிகளுக்குச் சந்தேகம் இல்லை. உங்களைப் போன்ற அரசியல்வாதிகளுக்குத்தான் இந்த சந்தேகம். விவசாயிகளின் மனதை நீங்கள் கெடுக்கப் பார்க்கிறீர்கள். அது நடக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சியின் கொடுமையின் காரணத்தாலே சொன்னேன். அப்படி உத்தரவாதம் அளிக்கப்படுவதை நாங்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறோம்; அது தொடரவேண்டும். நான் இப்போதும் அதைப் பதிவு செய்ய விரும்புகிறேன். இடையிலே இதிலே மாறுதல் செய்வதற்குரிய சூழ்நிலைகள் உருவாகாமல் பார்த்துக்கொள்வதற்கு அரசு தயாராக இருக்க வேண்டுமென்பது என்னுடைய பணிவான கருத்து.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் எப்படி நடத்த வேண்டுமென்று எங்களுக்குத் தெரியும்; எங்களுக்கு இந்த பாலபாடமெல்லாம் சொல்லித்தர வேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சி யாருக்கும் பாடம் சொல்லித் தருவதில்லை. ஆனால், நல்ல பாடத்தை சொல்லும், ஏற்றுக்கொண்டால் அது பலனுள்ளதாக இருக்கும் என்ற காரணத்தாலே மட்டும்தான் சொல்கிறேன்.

பிற்பகல் 1-30

அடுத்து வறட்சியின் காரணத்தால் பாதிக்கப்பட்டிருக்கிற தென்னை மரத்திற்கு உள்ள நிவாரணத்தைப்பற்றி தமிழக அரசு அறிவித்து இருக்கிறது. ஒரு மரத்திற்கு 150 ரூபாய் நிவாரணம் என்று அறிவித்தார்கள். ஆனால் கிராமப்புறங்களில் எடுக்கப்படுகிற கணக்கு போதுமானதாக இல்லை. தமிழகத்திலே ஒரு கோடி தென்னை மரங்கள் பட்டுப்போய் விட்டன, கிட்டத்தட்ட 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட மா மரங்கள் பட்டுபோய் விட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளை பேசுங்கள். பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (25-3-2003) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

# 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

10. ஆந்திரப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த தேசிய அனுமதி பெற்றுள்ள 17 சாக்கு வண்டிகள் தொடர்பாக இரண்டாம் அரையாண்டுக் கால அளவுக்கு அதாவது 1-10-1987 முதல் 31-3-1988 வரையுள்ள கால அளவிற்கு தமிழ்நாடு மாநிலத்திற்கு சேரவேண்டிய, ஆனால் வசூலிக்கப்படாத, மோட்டார் வண்டிகள் வரித்தொகை ரூ.12,750-ஐ (ரூபாய் பன்னிரெண்டாயிரத்து எழுநூற்றி ஐம்பது மட்டும்) தள்ளுபடி செய்வது குறித்து உள் (போக்குவரத்து-3) துறையின் அரசாணை (டி) எண்.775, நாள் 4-7-2002-ஆம் நாளில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974-ம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

11. உள் துறையில் உருவாகி 29-4-1970ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட II-1/2235/1970-ஆம் எண் அறிவிக்கையை 1-10-2002-ஆம் நாளன்றும், அந்நாளிலிருந்தும் ரத்து செய்வது குறித்து உள் (போக்குவரத்து-I) துறையின் 20-9-2002-ஆம் நாளிட்ட 875-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

12. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 1-10-2002-ஆம் நாளிட்ட 355-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

13. 2001-2002-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் முப்பத்தி ஏழாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

2003 மார்ச் 24]

*44. 2001-2002-ஆம் ஆண்டிற்கான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் இருபத்தி நான்காவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*45. 2001-2002-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட்டின் ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).*

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*68. 2003-2004-ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 1 முதல் 54 வரையிலான விரிவான மானியக் கோரிக்கைகள் (53 புத்தகங்கள்) (கோரிக்கை எண் 50 தவிர)*

*69. 2003-2004-ஆம் ஆண்டில் வருவாய் குறித்த விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்*

*70. 2003-2004-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை.*

*71. 2003-2004ஆம் ஆண்டிற்கான நிதி நிலைக் குறிப்பு - பகுதி 1*

*72. 2003-2004ஆம் ஆண்டிற்கான நிதி நிலைக் குறிப்பு - பகுதி - 2*

*73. 2003-2004ஆம் ஆண்டிற்கான நிதி நிலைக் குறிப்பின் இணைப்புகள்.*

*74. 2003-2004-ஆம் ஆண்டுத் திட்டம் (திட்டம்-வரவு-செலவுத் திட்ட இணைப்பு) (2003-2004-ஆம் ஆண்டு விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின் துணை வெளியீடுகள்)*

*75. 2003-2004-ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்களின் பட்டியல் (பகுதி-2 திட்டங்கள்)*

*76. 2003-2004-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையின் இணைப்புகள்*

[2003 மார்ச் 24

77. 2003-2004-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட விளக்க நூல் (தமிழ், ஆங்கிலம்)

78. 2003-2004-ஆம் ஆண்டு செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

79. 2003-2004-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை குறித்து நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. சி. பொன்னையன் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS